# வாழ்ந்து காட்டுங்கள்

முனைவர்: மு. தமிழ்க்குடிமகன்

போராளிப் பதிப்பகம்

# வாழ்ந்து காட்டுங்கள்

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
எம். ஏ., பிஎச்.டி.,
(சட்டப் பேரவை முன்னாள் தலைவர்)

வெளியீடு

போராளிப் பதிப்பகம்

புதுத்தெரு, திருவெண்காடு - 609114
சீர்காழி வட்டம்

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | ... | Vazhnthu Kattungal |
| Author | ... | Dr. Tamil Kudimahan |
| Language | ... | Tamil |
| Edition | ... | First September — 1993 |
| Copyright holder | ... | Publisher |
| Paper used | ... | 14 Kg — Cream Wove |
| Size of the Book | ... | Demmy Octavo |
| Printing types used | ... | 10. Pts |
| No. of Pages | ... | 127 + VIII |
| No. of Copies printed | ... | 1000 |
| Price | ... | Rs. 25/ |
| Printers | ... | Avvai Achukkoodam, Madras-13 |
| Binding | ... | Hard board |
| Publisher | ... | V. Gnanasekaran |
| Publication | ... | Poroli Pathippagam<br>Pudutheru<br>Thiruvengadu - 609114<br>Sirkali Tk. |



# காணிக்கை

*16—9—1884*-இல் பிறந்து, பகுத்தறிவு இயக்கம் அரும்பிய காலத்தில் அதன் வெற்றிக்கு உழைத்து, தந்தை பெரியாரின் பேரன்புக்குப் பாத்திரமாகி, சமூக நீதிக்காகவும் தன்மானப் பாதையில் தாழ்த்தப்பட்ட பிற் படுத்தப்பட்ட மக்கள் செல்லவேண்டியும் அயராது உழைத்து, 'பழங்குடி மக்களின் பாது காவலர்' என்ற பெயரெடுத்து, தொடர்ந்து சமூகப்பணி ஆற்றவேண்டும் என்பதற்காக மாவட்ட நீதிபதி பதவியையும், அமைச்சர் பதவியையும் ஏற்க மறுத்து, கடைசிவரை சுய மரியாதைக் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் கிளர்ச்சிக்காரராகவே வாழ்ந்து, 26-2-1933-இல் மறைந்த சிவகெங்கை இராமச்சந்திரனார் அவர்களுக்குக் காணிக்கை.



தமிழினத் தலைவர்

## முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்

# அணிந்துரை

"வாழ்ந்து காட்டுங்கள்" எனும் நூலின் பெயரே, ஓர் அறை கூவலாகவும் — நம்பிக்கையின் கிழக்குத் திசையாகவும் — அந்த இளம் வெளிச்சத்திற்குப் "பராக்கு" கூறும் சேவலின் எக்காளமாகவும் அமைந்துள்ளது.

நமது முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களின் உரைகள், கட்டுரைகள், திறனாய்வுகள் — இவற்றின் தொகுப்பே இந்த நூல்! நல்ல பொன்மாலை! அதிலும் புதுமணம் வீசும் பொன் மாலை! கேட்க வேண்டுமா; படிக்க! சுவைக்க! இனிய தமிழ் விருந்து தான் இந்நூல்!

மதுரை யாதவர் கல்லூரி முதல்வராக இருந்து தமிழையும்: மறவாமல் தமிழ் இன உணர்வையும் வளர்த்தவர்!

தமிழக சட்டப்பேரவைத் தலைவராக வீற்றிருந்து மக்களாட்சி மாண்புக்கும், நடுநிலை பிறழாத மரபின் மாண்புக் கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர்களில் தானும் ஒருவர் என்பதைச் செயலால் மெய்ப்பித்தவர்

இன்று தமிழக முழுதும், அவர் சார்ந்துள்ள இயக்கத்தின் இலக்கிய அணித் தலைவராகப் பொறுப்பேற்று, மேடையிலே வீசும் மெல்லிய பூங்காற்றாக வலம் வந்து கொண்டிருப்பவர்.

பட்டமளிப்பு விழா ஒன்றில் அவர் ஆற்றிய உரை, இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. அதில் என்னைக் கவர்ந்த பகுதி, வருமாறு:—

> "இளம் நண்பர்களே! பொது நல உணர்வினை நெஞ்சில் தாங்கிப் பொது வாழ்விலும் மிளிர முடியும் என்ற நம்பிக்கையோடு புறப்படுங்கள். அகவை முதிர்ந்து அலுத்துச் சலித்தவர்கள், ஆடி ஓய்ந்து அடங்கப் போகின்றவர்கள் வேண்டுமானால் நம்பிக்கை இழந்து விட்டுப் போகட்டும். உங்களைப் போன்ற இளமை வேகமும், ஓடுகின்ற பாம்பைக் காலால் மிதிக்கும் உறுதியும், குருதியோட்டமும்,

கூனிக்குறுகாத உடம்பும் படைத்தவர்கள் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? உங்கள் முன் நம்பிக்கைப் போக்கு ஒன்றே முன் நிற்கட்டும்!''

வளரும் தலைமுறைக்கு, வாழ்ந்து காட்டுங்கள் என வாழ்த்துக் கூறிக் காத்திடும் முரசமாகவே இந்தக் கருத்து வழங்கப் பட்டுள்ளது தமிழ்க்குடிமகனார் அவர்களால்!

அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிய கட்டுரை அருமை யாக அமைந்துள்ளது என்றாலும் — சில வரிகளைத் தவிர்த் திருக்கலாம் என்பதும், இக்காலக் கவிதைகளில் புதுப்பார்வை எனும் தலைப்புள்ள கட்டுரையில், "இருந்தாலும் இது கொடுமை! கொடுமை! சாவே! இரக்கமற்ற செய்கை உன் செய்கை!'' என்று கவிஞர் ஒருவர் எழுதியுள்ளதை எடுத்துக் காட்டியிருப்பது அத்துணை சிறப்புக்குரியதல்ல என்பதும், அதே கவிஞர் மிகச் சிறந்த கவிதை வரிகளால் நம்மைக் கவர்ந் திருப்பதை எடுத்துக் காட்டியிருக்கலாம் என்பதும் என் எண்ணமாகும்.

பேச்சு மேடையிலேயே தமிழ்க்குடிமகன் அவர்களிட மிருந்து சொற்கள் அருவியின் ஆலோலமாய் வருவதுண்டு; எழுத்தோவியம் என்றால் கேட்க வேண்டுமா!

எழுத்தும் பேச்சும் — இரண்டும் இணைந்த இன்பச் சுரங்க மாகவே இந்த நூல் இருக்கின்றது.

தூய தமிழ் வளர்க்க வேண்டும், பரப்பிட வேண்டுமென்ப தில் வெறும் வாயளவில் இல்லாமல் செயல் அளவிலும் வாழ்ந்து காட்டுகிற என் அன்பு இளவல் தமிழ்க்குடிமகன் "வாழ்ந்து காட்டுங்கள்!'' என்று தமிழ் வையத்து இளைஞர் களுக்கு அழைப்பு விடுத்துள்ளது மிகப் பொருத்தமான ஒன்று தானே!

அன்புள்ள

**மு. கருணாநிதி**

*30—1—1994*

# முன்னுரை

இந்நூலில் இடம்பெற்ற கட்டுரைகள் பல்வேறு சூழல்களில் எழுதப்பட்டவை. இரண்டு உரைகளும் பாரதியை முன்னிறுத்தி நிகழ்த்தப்பட்டவை. ஓர் இலக்கியவாதி என்ற உணர்வோடு மட்டும் இந்த நூலைப் படிப்பவர்களுக்குப் பல உண்மைகள் விளங்கும். பாரதியாரின் உண்மையான உணர்ச்சி, பாவேந்தர் அவர்பால் கொண்ட மதிப்பு, அண்ணாவின் மனிதநேயம், இலக்கியவாதியாகிய கலைஞர் குறளுக்குப் புத்துரை காணும் நுட்பம் எனச் செய்திகள் விரிந்து செல்கின்றன. இளங்கோ உரைத்ததை இக்காலக் கவிஞர் எப்படிப் பார்க்கிறார் என்பதையும், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதைகளின் அழகிய உள்ளடக்கத்தையும் புலப்படுத்தியுள்ளேன். ஆட்சிமொழி பற்றி நமது நிலை, எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலன் ஆகியவற்றை நடுநிலையோடு எடுத்துக் கூறியுள்ளேன். கல்வித்துறையில் பலகாலம் இருந்து, மொழியுணர்ச்சி உடையவன் என்ற பெயரை இன்றும் தக்க வைத்துக் கொண்டு சமூக சீர்திருத்தச் சிந்தனைகளோடு வாழ்பவன் கூறும் கருத்துகள் எனும் முறையில் இந்நூலைப் படிப்பார் எவரும் மனமகிழ்ந்து பாராட்டவே செய்வர்.

நூல் முழுவதையும் படித்துப் பார்த்து எங்கள் பேராசான் தலைவர் கலைஞர் அவர்கள் மிகச்சிறந்த அணிந்துரை வழங்கியுள்ளார்கள். எண்ணற்ற வேலைகட்கிடையில் என்பால் கொண்ட அன்பால் விளைந்த அந்த உரைகண்டு நெகிழ்ந்து போனேன்! தலைவர் அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

இதை வெளியிட விரும்பி ஏற்றுக்கொண்டு வெகுவிரைவில் இந்நூலைக் கொண்டு வந்துள்ளார் போரொலிப் பதிப்பக உரிமையாளர் வை. ஞானசேகரன். அவருக்கு என் பாராட்டுகள் இவ்வளவு பொறுப்புணர்ச்சியுடைய ஞானசேகரன் மெய்ப்புத். திருத்துவதில் போதிய கவனம் செலுத்தாததால் பிழைகள் நேர்ந்துள்ளன. 'கவனம்' வாழ்வின் எல்லாத் துறைகளிலும் தேவை என்பதை இதன் வாயிலாகவும் உணர்த்த வேண்டியுள்ளது.

முற்போக்குச் சிந்தனையும், நிறையப் படிக்க வேண்டும் எனும் ஆர்வமும் உடைய எவர்க்கும் இந்நூல் சிறந்த விருந்தாகும் என்பதைப் படைத்தவனாக நின்று உறுதி கூறுகிறேன்.

தமிழ்க்குடிமகன்

# பதிப்புரை

பேராசிரியர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் நாடறிந்த நாவன்மையாளர்; நானிலம் போற்றும் நல்ல தமிழ் எழுத்தாளர்; எச்சூழலிலும் தம் கருத்தைத் துணிவோடு நாட்டினர்க்குரைக்கும் நல்லறிஞர்; பழகுதற்கு இனிமை யானவர்; பண்பாளர்; தெருவெல்லாம் தமிழ்முழக்கம் தழைக்க வேண்டும் என விரும்பும் பைந்தமிழர்; தனித்தமிழ்ப்பற்றாளர்.

இச்சிறப்புக்குரியவரின் இந்நூல் 'வாழ்ந்து காட்டுவேன்', என வீரசபதம் மேற்கொள்கிறவர்களுக்கு மிகவும் பயன்படும்.

இந்நூல், இக்கால மாணவர்களுக்கு — இளைஞர்களுக்கு அறிவுரை சொல்வதோடு மட்டுமின்றி, பாரதி, பாரதிதாசன், அறிஞர் அண்ணா, கலைஞர் இவர்களைப் பற்றிய ஆய்வு நூலாகவும் திகழ்கிறது.

இவர் ஒரு அரசியல் சூழலில் இன்று, தம்மை இணைத்துக் கொண்டாலும் அதற்கு முன்னர் கல்வித் துறையோடு மிகுந்த ஈடுபாடும், பொறுப்புணர்ச்சியும் உடைய குடிமகனாகத் திகழ்ந்த காரணத்தினால்தான் இன்றைக்கும் சமூகசீர்திருத்தம், தமிழ் வளர்ச்சி, மாந்தர் முன்னேற்றம் முதலான நிலைகளில் தெளிந்த நீரோடையாகத் தம் சிந்தனையைப் பாய்ச்சமுடிகிறது. அச்சிந்தனைகளின் பெட்டகம்தான் இந்நூல்.

இந்நூலுக்கு ஒப்புவமையற்ற ஓர் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்திருக்கிறார் தலைவர் கலைஞர் அவர்கள். எங்களைப் போன்ற எளிய தொண்டர்களின் முயற்சிக்கு அவர்கள் தந்த ஊக்கமே இந்த அணிந்துரை. அவர்களுக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்புக்குரிய இந் நூலைப் போரொலிப் பதிப்பகத்தின் பத்தாம் வெளியீடாக வெளியிடுவதில் பெரிதும் பெருமை அடைகின்றோம்.

இந்நூலை அழகுற அச்சிட்டும் மேல் அட்டையைச் சிறப்புற உருவாக்கியும் தந்திருக்கிற சென்னை அவ்வை அச்சுக்கூடத்தின் உரிமையாளர் மற்றும் தொழிலாளர்களுக்கு இதயங்கனிந்த நன்றி.

— வை. ஞானசேகரன்

## உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வாழ்ந்து காட்டுங்கள் | ... | 1 |
| 2. | பார் அதிரப் பாடியவன் | ... | 14 |
| 3. | கனவிலும் கசக்கும் | ... | 31 |
| 4. | இக்காலக் கவிதைகளில் புதுப்பார்வை | ... | 36 |
| 5. | பாரதியும் பாரதிதாசனும் | ... | 46 |
| 6. | அறிஞர் அண்ணாவின் மனித நேயமும் அறிவியற் சமவுடைமையும் | ... | 54 |
| 7. | சமுதாய சீர்திருத்த காலம் | ... | 61 |
| 8. | ஆட்சி மொழி — ஒரு பார்வை | ... | 93 |
| 9. | பெண்வழிச் சேறல் — ஒருபார்வை | ... | 107 |
| 10. | பாவேந்தரின் மொழியுணர்ச்சி | ... | 116 |
| 11. | தமிழ்க்குடிமகனின் ஆதங்கம் | ... | 123 |
| 12 | பிழைத்திருத்தம் | ... | 125 |

# வாழ்ந்து காட்டுங்கள் !

பல்கலைக் கழக வேந்தர் அவர்களே !

துணைவேந்தர் அவர்களே !

ஆட்சிக்குழு, ஆட்சிப் பேரவை மற்றும் கல்விப் பேரவை உறுப்பினர்களே !

பேராசிரியப் பெருமக்களே !

மாணவ உடன் பிறப்புகளே !

கல்வி எனும் பயிர் கருகிப் போகாமல், காலங்காலமாக நீர் பாய்ச்சியும், களை அகற்றியும், வேலி அமைத்தும், உயர்ந்த தோர் பணி செய்யும் உங்கள் அனைவரையும் சந்திப்பதில், உங்களோடு கலந்து நின்று மகிழ்வதில், பெருமை கொள் கிறேன்.

மணம் செய்விக்கப்பட்டு, கணவன் வீடு சென்ற ஒரு பெண், சின்னாள் கழித்துத் தன் பிறந்தகம் — தாய்வீடு திரும்பி வந்து, பெற்றோரையும் உற்றாரையும் காணும்போது, என்ன உணர்ச்சியுடன் நெகிழ்ந்து நிற்பாளோ, அதே உணர்ச்சியை இன்று பெறுகின்றேன். பல்கலைக் கழக உயர்கல்வியில் பன்னாள் பதிந்து நின்ற நான், புகுந்த வீட்டில் மிகுந்த பெருமையோடு விளங்குகிறேன். என்றும், பிறந்தகப் பாசத்தால் நெகிழ்ந்துபோய் நிற்கின்றேன்.

1975-இல் சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்படும் என்று அறிவித்து, தொடர்ந்து பொறுப்பேற்ற முன்னாள் முதல்வர் ம. கோ. இராமச்சந்திரன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட பாரதியார் பல்கலைக் கழகம், இன்று மிக்க இளம் பருவத்தில் தத்தித் தவழ்ந்து நடைபோடுகிறது எனினும் அகவைக் கேற்ற அழகிய தோற்றத்தைப் பெற்றுள்ளது என்பதனைப் பெருமையோடு பாராட்டுகிறேன்.

---

29-4-90 அன்று பாரதியார் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய பட்டமளிப்பு விழா உரை

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' எனும் இலக்கணத்துக்குத் தானே இலக்கியமாகி

'தேடிச் சோறு நிதம் தின்று — பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி — மனம்
வாடித் துன்பமிக உழன்று — பிறர்
வாடப் பல செயல்கள் செய்து — நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி — வெறும்
கூற்றுச் சிரையெனப் பின்மாயும் — சில
வேடிக்கை மனிதரைப் போலே — நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ' !

என்றுரைத்து, அதன்படியே இன்று நம் நெஞ்சில் ஏறி நின்று 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்' என்று விடுதலை வேட்கையால், நாளெல்லாம் அலைந்து, கும்பி நிரப்பவோ, கூழ் குடிக்கவோ பாடாமல், குடும்பம் காக்கவோ, தன் வறுமை போக்கவோ எண்ணாமல், மொழி, இனம், நாட்டின் மேன்மைக் காகவே பாடிய, வாழ்ந்து காட்டிய பாரதியாரின் பெயரில் அமைந்த பல்கலைக் கழகம் !

நேரில் வந்து கொடுக்காவிட்டாலும், கால நீட்டிப்புச் செய்தாலும் தனக்குவந்த பங்கையே புறக்கணித்துவிட்டு வெளி யேறும் வீறுமிக்க புலவர்கள் சிலரேனும் வாழ்ந்த நாடு. 'யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லன்' என்று முடிமன்னர் எதிர் நின்று முழங்கிய மரபில் வந்தவர் பாரதியார்.

சிறுபயன் கிடைத்தால்கூட மொழியை, நாட்டை, இனத்தை விலைபேசி விற்கும் மனத்தவர் — வாய்ப்பு நேர்ந்தால், தன்னை விற்கும் வகையார் — ஒன்று உற்றக்கால் தன்னையே விற்றற்குரிய வகையார் போலல்லாமல் உண்மையும், உணர்ச்சி யும் ஒருங்கிணைந்த காரணத்தால் 'கொள்கைமுன் குடும்பமோ உறவோ எவையும் முன் நிற்க மாட்டா' எனும் உறுதிப்பாட் டால் உயர்ந்து நின்ற பாரதிப் புலவனுக்குத் தலை தாழ்ந்த வணக்கங்கள். பட்டமளிப்பு விழாவுக்கு இந்த நாளைத் தேர்ந் தெடுத்த பெருமக்களை என் நெஞ்சார, வாயார வாழ்த்து கின்றேன். ஆம்! இது புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் ! அதிலும் ஆண்டுதோறும் வந்துபோகும் இயல் பான பிறந்த நாள் அன்று! நூற்றாண்டு விழாவின் தொடக்க நாள் !

'மலைவாழை அல்லவோ கல்வி' என்று வியந்து, 'இது வேளை தோறும் கற்று வருவதால் படியும்' என்று உணர்த்தி,

'நூலைப்படி, சங்கத் தமிழ் நூலைப்படி' என்று 'படி, படி, என்று நம்மை வற்புறுத்திக் 'கெடல் எங்கே தமிழின் நலம் — அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க' என்று மொழி யுணர்வால் துடித்து,

'இன்று தொட்டுப் புவியே — இரண்டு
எண்ணம் ஒருமித்தபின்
நின்று தடைபுரிந்தால் — நீ
நிச்சயம் தோல்வி கொள்வாய்'

என்று போலிச் சமுதாயத்தின் கன்னத்தில் அறைந்து,

'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர், உயரப்பர் ஆக வேண்டு மானால் என்ன வழி' என்று முரட்டு வழி சொல்லி,

'இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்'

என்று வருந்தி ஒவ்வொரு வரியிலும் இன்று உயிர்ப்போடு நின்று எம்போன்றோரிடம் மொழி வீறு மூண்டெழக் காரணமாக இருந்த பாரதிதாசன்.

அவரது நூற்றாண்டு விழாத் தொடக்க நாள். அவரது மாணவராகிய எனக்கு உரையாற்றும் வாய்ப்பு ! பாரதியாரைப் பற்றி எத்தனையோபேர் புகழ்ந்து பாடியிருக்கலாம் ! நூற்றுக் கணக்கான புகழ் மொழிகள், பாமாலைகள் எழுந்திருக்கலாம். ஆனால், பாரதிதாசன் தந்த வைர வரிகளை எவரும் விஞ்ச முடியவில்லை. பாரதியைப் பற்றிப் பாவேந்தர் எழுதும் போது,

"தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமைதிற வாமல் இருந்த நிலையில்
தமிழகம், தமிழுக்குத் தகும் உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்."

என்கிறார்.

பாரதியார் பல்கலைக் கழகத்தில் பாரதிதாசன் நூற்றாண்டு விழாத் தொடக்கத்தில், புகழ் மணக்கும் கொங்கு நாட்டில் நின்று பேசும் பேறு பெற்றமைக்காக நெஞ்சு நிமிர்கின்றேன்! நினைந்து மகிழ்கின்றேன் ! உறுதிமொழி என்ற சொல்லே நாம்

பேசும் பேச்சுகளில் உறுதியாக நிற்கக் கூடிய ஒன்றை மட்டுமே குறிக்கும் ஆனால் இன்று நடைமுறை உலகில் தரப்படுகின்ற உறுதி மொழிகள் எல்லாம் காற்றிலே பறக்க விடப்படுகின்றன. ஆயிரம் உருபா கட்டினால் 2000 உருபாப் பொருளைப் பெறலாம் என்று எவரோ சொன்ன உறுதிமொழிகளை நம்பி ஏமாந்து தெருவில் நிற்பவர்கள் பலர். உங்களுக்காகத் தான் வாங்கிய விலைக்கே தருகிறேன் என்று கூறி அதிலும் ஊதியம் பார்க்கும் விற்பனையாளர் பலர். வாழ்நாள் முழுதும் கைவிட மாட்டேன் என்று பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில் உறுதிமொழி தந்து விட்டு 'வரதட்சிணை' எனும் பெயரால் மங்கையரை வாட்டும் மணவாளர்கள் ஒருபுறம்; தேர்தல் நேரத்தில் எண்ணற்ற உறுதி மொழிகளை அள்ளித் தெளித்துவிட்டு வெற்றி பெற்ற பின் தொகுதிப் பக்கம் கூட எட்டிப் பாராத சில அரசியல்வாதிகளின் உறுதிமொழி ஒருபுறம்.

இவற்றால் கூட நாம் பாதிக்கப்படவில்லை. ஆனால் அரும்பாடுபட்டு உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம் தந்த உறுதிமொழியே இந்த இந்திய நாட்டில் நிறைவேற்றப்படவில்லையே எனும் ஆழ்ந்த வருத்தம் எனக்குண்டு.

ஆம்! அரசியல் சட்டத்தில் 45, 46 ஆவது பிரிவுகள் தந்த உறுதிமொழிகள் நம் கவனத்துக்குரியவை.

45. அரசு, இந்த அரசமைப்பின் தொடக்கத்திலிருந்து பத்தாண்டுக் காலஅளவுக்குள் சிறுவர்கள் அனைவருக்கும், அவர்களுக்குப் பதினான்கு வயது முடியும் வரை இலவச மற்றும் கட்டாயக்கல்விக்காக வகை செய்வதற்குப் பெருமுயற்சி செய்தல் வேண்டும்.

46. அரசு, மக்களில் நலிந்த பிரிவினர், குறிப்பாகப் பட்டியல் குலத்தினர், பட்டியல் பழங்குடியினர் ஆகியோரின் கல்வி, பொருளாதார நலப்பற்றுகளைத் தனி வகை நாட்டத்துடன் பேணி வளர்த்தல் வேண்டும்; மற்றும் சமுதாய அநீதியிலிருந்தும் அனைத்து வகையான சுரண்டல்களிலிருந்தும் அவர்களுக்குக் காப்பளித்தல் வேண்டும்.

10 ஆண்டுகளில் நிறைவேற்றுவோம் என்று உறுதிமொழி தந்தும், இந்தியா விடுதலை பெற்று 43 ஆண்டுகட்குப் பின்னும் நம்மால் கல்வியை அனைவர்க்கும் தர முடியவில்லை. கேரளத்தில் 71%, தமிழகத்தில் 53%, இராசச்தானில் 22% என்று மாநிலத்துக்கு மாநிலம்கூட மாறுபட்ட நிலை உள்ளது,

இந்நிலையில் நம் நாட்டில் உயர்கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், தொடக்கக் கல்வியில் ஏற்படவில்லை என்றே கூறலாம். தமிழக அரசு கல்விக்காக 1000க்கும் மேற்பட்ட கோடி உருபா செலவிட்டாலும் 900 கோடித் தொகை ஊழியர் தம் ஊதியத்திலேயே போய் விடுகிறது. ஆக்கப் பணிகளுக்கோ, புதிய பள்ளி நிறுவுதல்; கூடுதல் ஆசிரியர் அமர்த்தம், பள்ளிக் கட்டிடங்களை எழுப்புதல், பழுதடைந்த கட்டிடங்களைச் சீர் செய்தல், விசிப்பலகை, கரும்பலகை முதலிய அடிப்படை வசதிகள் போன்றவற்றைக் கூடச் செய்ய முடியாமல் தொடக்கக்கல்வி சுருண்டு போய்க்கிடக்கிறது. இந்த நிலையில் இருட்டில் கிடக்கும் எண்ணற்ற சிற்றூர்களில் கல்வி ஒளி பரவி, கடைக்கோடி மனிதனும் கல்வியாளனாவது எப்போது? எதிர் பாரா வகையில் யார்யாரோ கைகொடுக்க நீங்களும் நானும் பட்டதாரிகளாகிவிட்டோம். ஆனால் இதே வாய்ப்பு ஒவ்வொருவர்க்கும் கிடைக்கவேண்டாமா? என்ன செய்யப் போகிறீர்கள் நீங்கள்?

கல்வியறிவில்லாமையாலும், கடும் வறுமையாலும், சமூகச் சீர்கேடுகளும் பெருகி நிற்கின்றன. இன்று கவிதை பாடும் எந்தக் கவிஞனும் இயற்கை வருணனை, காதலின் இனிமை, என்ற அளவோடு நிற்பதில்லை. சமூகச் சீர்திருத்தம் என்ற முறையில் சில கவிதைகளையாவது பாடாத எவரும் இல்லை. அந்த அளவுக்குச் சீர்கேடுகள் நம் கண்ணையும் கருத்தையும் உறுத்திக் கொண்டுள்ளன. அந்நிலையில் இங்கிருந்து புறப் படும் பட்டதாரிகளுக்கும் (எதிர் மறைக் கோணத்தில்) நான் தரும் அறிவிப்பு இதுதான்: "அன்புடையீர்! ஏற்கனவே வெளி யுலகம் சீர்கெட்டுக் கிடக்கிறது: நீங்கள் போய் மேலும் கெடுத்து விடாதீர்கள்!" என்பதுதான். இந்த எச்சரிக்கைக்குக் காரணம் வேறொன்றுமில்லை. வெளியுலகில் நிலவும் சீர்கேடுகளுக்கு அறியாமை படைத்த பாமர மக்கள் ஓரளவுதான் காரணமாவர். 'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என்ற வள்ளலார் வாக்கை நான் தள்ளி விடமுடியாது. ஆனால் பெரும்பாலான சீர்கேடு களைச் சிந்தித்தால், திட்டமிடுதல், செயற்படுத்தல் ஆகியவற்றில் முழுத் திறன் காட்டுவோர் படித்த மக்களேயாவர். அதனால் தான் கேட்டேன், நீங்களும் இந்தக் கூட்டத்தில் சேரப்போகிறீர் களா என்று.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? — சர்வேசா
இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்? கருகத்திருவுளமோ?

என்று மனம் நொந்து புலம்பியவன் பாரதி. அந்தமான் சிறையில் 10 ஆண்டுகள் இருந்தும் உறுதி மாறாத வீரசாவார்க்கார். அங்கே ஒரே நாளில் தூக்கிலிடப்பட்ட ஊர், பெயர் கூட விட்டுச் செல்லாமல் உயிரை மட்டும் விட்ட 83 பேர், பஞ்சாப் படுகொலைக்குக் காரணமான டையர், ஓடயர் போன்றவர்களை 21 ஆண்டுகால முயற்சிக்குப்பின் பழிவாங்கிய உத்தம் சிங், நாட்டுக்காகத் தூக்கிலேறிய பகவத்சிங், சுகதேவ், இரட்டை ஆயுள் தண்டனை பெற்ற வ.உ.சி. போன்ற எத்தனையோ பேர் செய்த ஈகம் (தியாகம்) இன்று நம்மை இந்த மேடையில் ஏற்றிவைத்திருக்கிறது.

விளையாட்டாக வரவில்லை இந்த விடுதலை. விலை அதிகமாகக் கொடுத்தே, அதுவும் அளவுக்கு அதிகமாகக் கொடுத்தே இந்த விடுதலை நமக்கு வாய்த்திருக்கிறது. விடுதலைப் போரில் பங்கே பெறாமல் இன்று விளைவுகளை அறுவடை செய்து கொண்டிருக்கிறோம் நாம். அது கூடத் தவறில்லை.

ஆனால் அந்த விடுதலை வீரர்களின் மேன்மையையாவது தெரிந்து கொண்டிருக்கிறோமா? இன்று நின்று, நாளை மறந்தும், மறைந்தும் போகக்கூடியவர்களை அறிந்து கொள்ள நாம் காட்டும் ஆர்வம் வரலாற்று மாந்தர்களைப் படிப்பதில் உள்ளதா? கல்லூரிகளில் நூலகங்களில் பல்லாயிரக்கணக்கான நூல்கள்; பல்துறையிலும் உங்களை மேலோங்கச் செய்யும் பயனுள்ள படைப்புகள்! எத்தனை பேர் எத்தனை நூல்களை முழுக்கப் படித்திருப்போம்? எத்தனை நூல்களை வரி வரியாக அலசியிருப்போம்? ஒரு கணம் சிந்தியுங்கள்.

நீங்கள் வருங்காலத்தில் ஏதாவதொரு கொள்கைக்காக உயிரை ஈயவேண்டுமென்று நான் தூண்டவும் மாட்டேன்; வேண்டவும் மாட்டேன். உங்கள் உயிர் யாருக்கும் எதற்காவும் தேவையில்லை. 'தியாகம் என்பதற்குத் தேவையில்லாத தெளிவான வாழ்வு வெளியுலகில் விரிந்து கிடக்கிறது. ஆனால் திறமையோ, உழைப்போ கூட இல்லாமல் மேலோங்க முடியுமா? வெளியுலகில் 'எதிர்பாராமல் கிடைக்கும் உயர்வுகள்' எனும் கானல் நீரை நம்பி நீங்கள் தொடர்ந்து நடைபோட முடியாது. அதனால் நல்ல திறமை உள்ள நன்மணிகள்தான் வெளியுலக மண்ணில் விளைவுகளைக் காட்ட முடியும்.

இன்று பட்டங்களைப் பெற்று வெளியேகும் என்னரும் செல்வங்களே! உங்களில் எத்தனைபேர் பட்டங்களுக்குப்

பின்னால் சில திறமைகளோடும் வெளியே செல்வதாக உறுதி யுடன் இருக்கிறீர்கள்? பேச்சாளராக, எழுத்தாளராக, ஓவியராக, கவிஞராக, எதையும் செய்து காட்டக்கூடிய ஆற்ற லாளராக (with organising capacity), விளையாட்டு வீரராக, உருவாகிச் செல்பவர்கள் எத்தனைபேர்? பலரிடம் இவற்றில் எந்தத் திறமையும் எட்டிப் பார்த்திருக்க முடியாது என்பதை முன்னாள் கல்லூரி முதல்வர் என்ற முறையில் உறுதியாகச் சொல்ல முடியும்.

திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டாம் என்று உங்களை யார் தடுத்தது? எண்ணற்ற வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்த உங்கள் கல்லூரிகளை நீங்கள் பயன் படுத்திக் கொண்டு ஏதாவதொரு துறையில் திறன் பெறாமல், தலைமைப் பாடம் (Major), துணைமைப் பாடம் (Ancillary), பாகம் 1, பாகம் 2 என்றும், அக மதிப்பீடு, புற மதிப்பீடு என்றும் அளந்து படித்து, அளவுகோலுக்குள் அகப்பட்டுப் பட்டம் பெற்று விட்டதாலேயே நீங்கள் சமூகம் தரப்போகும் அத்தனை வாய்ப்புகளையும் பெறும் தகுதியைப் பெற்று விட்டீர்களா? உங்கள் சிந்தனைக்கே இதனை விட்டு விடு கிறேன்.

ஒரு மகிழ்ச்சி எங்களுக்கெல்லாம்! சிலரது வாழ்விலாவது! உங்கள் குடும்பத்தில் இதுவரை யாருமே கல்லூரிக்குள் கால் வைத்திருக்கமாட்டீர்கள். அத்தகைய குடும்பத்தில் பிறந்து, பெற்றோரின் ஆர்வமேலீட்டால், உடன்பிறந்தோரின் ஒத்துழைப்பால், மாதாமாதம் பணம் கட்டுவதற்குக் கூட வழி யில்லாமல் தவித்துத் தடுமாறி ஒருவழியாக இன்று பட்டதாரி களாகியிருக்கும் முதல் தலைமுறையினரைப் பெருமையோடு வாழ்த்துகின்றேன். பலரது உழைப்பின் பயனாகப் பெற்ற இந்தப் பட்டத்தால் மகிழ்ந்து கூத்தாடும் உங்கள் குடும்பத் தாரை ஏமாற்றி விடாமல் அவர்களை மேலும் உயர்ந்த உறுதி பூணுங்கள்! அதுவே எங்கள் எதிர்பார்ப்பாகும்.

அப்படியின்றி உருவாக்கிய பெற்றோரை உதைத்துத் தள்ளி, இந்த மகன் பட்டம் பெற்றதால் ஏற்றம் வரும் என்று எதிர்பார்த்த பெற்றோரை ஏமாற்றிப் போலி உணர்வுகளால் ஒரு வறட்டுப் போர்வையைப் போர்த்திக் கொள்ள நினைப்பீர்கள் என்றால் உங்களை யாரும் மன்னிக்க மாட்டார்கள். எல்லை கடந்தநிலையில் உங்கள் தாயே நினைப்பாள், 'பயனற்றுப் போன இந்த மகனை வளர்த்து ஆளாக்கியதை விட அன்றே அறை வீட்டுக்குள் காலி செய்திருக்கலாமோ!' என்று.

எப்படிப்பட்ட பாசறையிலிருந்து நீங்கள் வெளியேறு கிறீர்கள் என்பதனை நான் நன்கறிவேன். நிர்வாகம் சரியில் லாததால் தடுமாறிப் போன கல்லூரிகள் சில; அடிப்படை வசதி களைக் கூடத் தராமல் ஆசைப்பட்டுத் தொடங்கி விட்டு, ஆளைவிட்டால் போதும் என்று ஒதுங்கிக் கொண்ட நிர்வாகங் களும் உண்டு; அத்தகைய கல்லூரிகளில் உங்களுக்கு என்ன அமைதி கிடைத்திருக்கும்? நிர்வாகம் சரியாக இருந்தாலும் சில இடங்களில் முதல்வர்கள் சரியாக அமையாததால் தடுமாறிப் போன கல்லூரிகளும் உண்டு; இரண்டும் சரியாக இருந்தால் தொழிற்சங்க உணர்வுகளோடு, பயிற்றுவிக்கும் பாடங்களில் உள்ள கவனத்தைவிட, அன்றாடச் சிக்கல்களில் மனத்தை ஓடவிட்டுக் கல்விப் பயனைப் பின்னுக்குத் தள்ளும் ஒரு சில ஆசிரியர்கள்; இந்த நிலையில் கல்லூரி சென்ற மனம் வாடி ஒவ்வொரு நாளும் சோர்வடைந்து மீளும் மாணவ வாழ்க்கை யில் உங்களுக்கு என்ன நிறைவு இருந்திருக்கும்? உங்களை வளர்த்துக் கொள்ள என்ன வாய்ப்பு இருந்திருக்கும்?

இந்த அளவோடு நில்லாமல் சில கல்லூரி மாணவர் பேரவைகளும் தம் பங்குக்குக் கல்லூரி வளாகத்தை அமைதி யிழக்கச் செய்து விடுகின்றன. பயிற்சிப் பாசறையாக, பல் கலைகளின் வளர்ச்சிக் கூடமாக விளங்க வேண்டிய கல்லூரிகள், சில நேரங்களில் போர்க்களமாகி, பல நாட்கள் அடைக்கப்பட்டு 180க்கு 70 நாட்களே பாடம் நடத்தப்பட்டு ஆண்டு விழாக் கொண்டாடும் நிலைகளும் உண்டு. எம் போன்றவர்கள் மாணவப் பருவத்தில் கல்லூரியில் பேச, எழுத, நாடகம் நடத்த, தலைமைதாங்கிடக் கற்றுக்கொண்டதால் உற்ற பயனை மறக்கவில்லை. ஆனால் நான் மேலே விளக்கியுள்ள சூழ்நிலைகட்குள் அகப்பட்டு அன்றாடம் கல்விப் பயன் கிட்டாமல் போகிறதே என்ற மனவேதனையை வளர்த்துக் கொண்ட மாணவ நன்னெஞ்சங்கள் பல உண்டு.

இவற்றையெல்லாம் கூறக் காரணம், இத்தனை சூழ்நிலை களையும் தாண்டி, வெற்றிபெற்று, இன்று பட்டம் தாங்கி நிற்கும் உங்களைப் பாராட்டத்தான்; வெளியுலகில் உங்கட்குப் பொறுப்பு அதிகம் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டத்தான்.

உள்நாட்டு நிலைகளிலிருந்து உங்கள் பார்வையை உலகத் தின் பக்கம் திருப்புங்கள்.

அகலப் பார்வையால் அண்டத்தை விழுங்குங்கள். பிற நாடுகள் அடைந்திருக்கும் முன்னேற்றம் நம்மை வியக்க

வைக்கிறது. சாலை அமைப்பால், கட்டிட ஒழுங்கால், துப்புரவு பேணலால், அறிவியல் கருவிகளின் அரிய பயன்பாட்டால், போக்குவரத்து வேகத்தால் நம்மைப் புல்லரிக்கச் செய்கின்றன சில நாடுகள். இவற்றைப் பார்த்து என் நாட்டிலும் இவை எப் போது வரும் என்று ஏங்கித் தவித்த இந்தியக் குடிமகன் நான். இந்நிலையில்,

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில்
பெயர்த்தல் வேண்டும்' எனும்

வேண்டுகோளோடு, பிற நாட்டு நற்பண்புகளும் நம் நாட்டில் செயற்படுத்தப்பட வேண்டும் என்று நினையுங்கள். எனினும் நம் மொழியும், நாடும் கற்றுக் கொடுத்த அடிப்படைப் பண்பு களுக்கு அணுவளவும் ஊறு நேராமல் காத்துக் கொள்ளுங்கள். தீயவற்றை வேகமாகப் பின்பற்றவும், நல்லவற்றை வெகு விரை வில் கைவிடவும் உங்கள் கல்வியும் பட்டங்களும் பயன்படு மானால் உங்களுக்காக நாங்கள் பட்டிருக்கும் பாடெல்லாம் விழலுக்கிறைத்த நீராகவே வீணாகிவிடும்.

இதுவரையிலும் பெற்றோர் செலவுப் பொறுப்பேற்றதால் விடுதியிலும், கல்லூரியிலும் கவலையற்றுத் திரிந்த உங்கள் தோள்களில் புதிய பொறுப்புகள் சுமத்தப்படுகின்றன. ஆவலோடும், ஆர்வத்தோடும் கல்லூரிக்குள்ளே காலடி எடுத்து வைத்த நீங்கள், ஓர் அயர்வோடும், நெஞ்சில் ஏதோ ஒரு சுமை அழுத்தத்தோடும் வெளியேறுகிறீர்கள்; வெளியுலகில் கால் வைக்கிறீர்கள்.

அன்றென் இளமைப் பருவத்தில்
அறிவிற் சிறந்த புலவரையும்
நன்று சீலம் உடைய பெரும்
ஞானி களையும் அடிபணிந்து
நின்று கேட்ட வாதங்கள்
நினைப்பின் அரிய ஆயிடினும்
சென்ற வாயில் வழியேதான்
திரும்பி அந்தோ வந்தேனே !

இந்தத் தத்துவம் மனதில் நிற்கட்டும்; நீங்கள் எவ்வளவுதான் ஏட்டுக் கல்வி கற்றிருந்தாலும் போராட்டம் மிகுந்த வெளி யுலகில் எல்லாமே கைகொடுப்பதில்லை. புதிய பட்டறிவைப் பெறத்தான் போகின்றீர்கள்.

சிலர் கல்லூரி வாழ்வு முடிந்ததுமே, மணவாழ்வில் புகுந்து சின்னாள் மயங்கி, பின்னாள் விழிக்கும்போது, குடும்பப் பொறுப்பு உங்கள் தோள்களில் சுமத்தப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். பெற்றோர்கள் ஓய்வெடுக்கத் தொடங்கி ஒதுங்கி நிற்கவும் முற்படுவர்.

வாழ்வை நடத்தவும், வருங்காலம் காணவும் வேலை தேடும் படலம் தொடங்கும் நீங்கள் தேடும் வேலை எங்கே இருக்கும், எப்போது கிடைக்கும் என்பதை எந்தக்கணிஞனாலும் சொல்லி விட முடியாது. ஆனால், என்னால் ஒன்று மட்டும் சொல்ல முடியும். உங்களைப் போலவே, படித்துப் பட்டம் பெற்றும், பாதியில் படிப்பை விட்டும் வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கும் எண்ணிக்கை, தமிழ்நாட்டில் 29·7 இலட்சம் பேர் என்பதைமட்டும் சொல்ல முடியும். இந்தக் கடலில் இறங்கி கலந்து கரைந்து விடப் போகிறீர்கள். உங்களை அடையாளம் கண்டு அழைத்துப் பணி வழங்க எங்களுக்கு எத்தனை காலம் ஆகிறதோ? இப்போதே உங்களுக்கு இந்த உணர்வு தோன்றியிருக்கும்.

அனைத்துப் பட்டங்களும் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் வழங்கப் பெற்ற காலம் ஒன்று இருந்தது. இப்போது இளங்கலை, முதுகலைப் பட்டங்களை அந்தந்தக் கல்லூரிகளே வழங்கியிருக்கின்றன. காரணம், பட்டமளிப்பு விழாவில் பட்டம் வாங்கியவர்கள்,

"பட்டம் வேண்டாம், வேலைகொடு" என்று இடந்தெரியாமல் முழக்கம் செய்ததுதான்.

என்றும் எப்படியும் எதிர்நீச்சம் போட்டு வாழ்ந்து காட்ட வேண்டும் எனும் நெஞ்சுரத்தோடு புறப்பட வேண்டும் இன்றைய இளைஞர்கள்.

"எடுத்த செயல்முடித்துவிடும் இளமைக் காலம்!
இருக்கின்ற வேகத்தில் இன்றே நீங்கள்
கொடுக்கின்ற நல்லுழைப்புத் தமிழை நோக்கிக்
கொள்கின்ற நல்லுணர்வும் சேரும் போது
தடுக்கின்ற பகையாவும் தூளாய்ப் போகும்!
தமிழுக்கு வாழ்வளிக்க இதுதான் நேரம்!
தொடுக்கின்ற கல்வியோடு துணிவும் பற்றும்
தொடரட்டும்! துடிப்போடு வீறு கொள்க!

என்றுவாழ்த்தி வழி அப்னுபுகிறோம் நாங்கள். எனவே நண்பர்களே! பொதுநல உணர்வினை நெஞ்சில் தாங்கிப் பொது வாழ்விலும் மிளிர முடியும் என்று நம்பிக்கையோடு புறப்படுங்கள். அகவை முதிர்ந்து அலுத்துச் சலித்தவர்கள், ஆடி ஓய்ந்து அடங்கப் போகின்றவர்கள் வேண்டுமானால் நம்பிக்கை இழந்து விட்டுப் போகட்டும். உங்களைப் போன்ற இளமை வேகமும், ஓடுகின்ற பாம்பைக் (Pessimistic view) காலால் மிதிக்கும் உறுதியும், குருதியோட்டமும், கூனிக் குறுகாத உடம்பும் படைத்தவர்கள் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? உங்கள் முன் நம்பிக்கைப் போக்கு (Optimistic view) ஒன்றே முன் நிற்கட்டும்!

இருந்து சென்ற முன்னோர்கள் எய்தாத சிறப்பை எய்தப் பாருங்கள். சங்க காலத்தைப் பொற்காலமாக்கியவர்கள், மீண்டும் பிற்காலச் சோழர் காலத்தைப் பொற்காலமாக்கியவர்கள், இன்றும் தம் ஆற்றலால் இந்த நாட்டை, மொழியை வழி நடத்திச் செல்பவர்கள் ஆகியோர் உங்கள் வழிகாட்டிகளாக விளங்கட்டும்! இருண்ட காலத்தை உருவாக்கி நான்கு நூற்றாண்டுகள் தமிழகத்தைக் கூடைக்குள் கவிழ்த்துப் போட்டவர்களின் செல்லரித்த வரலாற்றைத் தேடி அலையாதீர்கள்! அந்தச் சருகுகளில் முன்னேற்றத் தீப்பட்டு மூண்டெறியட்டும்;

அமைதியின்மை! அமைதியின்மை! எனும் குரல் அடிக்கடிக் கேட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் கல்லூரியில் இருக்கும் போது ஒருவேளை உங்கட்குக் கேட்காமல் இருந்திருக்கும். ஏனெனில் அதை உண்டாக்கியவர்களே நீங்கள்தான் என்பது தானே மற்றவர்கள் முணுமுணுப்பு. Student Unrest என்ற தொடர் பழக்கமான ஒன்றுதானே!

ஆனால் இன்று உலகம் ஓரளவு அமைதியாய் இருக்கிறது. வல்லரசுகள் பக்கம் நெருங்கி நின்று ஒருவரையொருவர் வணங்கிக் கொள்வதால் ஏற்பட்ட அமைதி அது,

இந்திய எல்லையில்தால் அமைதி குறைவாக இருக்கிறது. அண்டை நாட்டின் உறுமல் அடிவாரத்தில் கூடக் கேட்கிறது. நம் நாட்டுக்குள்ளேயே ஆங்காங்கே வேட்டோசைகள்! சில மாநிலங்களில் ஒரு நாளைக்குப் பத்து என்ற வீதத்தில் வாழ்வை இழந்து கொண்டிருக்கிறார்கள் சிலர். ஆனாலுப் அமைதிப்

பூங்காவாகத் திகழும் பெருமை தமிழகத்திற்கு என்றும் உள்ளது. அங்கொன்றும் இங்கொன்றுமாக, மனித மனக் கோணல்களால் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் உங்களைப் போன்ற புது எழுச்சியாளர்கள் நம்பிக்கையோடு நடைபோடத் தகுந்த நன்னிலம்தான் இது. நானிலம் என்னும் சொல்லையே நானிலத்துக்குத் தந்த நாடுதான் இது.

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது சிறுத்தையே வெளியில்வா!

என்ற அழைப்போடு வெளியில் காத்திருக்கிறோம் நாங்கள். ஒருகாலத்தில் உலகத்திற்கு வழிகாட்டிய தமிழ்நாடு இன்று உலக வேகத்தையும் அறிவியல் புதுமைகளையும் கண்டு வியந்து அந்த அளவுக்கு உயரத் துடித்துக் கொண்டிருக்கிறது.

காலங்கடத்தாமல், வேளை பார்க்காமல், எதையோ எதிர் பார்த்து ஏங்கி நிற்காமல் நடைபோடத் தொடங்குங்கள். நீங்கள் தாங்கிச் செல்பவை பட்டங்கள் அல்ல! கண்ணாடிச் சட்டங்கள்!

நீங்கள் வளர வேண்டும், வாழ வேண்டும் என்று வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி உங்களைப் படிக்க வைத்த பெற்றோர் களின் எதிர்பார்ப்பு — அறியாமையோடு வந்த உங்களின் மன இருள் நீக்கி, அறிவு கொளுத்தி உங்களுக்காக உழைத்த ஆசிரியர்களின் கைவண்ணம் – நாளை உலகை நடத்திக் காட்ட எங்களோடு இணைந்து நடந்து பொறுப்பேற்க வரு வீர்கள் என்று தொடர் ஓட்டத்தில் விடாது ஓடிக் கொண்டி ருக்கும் எங்களைப் போன்றவர்கள் நம்பிக்கை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளடக்கம் கொண்ட கண்ணாடிச் சட்டங்கள் !

பட்டங்கள், அல்ல; கண்ணாடிச் சட்டங்கள்! சுடர்மிகும் அறிவுடன் உங்களைப் படைத்திருக்கிறோம். வல்லமை தந்திருக்கிறோம்!

வாழ்ந்து காட்டுங்கள் !

புன்மைத் தேரைகளாக, பொட்டுப் பூச்சிகளாக அழிந்து போகாதீர்கள் !

வினாக்குறி போல் வளைந்து வீணாகி விடாதீர்கள் !

எதிர்பாராமல் இலையுதிர்காலம் வந்து உங்களைப் பொலி விழக்கச் செய்தாலும் வசந்த காலம் வந்தே தீரும் என்று நம்புங்கள் !

"If winter comes,
Can spring be far behind ! "

எனும் செல்லியின் வரிகள் உங்கள் செவியில் விழட்டும்.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும் ;
சேமமுற வேண்டு மெனில் தெருவெல்லாம் தமிழ்
முழக்கம்
செய்தல் வேண்டும் ;

எனும் சூளுரைத்துக் கொள்ளுங்கள் !

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா! என்றும்
ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! என்றும்

யாரோ வாழ்த்தி வரவேற்கும் கனிவான குரல் உங்களுக்குக் கேட்கவில்லையா?

இப்படிக்கு, உங்கள் தமிழ்க்குடிமகன்!

# பார் அதிரப் பாடியவன்

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களே, உயர்திரு நீதியரசர் மோகன் அவர்களே, வரவேற்புரை நிகழ்த்தி அருமையான முன்னுரை வழங்கிய அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களே, தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் வாசவன் அவர்களே, நூலை வெளியிட்டுத் திறனாய்வு செய்ய இருக்கின்ற பேரா சிரியர் மெய்கண்டார் அவர்களே, அவையில் அமர்ந்திருக்கின்ற அறிஞர் பெருமக்களே உங்கள் அனைவரையும் பாரதியார் விழாவுக்குத் தலைமை தாங்குகின்றவன் என்ற முறையில் வர வேற்பதில் பெருமை அடைகின்றேன்.

எனக்கு முன்னாலே வரவேற்புரை நிகழ்த்திய அருட் செல்வர் ஆனாலும்சரி, தொடக்க உரையாற்றிய நீதியரசர் மோகன் அவர்களானாலும்சரி பாரதியாருடைய உள்ளக் கிடக்கையை எடுத்துக்காட்டி அதன் வாயிலாக நாம் செய்து இருக்கின்ற தவறுகளையும் எடுத்த எடுப்பிலேயே இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எனக்கு முன்னால் ஒரு சின்ன முன்னுரை வழங்கிய நம்முடைய பகீரதன் — நானும் அவரும் ஈழ நாட்டுக்குச் சென்றோம் என்றால் — இலங்கைக்கு அல்ல — ஈழ நாட்டுக்குச் சென்று, பண்டார வன்னியன் சிலை திறப்பு விழா வில் கலந்துகொண்டு பேசிவிட்டு வந்ததை நினைவுகூர்ந்தார். அப்போது இசைத் தொடர்புக்காக திருமதி பிரமீளா அவர்களும் வந்தது நினைவு இருக்குமென்று நான் கருதுகிறேன். சிலை திறப்பு விழாவின்போது நாங்கள் அந்த நாட்டு மக்களிடத்தில் கண்ட உணர்ச்சிகள், அவர்கள் மொழிக்காக, இனத்துக்காக எடுத்து வருகின்ற முயற்சிகளை எல்லாம் பார்த்து வியந்த பிறகுதான் தமிழ்நாட்டிலேயே பேசுவதைவிட வவுலியாப் பகுதியில் பேசுவது இன்னும் பயன்படும் என்று கருதி நான் கொஞ்சம் கடுமையாகவே பேசினேன். அதைப் பகீரதன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அப்போது திரு. ஔவை

---

**பேரவைத் தலைவர் பொறுப்பில் இருந்த பொழுது 'கல்கி' நிறுவிய பாரதி தமிழ்ச் சங்கத்தில் ஆற்றிய உரை; இதனையொட்டித் 'தமிழ்க் குடிமகனின் ஆதங்கம்' எனும் தலைப்பில் 'கல்கி' இதழ் ஓர் ஆசிரியவுரையே எழுதியது.**

நடராசன் அவர்களும் அங்கே வந்திருந்தார். அவர் வந்தபோது ஓர் அரசு அலுவலராக வந்திருந்தார். நான் அரசுக்குக் கட்டுப் படாத ஒரு குடிமகனாக அங்கே சென்றிருந்தேன். அப்போது நான் எடுத்துக்காட்டிச் சொன்னேன், நம்முடைய ஔவை நடராசன் அவர்களுக்கு மீசை சிறியது; அந்த அளவுக்குத்தான் அவருடைய பேச்சு இருக்கும். ஆனால் எனக்கு மீசை பெரியது; எனவே வேகம் இருக்கும் என்று சொன்னேன். ஆனால் இப்போது எனக்கு மீசை சிறியது நான் அரசின் உறுப்பாக இருப்பவன். வவுனியாவில் 1982-ல் பேசி 1983-ல் மிகப் பெரிய கலவரம் மூளுவதற்கு நான் காரணமாக இருந் தேன் என்று பகீரதன் அவர்கள் சொல்லமாட்டார் என்று நான் கருதுகிறேன். இப்போது நான் ஒரு பொறுப்பில் இருக்கின்ற காரணத்தினால், 8 அல்லது 9 மாதங்களுக்கு முன்னால் வேக மாக, கடுமையாக மற்றவர்களைச் சாடியதைப் போல் அல்லது இன்னும் வேகமாகப் பாரதி படம் பிடித்தது போல் இப்போது என்னால் படம் பிடிக்க இயலவில்லை; காரணம் பட்டி மன்றங்களிலும், வழக்காடு மன்றங்களிலும் கடுமையாகத் தலைப்புகளைப் போட்டு எதிரும் புதிருமாக வாதிட்டுப் பழக்கப்பட்டவன். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டு மென்று சொன்னால் பாரதியினுடைய நூற்றாண்டு விழாவின் போது பாரதியினுடைய கருத்துக்களை எதிர் நோக்கிலிருந்து திறனாய்வு செய்தவன் என்ற முறையில் எனக்கு அதிகப் பங்கு உண்டு. ஒரு தலைப்பு, அதாவது ‘பாரதி பொதுவுடைமைவாதி என்பது குற்றம்’ என்ற தலைப்பில், நான் “குற்றம்” என்ற தலைப்பிலே பேசியுள்ளேன். அதற்குப் பல எடுத்துக்காட்டு களைக் காட்டியிருக்கிறேன். இங்கே இருக்கிற தமிழ்ப் பெரு மக்கள் என் மீது வருத்தப்படக் கூடாது. பெரும்பாலும் நாம் அனைவரும் படித்தது, பார்த்தது பாரதியினுடைய கவிதைகளை மட்டும் தான். அவர் எழுதிய உரைகளைப் பெரும்பாலும் படித்ததுமில்லை, பார்த்ததுமில்லை. அவர் பாடல்களில் காட்டி இருக்கிற உணர்ச்சிகளைவிட, அவர் கவிதைகளில் காட்டிய உணர்ச்சிகளை விட இன்னும் அருமையான இடங்கள் எல்லாம் அவருடைய உரை நடைகளில் இருக்கின்றன. ‘தமிழ் நாடு’ என்றும், ‘தமிழ்’ என்றும் கவிதையில் காட்டிய வரிகள் எல்லாம் நமக்கு மனப்பாடமாக இருக்கின்றன. ஆனால் கண்டுபிடிக்க முடியாத ஒரு பகுதி உரைநடையில் இருக் கின்றது. ஓர் இடத்தில் பாரதி சொல்லுவான், “என்னுடைய தமிழ்ச்சாதிப் பெண்ணை விட இன்னொரு சாதிப் பெண் அழகாக இருப்பதை நான் சகித்துக் கொள்ளமாட்டேன்” என்று சொல்லி இருக்கிறான். சேர நாட்டு இளம் பெண்களை

யெல்லாம் பாராட்டிப் பேசியவன், ஒருமைப்பாட்டிற்காக எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துப் பாடிப் பழக்கப் பட்டவன். ஆனால் 'தமிழ்' என்று வருகிறபோது, 'தமிழன்' என்று வருகிற போது தன்னுடைய தமிழ்ச்சாதியை விட இன்னொரு சாதிப் பெண் அழகாக இருப்பதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம் மொழியாலும், இனத் தாலும், நாட்டு உணர்வாலும் பாரதி காட்டிய உணர்வு எங்களைப் போன்று அடக்கத்திற்கு இடையிலே இருந்த உணர்வு அல்ல, அலுவலகத்தில் இருப்பவர்கள் பொறுப் போடும், நாவடக்கத் தோடும் பேச வேண்டுமென்று கட்டுப் படுத்தப்பட்ட உணர்வு அல்ல; காசுக்காக எழுதுகின்ற எழுத் தாளர்களோ, கவிஞர்களோ ஓர் எல்லைக் குட்பட்டு எழுத வேண்டுமென்ற இடர்ப்பாட்டுக்கு, உட்பட்ட கவிதை அல்ல; எவனைப் பற்றியும் கவலைப்படாத, எந்தப் பதிப்பாளரைப் பற்றியும் அக்கரை கொள்ளாத, எந்த இதழ் அதனை வெளி யிடும், வெளிப்படுத்தும் என்று எதிர் பார்க்காத ஓர் உணர்ச்சிக் கவிஞனை—நான் என்னைக் கேட்டால்—பாரதியைத் தவிர வேறு எவரையும் காணவில்லை (கையொலி) எனக்கு அதைச் சொல்வதற்கு முழுத் தகுதி இருக்கிறது. காரணம் என்னுடைய அறிஞர் பட்டத்திற்காக 614 கவிதைகளை ஆய்வு செய்து பட்டம் பெற்றவன் நான். எனவே கவிஞர்களைப் பற்றிய திறனாய்வு செய்வதற்கு. அவர்களுடைய உள்ளக் கிடக்கைகள் என்னவென்று சொல்வதற்கு எனக்கு முழு உரிமை உண்டு.

பாரதியிடத்தில் நான் கண்டது எல்லாம்—இன்றைக்கு நானே ஒரு நூல் எழுதினால், நூலை எழுதுவதற்கு முன்னாலே ஒரு பீடிகை அமைத்துக்கொள்வேன். பதிப்பாளர் யார், எத்தனை படிகள் போகும், நூலகம் எத்தனைப் படிகள் வாங்கும், இது போகுமா, நிற்குமா என்றெல்லாம் கணக்கிட்டு அதற்குத் தகுந்ததுபோலத்தான் நான் எழுதுவேன். நான் என்னைச் சொல்கிறேன். மற்றவர்கள் யாரும் அப்படி வருத்தப் படக் கூடாது. ஆனால் பாரதி அப்படிக் கவலைப்பட வில்லை; தன்னுடைய கருத்துகளைச் சொல்வதில் எவருக் காகவும் கவலைப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவருடைய காலத்தின் கட்டாயம் சமூகச் சீர்திருத்தக் கருத்துக் களை அவர் எவ்வளவோ சொல்லி இருந்தாலும் அவர் முன் எடுத்துக்கொண்ட உள்ளடக்கம் என்று சொல்லப்படுகின்ற 'கருப் பொருள்' — 'contents' அது முழுக்க முழுக்கத் தேசிய விடுதலை. அதைத்தான் அவர் எடுந்துக்கொண்டார். அந்த நேரத்தில் அது அவருக்குத் தேவைப்பட்டது. அந்த நேரத்தில்

அது தேவைப்பட்டதினால் மற்றதை எல்லாம் பின்னுக்குத் தள்ள வேண்டிய சூழ்நிலை. அது தவிர்க்க முடியாது. அதனால் தான் 'நாடகத்தில், காவியத்தில் காதலென்றால் ..' என்று பாடு கிறபோது கூட ஒரு பகுதிதான் சமூக சீர்திருத்தத்தைத் தொட முடிந்தது. ஆனால் பின்னால் வந்த பாரதிதாசனுக்கு அவற்றை யெல்லாம் விரிவுபடுத்துவதற்கு வாய்ப்புக்கள் கிடைத்தன.

பாரதியார் சிறப்பாகப் பாடினாரா, பாரதிதாசன் சிறப்பாகப் பாடினாரா என்று ஆராய்ச்சி செய்யக் கூடாது. இன்னும் சரி யாகச் சொல்லப்போனால், ஒரு திருவிழாவிற்குப் போகிற ஒரு தந்தை, தன்னுடைய இளைய மகனை அழைத்துக்கொண்டு போகிறான். 'அப்பா! அந்தக் காட்சி தெரியவில்லை' என்று சொன்னால், தந்தை அந்த மகனைத் தோளில் தூக்கி உட்கார வைத்துக் கொண்டு காட்டுகிறான். எனவே தந்தைக் குத் தெரிந்ததை விட மகனுக்குக் கொஞ்சம் அதிகமாகவே தெரியும். (கையொலி) எனவே பாரதியார் தரையில் நின்று இந்தப் பேருலகைப் பார்த்தார்; பாரதிதாசன், பாரதியாருடைய தோளில் நின்று பார்த்தார் (கையொலி) எனவே சற்று விரிவு படுத்திப் பாடியது பாரதிக்குப் பெருமை தானே தவிர சிறுமை அல்ல. என்னுடைய மாணவன் தமிழிலே ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதி வெற்றி பெற்று இன்றைக்கு ஒரு மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராக இருக்கிறான் என்று சொன்னால் அது தமிழ்க்குடிமகனுக்குப் பெருமையே தவிரச் சிறுமை அல்ல. என்னுடைய அடுத்த தலைமுறை என்னைவிட வேகமாக வளர்ந்தால்தான் நான் என்னுடைய பட்டறிவுகளை, நான் பெற்றுக்கொண்ட பயனுள்ள அறிவினை மற்றவர்களுக்கு வாரி வழங்கி, நான் வளர்த்து இருக்கிறேன் என்று பொருள்; இல்லா விட்டால் நான் ஏய்த்து இருக்கிறேன் என்று பொருள். நான் என்னுடைய கல்லூரி ஆசிரியர்களுக்கு அடிக்கடிச் சொல்வது உண்டு. 10 மணிக்கு நீங்கள் வகுப்புக்குப் போய்விட்டு 11 மணிக்கு வந்தால் அந்த மாணவன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். ஒரு மணி நேரத்தில் நான் உயர்ந்து இருக்கிறேன் என்ற உணர்வு அந்த மாணவனுக்கு வரவில்லை என்று சொன்னால் இந்தப் பாடத்தால் கிஞ்சிற்றும் பயனில்லை என்று கருதுகிறவன் நான். எனவே அப்படிப்பட்ட உணர்வு பாரதிக்கு இருந்தது என்று சொன்னால், இந்த நாடு விடுதலை ஆக வேண்டும் என்ற குறிக்கோளுக்காகத்தான். உத்தமசிங் போன்ற வர்களைப் பார்க்கிறோம்; பகவத்சிங் போன்றவர்களைப் பார்க் கிறோம்; அவர்களுடைய காலத்து அவர்களுடைய சிந்தனை எல்லாம் எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் ஜாலியன்

வாலாபாத் படுகொலை நடந்தபோது கிட்டத்தட்ட 1650 சுற்று சுட்டு இருக்கிறார்கள். 1526 பேர் இறந்து இருக்கி றார்கள். அந்தக் கூட்டத்திலே நின்றவன் தான் உத்தம்சிங் என்றவன். அப்போது அந்த இரத்த மண்ணைக் கையில் எடுத்துக்கொண்டு அவன் சூளுரைத்தான். "சுட்டேன், சுட்டேன்; என் ஆசை தீரச் சுட்டேன்." என்று அந்த ஓ. டயர் சொன்னானே, அவனை என்றைக்காவது ஒரு நாள் நான் ஆசை தீரச் சுட வேண்டுமென்று சூளுரைத்துக் கொண்டான். அத னுடைய விளைவு 19 வயதில் எடுத்துக்கொண்ட அந்தச் சூளுரை யால் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று, அமெரிக்காவுக்குச் சென்று பிறகு இங்கிலாந்துக்குச் சென்று 21 ஆண்டுகளாகக் காத்திருந்து அவர்கள் இரண்டு பேரையும் சேர்த்துச் சுட வேண்டுமென்று காத்திருந்து - அதற்கிடையில் டயர் இறந்து போய்விட்டான் — ஓ. டயரையும் அவருடைய செயலாள ரையும் — இரண்டு பேரையும் ஒரே மேடையில் வைத்துச் சுட்டான். அப்போது உத்தம்சிங் சொன்னான், சுட்டேன், சுட்டேன்; என் ஆசை தீரச் சுட்டேன் என்று. (கையொலி) நான் அப்படிப்பட்டவர்களை வாழ்த்துகிறேன், வணங்கு கிறேன். பாரதி போன்றவர்கள் அந்த உணர்வு படைத்த வர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. வேண்டுமானால் பாரதிக்கு அங்கே போய்ச் சுடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந் திருக்கலாம். ஆனால் அவனது காலத்தில்—அவன் மிதவாதி களை நம்பவில்லை; கோகலேயைப் பின்பற்றவில்லை; தில கரைப் பின்பற்றினான், வேகத்தைப் பின்பற்றினான். எனவே வேகத்திற்கு ஒரு கவிஞனாகப் பிறந்தது மட்டுமல்லாமல், அவனுடைய சொற்களும் அத்தனை வேகம்.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?<br>
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?<br>
என்று எமது அன்னைகை விலங்குகள் போகும்<br>
என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?

என்று கேட்கின்ற அந்த உணர்ச்சியில் பாரதியை மிஞ்சுவதற்கு இன்னொரு விடுதலைக் கவிஞன் பிறக்க முடியாது.

நம்முடைய கவிஞர்கள் வேகமாகச் சொன்னார்கள். கவிஞர்கள் சொன்ன உடனே நானே பின்னால் ஒரு கவிதை எழுதினேன்; கவிதை போன்று எழுதினேன். கவிஞர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏனென்று

கேட்டால் பேரவைத் தலைவர் என்ற முறையில் நீங்கள் இதைத் தீர்ப்பாகஎடுத்துக் கொள்ள வேண்டியதில்லை; ஒரு திருத்தமாக எடுத்துக்கொள்ளலாம்.

"கவிஞர்களே! வடபழநிப் பக்கம்
வலம் வருவதை விட்டுவிட்டு
மழலையர் பள்ளிகளுக்குமுன்
மறியல் செய்தால் என்ன?"

வடபழநிப் பக்கம் எதற்கு என்று உங்களுக்குத் தெரியும்.

"எப்பாடு பட்டேனும் இடம் பிடிக்க முந்தாமல்,
தப்பான விளம்பரத்தைத் தகர்க்க முன்வந்தால் என்ன?
பக்திச் சுவைநனி சொட்டப் பாடினீர்,
இறைவனை வணங்க ஏகிடும்போது
தமிழில் அர்ச்சனை வேண்டும் என்றே
அடம்பிடித் தங்கே முழங்கினால் என்ன?"

என்பது தான் என்னுடைய கேள்வி. தமிழைப் பற்றி நிறையச் சொன்னார்கள். நிறையச் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். அதிலே எனக்கு இரண்டாவது கருத்தே கிடையாது. இன்னும் சரியாகச் சொல்லப் போனால் இங்கு இருக்கின்ற பெருமக்கள் கூட அப்படி ஏதாவது ஓர் இயக்கத்தைத் தொடங்கினால் நானும் அதற்கு முன்வருவேன். ஒரு பத்து ஆண்டுகளுக்குப் பேச்சை அறவே நிறுத்திவிட்டு (கையொலி) — அதற்காக ஒலிபெருக்கிக்காரர்கள் தங்களுக்குத் தொழில் கெட்டுப் போகிறதே என்று வருத்தப்பட வேண்டாம்; அதற்காகவேண்டுமென்றால் ஒரு மானியம் வழங்கிவிடுவோம். — நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. நான் ஏதோ சொற்பொழிவு ஆற்ற வேண்டுமென்ற எண்ணம் கூட எனக்குக் கிடையாது. பேச்சைப் பத்து ஆண்டுகள் நிறுத்திவிட்டு, விளம்பரப் பலகைகள் தமிழில் இடம் பெறுவதற்கு, எல்லாக் கல்லூரிகளிலும் எல்லா மட்டத்திலும் தமிழ் பயிற்சி மொழி ஆவதற்கு, ஆட்சி மொழி முழுமையாகத் தமிழ் ஆவதற்கு, நீதிமன்றத்தில் (முழுமையாகக் கட்சிக்காரனுக்கு விளங்கும்படி நீதி வழங்குவது முக்கியம் — அப்படி விளங்கினால் தவறு புரிந்துவிடுமோ என்று அவர்கள் கருதாமல்) விளங்கும்படி சொல்வதற்கு, எல்லாவற்றுக்குமான முயற்சிகளை நாம் ஒட்டு மொத்தமாகச் செயற்படுவதற்கு இந்தப்பத்தாண்டை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பாரதியார் சங்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் பெரிய வர்கள்; இன்னும் சொல்லப்போனால் நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் போன்ற புலவர்களுக்கு மிகவும் நெருக்க மானவர்கள். எவ்வளவுக்கு நெருக்கம் இருக்கிறது என்பதை நம்முடைய மகாலிங்கம் அவர்களைப் பற்றிச்சக்தி சர்க்கரை ஆலையில் பேசும்போது நம்முடைய கலைஞரே குறிப்பிட்டிருக் கிறார்கள் எனவே இந்த நெருக்கத்தைக் கொண்டு நாளைக்கே — நாளைக்கு என்றால், நாளைக்கல்ல, நாளைக்கு அவர் வெளியூரில் இருப்பார், நாளைக்கு மறுநாள் நீங்கள் ஒரு தூதுக் குழுவாகச் சென்று, "நாங்கள் இப்படி நினைக்கிறோம், இதை உங்கள் காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும்" என்று எடுத்துச் சொல்லி—நீங்கள் சொல்வதற்கு நான் ஏன் சொல் கிறேன் என்றால்,—நீங்களே சொல்லலாம் ஏனென்றால்—நான் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன்; செய்து கொண்டு தான் இருக்கிறோம்; என்னைப் பொறுத்த வரையில் என்ன செய்ய வேண்டுமென்பதை நான் கடைசியாகச் சொல்வேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அந்தக் கட்டத்தில் செயல் படும்போது நாம் பலவற்றை நினைவூட்ட வேண்டி இருக்கிறது. 23—1—1968-ல் நடைபெற்ற சட்டமன்றக் குறிப்புகளைப் படித்துப் பார்த்தபோது நான் வியப்பு அடைந்தேன். இரு மொழிச் சட்டம் அன்றைக்குத்தான் நிறைவேறி இருக்கிறது. அதையொட்டி இன்னொரு துணைத் தீர்மானம் வருகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் ஆக்குவோம்; எல்லாத் துறைகளிலும் தமிழை முழுமையான ஆட்சி மொழியாக ஆக்குவோம் என்ற துணைத் தீர்மானத்தை சட்டமன்றம் ஒருமனதாக ஏற்கிறது என்று 23—1—1968-ல் தீர்மானம் நிறைவேறி இருக்கிறது. ஆனால் 21 ஆண்டுகள் ஆகி இருக்கிறது. இன்னும் நாம் எந்த அளவுக்கு வந்து இருக்கிறோம் என்று யாராலும் கணிக்கவே முடியவில்லை.

பல நிலைகளில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகிறார்கள். நம்முடைய நீதியரசர் சொன்னதுபோல் அவர்களுக்கு 299, 300ஆவது பிரிவின் கீழ்த் தண்டனை வழங்குவதற்கு அவர்கள் தயார் என்று சொன்னால், சிறைச்சாலைகளை நிரப்புவது மட்டுமல்ல, இந்த நாடு முழுவதும் தண்டனை வழங்க வேண்டியிருக்கும்.

திரு. வி. க. அவர்கள் அருமையாகச் சொன்னார்கள்,

"தமிழைப் போல் உயர்ந்த மொழி தரணி எங்கும் கண்டதில்லை;

ஆனால் தமிழரைப் போல் மொழிக் கொலையில்
தலைசிறந்தோர் எவர் உளரே!"

இது திரு. வி. க. காலத்திலேயே அவருக்கே தெரிந்து இருக்கிறது. எனவே நாம் இப்போது சொல்ல வேண்டிய தில்லை. எனவே அப்படிப்பட்ட நிலையில், பாரதியார் போன்றவர்கள் மிகுந்த உணர்ச்சியோடு—அவர் பிறந்து, இறந்து இன்றைக்கு எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் அடிக்கடி நினைப்பது எல்லாம், பாரதியார் கஞ்சியைப் பற்றிக் கவலைப்படாமல், வாழ்க்கையைப் பற்றிக் கவலைப் படாமல் பிற்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல், மனைவி மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் இப்போது நமக் கெல்லாம் அந்தக் கவலை மிக அதிகம் இருக்கிறது; வந்து விட்டது—அந்தக் கவலையைப் பற்றி இல்லாமல், நாடு விடுதலை அடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு பாடியதன் விளைவு தான், 'பாஞ்சாலி சபதம்' கூட. தர்மனைப் பீமன் எப்படிச் சாடினான் என்று சொன்னார்கள். அதைவிட இன்னொரு பகுதி அவன் மீது இருக்கிற சினம் பாஞ்சாலியை வைத்து இழந்ததற்குக் கூடச்சினம் ஓரளவுக்குத் தான்—இன்னும் அதற்கு மேலே ஒரு படி இருக்கிறது. அவனுக்கு வருத்தமெல்லாம் நாட்டை வைத்து இழந்ததுதான் குற்றம். பீமன் கூட அண்ணனை 'கையை எரித்து விடுவோம்' என்று தான் சொன்னான், பாஞ்சாலியை வைத்து இழந்ததற்குச் சாடினான். ஆனால் நாட்டை வைத்து இழந்ததை, ஆயிரம் நீதிகளை உணர்ந்த தர்மன் அதைச் செய்ததை—நீங்கள் கூட ஒருமையில் இலக்கியத்தில் சொல்வீர்கள்; ஒருமையில் அல்ல, இழிவாகச் சாடி "சீச் சீ சிறியர் செய்கை செய்தான்" என்று சொன்னான். ஏனென்று கேட்டால் நாங்கள் சொல்வதை விட இன்னொரு படி மேலே போகிறான். ஒரு பெண்ணை வைத்து இழந்தது கூடப் பெரிதாக அவனுக்குத் தோன்றவில்லை. அது ஓர் உருவகத்துக்காகச் சொன்னது. ஆனால் நாட்டை வைத்து இழப்பதைப் பாரதியாரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

அதேநேரத்தில் இன்றைக்கு நாம் என்ன நினைக்கிறோம் அன்றைக்கு இருந்த அதே மக்கள் தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். மக்கள் மாறவில்லை. ஆனால் மனிதன்

மாற வேண்டும். மனிதன் ஏன் மாறவில்லை தெரியுமா? இன்றைக்கும் ஒரு தெருவில் ஒரு திருடன் ஓடுகிறான் என்று சொன்னால், அவனைப் பிடிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தாலும் நாம் பிடிக்கமாட்டோம், ஏனென்றால் நாம் எல்லோரும் பகுத்தறிவாளர்கள், சிந்தனையாளர்கள் உடனே என்ன செய்வோம்? "ஒருவேளை கத்தி வைத்து இருப்பானோ என்னவோ?" என்ற ஒரு சிந்தனை அடிப்படையில் அவனை ஓட விடுவது—பிறகு 4, 5 பேர் சேர்ந்து பிடிக்கக்கூடிய வாய்ப்புக் கூட இருக்கும். அப்போது கூடப்பிடிக்க மாட்டார்கள். ஏனென்று கேட்டால் அவர்கள் இதைவிடச் சிறந்த சிந்தனையாளர்கள் ஒருவேளை காவல் நிலையம் வழக்கு, நீதிமன்றம் என்று கூப்பிடுவார்களோ என்று. எனவே சிந்தித்துக் கொண்டிருக்க, அவன் எல்லாத் தெருக்களிலும் திருடிவிட்டுப் போகிற அளவுக்கு ஒரு வாய்ப்புக் கொடுப் பார்கள். இதை என்ன சொல்வது? இந்தியர்களைப் பார்த்து ஒருவர் சினத்தின் அடிப்படையில், வெறுப்பின் அடிப்படையில் "நாய்கள்" என்று திட்டினார். ஆனால் இரக்கத்தின் அடிப் படையிலும், என்னுடைய இந்தியன் இப்படித் தாழ்ந்து கிடக்கிறானே என்ற எரிச்சலின் அடிப்படையிலும் "நீங்கள், பாரதத்தின் நாய்கள்" என்று திட்டினான் பாரதி. ஏனென்று கேட்டால் துச்சாதனன் பாஞ்சாலியைத் தெருவிலே இழுத்துக் கொண்டு வருகிறபோது, அவன் பாடிய வரிகள்—

"ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ?
வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னை அந்தப்புரத்திலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?"

என்னைக் கேட்டால் அன்றைக்கு இருந்த மக்களைச் சாடியதைவிட இன்றைக்கு அவன் இருந்திருந்தால் அவ னுடைய பாடல்கள் தேசியப் பாடல்களாக, தோத்திரப் பாடல் களாக இருக்காது; சாடல் பாடல்களாகவே இருந்திருக்கும். காரணம் நமக்கு அப்பேர்ப்பட்ட ஆண்மை விளையவில்லை. ஒரு அநியாயத்தைத் துரத்துவதற்கு உரிய வன்மை கிடைக்க வில்லை. அதற்கான உணர்வைப் பெறவில்லை; அதற்காக நாம் வாழ்க்கையில் அதிகமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டோம். பாதுகாப்பைத் தேடுகிறோம். எனவே நாம்

எந்தப் பணியைச் செய்ய முடியும் என்று எனக்கு விளங்க வில்லை.

பாரதியார் சொன்னதைவிடத் தமிழ்க்கவிஞன் பாரதிதாசன் இன்னொருபடிமேலே போனான்.

> "ஏன் ஒரு கூட்டம் கோயிலிலே சென்று பிற மொழிக் கூச்சலைத் தடுத்து நிறுத்தக் கூடாது;
>
> ஏன் ஒரு கூட்டம் தெருவிலே சென்று பிற மொழி விளம் பரப் பலகைகளை மாற்றச் சொல்லி வற்புறுத்தக் கூடாது"

என்றான்.

"யாம் அறிந்த மொழிகளிலே......" என்று இவன் பாராட்டி, பின்னால் வந்த பாரதிதாசன் இவரைக் கையொற்றிப் பாடுகிறபோது, "தமிழ், பாரதியால் பெருமை பெற்றது; தமிழால் பாரதி தகுதி பெற்றான்" என்று கூறினார். இன்னும் சில பெரிய வர்கள் அந்தக் காலத்தில் பாரதியாரைப் பற்றிச் சரியாகத் தெரி யாமல், "இவர் ஒரு உலக மகா கவியா?" என்று சொன்னபோது கூட அதைத் திருத்தி எதிர்த்து முழங்கிய முதல் சிறப்பு பாரதி தாசனுக்குத்தான் உண்டு. இன்னும் சொல்லப்போனால், அவர் அன்றைக்குப் பாரதியாரைப் பற்றிப் பாடியவரிகள் இருக்கின்றனவே, "குவிக்கும் கவிதைக் குயில்" என்ற தொடர்ச்சி வரிகள், அதற்கு இணையான பாராட்டு வரிகளை இதுவரைக்கும் எந்தக் கவிஞனும் பாரதிக்குச் சூட்டிவிட வில்லை என்பதை மறந்துவிடக் கூடாது. "படரும் சாதிப் படைக்கு மருந்து," போன்ற...... அந்த வரிகளை எல்லாம் சொல்லிக்கொண்டு பொழுதை வீணாக்க விரும்பவில்லை. எதற்காகச் சொன்னேன் என்றால், அப்படியெல்லாம் பாடுகிற பாட்டு எதன் மூலம் வந்தது? என்னுடைய சிறப்புக்குரிய பாரதியையா, "நீங்கள் உலக மகா கவி" என்று ஏற்க மறுக்கி றீர்கள் என்ற மறுப்பின் அடிப்படையில் வந்ததின் காரண மாகத்தான் ஒருவன் பெரிய கவிதையைப் படைக்கிறான். Poetry is the spontaneous overflow of powerful feelings என்பது உண்மையானால், பாரதி எப்படி தன்னுடைய நாடு விடுதலை அடைய வேண்டும் என்பதற்காக—அவர் பாஞ்சாலி சபதத்தைப் பாடினாலும் 'பாரத விடுதலை'. நேரடியாகத் தேசிய விடுதலையைப் பாடினாலும் 'பாரத விடுதலை' என்று எந்தப் பக்கம் திரும்பினாலும் அதனுடைய அடிப் படை முத்திரையை, தன்னுடைய அடிப்படைக் கோட்பாட்டை

வைத்துப் பாடிய பெருமை பாரதிக்கு உண்டு என்று சொன்னால், அதுபோல் பின்னால் வருகின்ற பாரதிதாசன் போன்றவர்கள் தங்களுடைய தமிழ் உணர்ச்சிகளை, நாட்டு உணர்ச்சிகளை, தங்களுடைய சமூகச் சீர்திருத்தப் பாடல்களைப் பாடுவதற்கு எந்த இடத்திலும் தயங்கியதே கிடையாது. அதே நேரத்தில் எனக்குத் தெரிய, பாரதிதாசன் மிக வேண்டியவர்கள் சிலரைக் கூடச் சாடி இருக்கிறார்;. இன்னும் பலரை எல்லாம் அவருடைய சம கால அரசியல் தொடர்புடைய மற்றவர்களை எல்லாம் சாடி இருக்கிறார். எனக்குத் தெரியப் பாரதிதாசனால் சாடப்படாத ஒரே ஒரு பெரிய மனிதர் பாரதி மட்டும் தான் (கைதட்டல்.) நான் இதைச் சொல்வதற்குக் காரணம் ஒரு கோணத்தில் அப்படி ஒரு பெரிய மதிப்பை வைத்து இருந்தான் பாரதிதாசன். பாரதிதாசனுக்கு எத்தனையோ உணர்ச்சிகள் இருந்தாலும் கூட இந்தக் கோணத்திலே பார்த்தால், இன்னும் சொல்லப் போனால் கொள்கையால் அவர் வழியொற்றிக்கூட நடக்கவில்லை; முரண்பட்டுக் கூட நடந்து இருக்கிறார் பாரதிதாசன். அவர், 'இந்திய நாட்டு விடுதலை' என்று பாடினார் என்றால், இவர் 'திராவிட நாட்டு விடுதலை'. பிராமணர், பிராமணர் அல்லாதவர் என்ற கோட்பாட்டில் இரண்டு பேருக்கும் முரண்பாடான கருத்துகள்'' உண்டு. ஆனாலும் கூட இத்தனைக்கும் பின்னாலும், ஒரு தலைவனை ஏற்க முடியும் என்பதற்கு வழிகாட்டிதான் பாரதிதாசன். அந்த அளவிற்கு முரண்பட்ட கொள்கைகளை உடையவர்கள் கூட என்னுடைய மாணவனாக இருக்கலாம் என்று ஒப்புக் கொண்ட உண்மையை உரைக்க வைத்தான் பாரதி. எனவே, மாணவர்கள் என்னுடைய கொள்கையைத்தான் ஏற்க வேண்டும் என்பதல்ல. எனக்கு ஒரு கோட்பாடு இருக்கலாம்; என்னுடைய மாணவர்கள் இறையன்பு படைத்தவர்களாக, எனக்கு முரண்பட்டவர்களாகக் கூட இருக்கலாம். ஆனால் என் மாணவனாக இருப்பதை என்னால் அனுமதிக்க முடியும், என்னைக் கேட்டால், எங்களை விட ஒரு சிறந்த பேராசிரியர் பாரதி. அவரைப் பின்பற்றியவர்களை இன்றைக்கும் பாராட்டு கிறோம் என்று சொன்னால், வாழ்த்துகிறோம் என்று சொன்னால் அந்தப் பெருமையைப் பாரதியைத் தவிர தமிழ்நாட்டில் வேறு எந்தக் கவிஞனும் பெறவில்லை, இந்த நூற்றாண்டில். ஏனென்றால் மற்ற கவிஞர்கள் எல்லாம் பாடி இருக்கிறார்கள். பாரதிதாசன் சாடிய உடனே கண்ணதாசன் ஒரு போடு போட்டார். உங்களுக்குத் தெரியும். "குரல் கெட்ட குயிலே கேள்'' என்று அவர் பாடியது உண்டு; சாடியது உண்டு; பின்னால் அவர் மாற்றிக்கொண்டதும் உண்டு. அந்தக் கால

கட்டங்களில் ஒவ்வொருவரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் யாராலும் தாக்கப்படாத, யாராலும் கை வைக்க முடியாத ஓர் உயர்ந்த உன்னதமான இடத்தை அடைந்த பாரதியை உண்மையிலேயே நெஞ்சாரப் பாராட்டுவதில் நமக்கு முழுப் பங்கு உண்டு. ஒவ்வொரு தமிழ்க்குடிமகனும் அவனைப் பாராட்ட வேண்டும். (கைதட்டல்).

அதே நேரத்தில் ஒன்றை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். ஏனென்றால் நிறைய உரைகள் எல்லாம் நிகழ்த்த இருப்பதனாலே நான் வேகமாகப் பேசினாலும் எனக்கு அவருடைய பாடல்களில் பிடித்த பல பகுதிகள் உண்டு. நான் ஒரு ஆசிரியனாக இருந்தவன் என்ற முறையிலும் அவற்றை எல்லாம் படித்து இருக்கிறேன். அவர் சொன்னார் ஒரு வரி, "தேடிச் சோறு நிதம் தின்று......"., வாழ்க்கையைக் கூட அவன் எவ்வளவு அருமையாகப் பார்த்து இருக்கிறான். எத்தனையோ மனிதர்கள் வெறும் வெட்டிக் கூட்டங்களாக இருக்கிறார்கள் என்பது, 1921–க்கு முன்னா லேயே அவனுக்குத் தெரிந்து இருக்கிறது. இப்போது அந்தக் கூட்டம் அதிகம். ஏனென்று கேட்டால் ஓர் உண்மையைச் சொல்வேன். 1921—ல் பாரதியார் பாடியபோது இந்தியத் தாய்க்கு 30 கோடி முகங்கள் தான் உண்டு. ஆனால் இன்றைக்கு 86 கோடி முகங்கள். எவ்வளவு வேகமான வளர்ச்சி; இதில் நம்முடைய முயற்சி, நம்முடைய அயராத உழைப்பு, இதில் எந்தக் குறையும் கிடையாது. (சிரிப்பு) ஆனால் 30 கோடி முகங்கள் உடையதாக இருந்திருந்த இத்தியத் தாய்க்குக்கூட வேடிக்கை மனிதர்கள் அதிகம் பேர் இருந்திருக்கிறார்கள் என்ற வருத்தம் அவருக்கு இருக்கிறது என்று சொன்னால், இப்போது வேலை வாய்ப்பு இல்லாமல், தொழில் வாய்ப்பு இல்லாமல், வாழ்வதற்கே என்ன வழி என்றே புலனாகாமல், அலைந்து திரிகின்ற 25 இலட்சம் பேர் தமிழ் நாட்டில் மட்டும் வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்து இருக்கிற இந்தக் காலகட்டத்தில் வெட்டி மனிதர்களாக வேடிக்கை மனிதர்களாக எத்தனை பேர் உலவுகிறார்கள்! அத்தனைக்கும் இடையில் ஒரு "மனிதனைக்" காண்பது அரிதாக இருக்கிறது. அத்தனைக்கும் இடையில் ஓர் உணர்ச்சிக் கவிஞனைக் காண்பது அரிதாக இருக்கிறது.

கவிஞர்கள் என் மீது வருத்தப்படக் கூடாது. உடனே செய்தி போட்டுவிடுவார்கள், கவிஞர்களைக் கடுமையாகச்

சாடினார் என்று. கவிஞர்கள் நிறையட்பேர் எழுதுகிறார்கள். ஆனால் எழுதிக் குவித்தது எத்தனையோ? அதில் எத்தனை நிற்கிறது? சில பேருடைய கவிதைகளை நான் பார்க்கிறேன். அது குப்பை; ஒப்பிலாததாயினும் குப்பை. புதுக் கவிதை வந்ததால் வேறுபாடு ஒன்றும் இல்லை இங்கும் சொற்கூட்டம் உண்டு, அங்கும் சொற்கூட்டம் உண்டு. இரண்டிலும் சிறப்பு உண்டு. நான் ஒரு நடுவராக இதைச் சொல்ல விரும்புகிறேன் ஏனென்று கேட்டால் இந்தத் தலைப்பை விட்டு விலகி அந்தப் பகுதிக்குப் போக விரும்பவில்லை. அதேநேரத்தில் கவிதை. களை எழுதி கட்டுரைகளை எழுதிக் குவித்தும் கூட அந்த அடிப்படையில் நம்முடைய ஐயா மகாலிங்கம் ஆதங்கப்பட்டார்களே, அந்தப் பகுதிகளை நாம் தொடவே இல்லையே! தமிழை வளர்த்து இருக்கிறோமா? என்றால், தமிழ் வளரவில்லை என்று நான் அடித்துச் சொல்வேன். அதாவது 10 அல்லது 20 ஆண்டுகளில் வேறு சில இனங்களில் தான் சீர் திருத்தம் செய்ய முடிந்திருக்கிறது. சீர்த்திருத்தம் அடைவது வேறு. வளர்வது என்பது வேறு. உலகில் பிற மொழியாளர்கள் எந்த அளவுக்கு வளர்ந்து இருக்கிறார்களோ அந்த அளவுக்கு நாம் வளர்ந்து இருக்கிறோமா என்பதுதான் கேள்வி. 400 அல்லது 500 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்ட ஒரு மலையாள மொழி ஏற்றம் பெற்று இருக்கிற அளவுக்கு நம் மொழி ஏற்றம் பெற்று இருக்கிறதா? 1400–ல் சாசர் காலத்தில் இருந்த ஆங்கிலம் இப்போது இல்லை. அன்றைக்குச் சாசர் 'உறூம்' என்று சொன்னால் 'whom'. அதே இன்றைக்கு 'whome' என்று சொல்லமாட்டோம். 'whome' என்று குறித்துக் கொள்கிறோம். எனவே சாசர் காலத்து ஆங்கிலம் வேறு; இன்றைக்கு இருக்கிற ஆங்கிலம் வேறு. அது வளர்ந்து இருக்கிற அளவுக்கு நாம் வளர்ந்து இருக்கிறோமா? பின்னால் வந்த ஒரு 'மலாய்' மொழி, அதனுடைய நிலத்தில் முற்றிலும் 'மலாய்' மொழி தான் ஆட்சி மொழி, கல்வி மொழி என்றெல்லாம் முற்றிலும் வெற்றி பெற்ற அளவுக்குத் தமிழ் வளரவில்லையே. "நமது தமிழ் உயர் வென்று நாம் சொல்லிச் சொல்லித் தலைமுறைகள் பல கழித்தோம்; குறை களைந்தோம் இல்லை."

அருள்கூர்ந்து நான் உங்களை வேண்டிக்கொள்வது, நீங்கள் ஒரு தூதுக் குழுவாகச் சென்று உடனடியாகத் தலைவரைச் சந்தியுங்கள். பிற தொண்டுகளை நான் கவனித்துக் கொள்கிறேன். (கைதட்டல்). இந்தக் கால கட்டத்தில் நாம் அதைச் செய்யத் தவறி விடுவோம் என்று சொன்னால் பிறகு இப்படிப் பேசிப் பொழுதைப் போக்கிக்கொண்டு, பாரதியி

னுடைய நயங்களை எல்லாம் எடுத்து விளக்குவதில் உங்களை விட எனக்கு வல்லமை அதிகம். அதிலும் கூடக் கொஞ்சம் பணம் அதிகம் கொடுத்தால் இன்னும் நன்றாகவே விளக்கு வேன். நாங்கள் எல்லாம் விளக்கிப் பழக்கப்பட்டவர்கள். விளக்குவது என்றால் நீங்கள் பாத்திரங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது. 'பாத் திறன்களை' விளக்கிப் பழக்கப் பட்டவர்கள் நாங்கள். எனவே அதை விளக்கிப் பழக்கப் பட்டவர்களுக்குக்கூடத் தொகை ஏற ஏற, விளக்கம் அதிகம் ஆகும். அது அல்ல தமிழ் வளர்ச்சி. அதை நினைத்து நாம் மயங்கிக்கொண்டு இருக்கக் கூடாது. அது ஒரு பகுதி. அது தேவை. இல்லை என்று நான் மறுக்கவில்லை. 10, 20 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட இன்றைக்குச் சொற்பொழிவுத் திறன் வளர்ந்து இருக்கிறது; பேச்சுத் திறன் வளர்ந்து இருக்கிறது; உரையாடல் திறன் வளர்ந்து இருக்கிறது. அதையெல்லாம் நாம் மறுக்கவில்லை; ஆனால் ஒட்டுமொத்த மாக நாம் கண் முன்னால் பார்க்கிறோம். அவர்கள் சொன் னார்கள், மழலைப் பள்ளிகள் எத்தனை தெரியுமா? 25 ஆயிரம் பள்ளிகள். அரசு இவைகளுக்கு ஒப்புதல் கொடுத்தது எத்தனை தெரியுமா? கேட்டால் வியப்பு அடைவீர்கள். 22 பள்ளிகளுக்கு மட்டும் தான். மீதி அத்தனையும் ஒப்புதல் பெறாத———நம்முடைய கலைஞர் அவர்கன் சொல்வார்கள் ——— 'கல்வி என்னும் ஓடையில் மிதக்கும் திமிலங்கங்கள், என்று; அந்த வகையின. என்னைக் கேட்டால் ஒரு தொழிலைத் தொடங்குவதைவிட, ஒரு கடையை வைப்பதைவிட, இப் போது ஒரு மழலையர் பள்ளி தொடங்குவதுதான் சிறந்தது. ஏனென்று கேட்டால் 200, 300 ரூபாய்க்கு மனித உழைப்புக் கிடைக்கிறது. ஒரு எம். ஏ., எம். எஸ்ஸி, எம். காம். பட்டம் பெற்றவர்கள் 200, 300 ரூபாய் குறைந்த சம்பளத்திற்கு மலிவான பொருளாகக் கிடைக்கிறார்கள். மக்கள் செல்வம் என்பது **"It is a natural resource".** ஆனால் இங்கே மிகவும் மலிவாகக் கிடைக்கிற ஒரு பொருள். அதைப் பயன்படுத்துகிறார்கள்.

அரசு 7–ஆவது வகுப்பு வரைக்கும் யார் வேண்டு மானாலும் எங்கு வேண்டுமானாலும் படிக்க வைத்து, எப்படி வேண்டுமானாலும் சான்றிதழ் கொடுக்கலாம் என்ற அனு மதியை அந்தக் காலத்தில் வழங்கி இருக்கிறது. அதனுடைய விளைவு 7–ஆம் வகுப்பு வரைக்கும் யார் வேண்டுமானாலும் நடத்தலாம். அதற்குப் பிறகுதான் ஒரு கட்டுக் கோப்பில் வருகிறது. அதேநேரத்தில் நம்முடைய அரசுச் சார்பான பள்ளிகளைப் பார்த்தால் பள்ளிகளாகவே இல்லை; பல

கோணங்களில்; நான் இன்னும் உள்ளே போக விரும்பவில்லை. அப்படி இருக்கும்போது ஒரு தந்தைக்கு–ஒரு நாகரிகம் படைத்த பக்கத்தில் இருக்கிற ஒரு மழலையர் பள்ளி, ஒரு நகராட்சிப் பள்ளி இரண்டையும் பார்த்த உடனேயே, நகராட்சிப் பள்ளியிலா சேர்ப்பது; இது ஒரு பள்ளிக் கூடமா என்று நினைக்கிற நினைப்பையும் அவனுக்குத் தருகிறது. பல கட்டங்களில் இப்படி நடக்கிறது. அதேநேரத்தில் ஆசிரியர்கள் மீது ஏதேனும் வருத்தப்பட்டுச் சொன்னால், உடனே சட்டப் பேரவைத் தலைவர் சொன்னார் என்று செய்திகளில் போட்டு, நான் சொன்னதை எல்லாம் அங்கேயும், இங்கேயும் வெட்டி, ஒட்டுப் போட்டு வருகிறது.

ஆசிரியர்கள் தங்களுக்கு எந்த அளவுக்கு அதிக ஊதிய உயர்வு கிடைக்கிறதோ அதற்குப் பிறகு பொறுப்பு உணர்ந்து இந்த நாட்டுக் குடிமகனை உருவாக்க வேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் செயல்படுவார்கள் என்று சொன்னால் வெகு விரைவில் இந்த நிலையை மாற்றலாம். நான் ஓர் ஆசிரியனாக இருந்தவன். அதற்காகச் சொல்கிறேன். நான் ஒரு கல்லூரி முதல்வராக இருந்து, 6 மணி நேரம் நான் பாடம் எடுக்க வேண்டுமென்று எனக்குக் கடப்பாடு இருந்தாலும், 6 மணி நேரத்திற்கும் அதிகமாகப் பாடம் நடத்திப் பழக்கப்பட்டவன். இருந்தாலும் கல்லூரி முதல்வர்களுக்கு என்ன பெயர் என்று சொன்னால் "பாடம் எடுக்க முடியாத முதல்வர்". (Non Teaching staff) அலுவலர் என்ற முறையிலே சொல்லவில்லை. பாடம் எடுக்க முடியாத முதல்வர். கல்லூரியில் அவர் பாடம் எடுக்க முடியாது. எனக்குத் தெரியும். அப்படி ஒரு நிலை இருந்தும்கூட நாம் அதையும் மீறிச் செய்கிறோம் என்று சொன்னால் அது ஓர் உணர்ச்சி. எதற்காக என்னை ஒரு மாணவன் நம்பி வருகிறானோ அவனை நான் படைத்து வளர்த்து அனுப்பவில்லை என்று சொன்னால், நாம் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்கு என்ன மதிப்பு? ஒரு கையெழுத்துப் போடுவதற்காக ஒரு முதல்வர் தேவையில்லை என்று கருதுகிறவன் நான். அதை யார் வேண்டுமானாலும் 'முதல்வருக்காக' என்று போட்டுவிட்டுப் போகலாம். நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்கிறேன்——25 இலட்சம் பேர் வேலைக்காகக் காத்து இருக்கிறார்கள். அதேநேரத்தில் 5½ கோடி மக்களில் பல பேருக்கு அடிப்படை வசதிகூடக் கிடைக்கவில்லை. என்னுடைய தொகுதியில் கொன்னக்குடி என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் 72 அகவை படைத்த ஓர் அம்மையார் என்னைப் பார்த்துக் கேட்டார்கள். 'தம்பீ, நான்

சாவதற்குள்ளே குடிதண்ணீர் இந்த ஊருக்கு வந்து விடுமா" என்று கேட்டார். நான் நினைத்துப் பார்த்தேன். விடுதலைக்கு முன்னால் 30 ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்து, விடு தலைக்குப் பின்னால் 42 ஆண்டுகள் வாழ்ந்த ஓர் அம்மை யாருக்கு அடிப்படைத் தேவையான ஒரு குடிதண்ணீரைக் கூட நம்மால் கொடுக்க முடியவில்லை. எதற்காக இந்த விடுதலை? நம்மால் மொழியையும் வளர்க்க முடியவில்லை. உண்மை களைப் பேசவும் முடியவில்லை. மனிதர்களை வளர்க்க முடியவில்லை. மன வளங்களைப் பெருக்க முடியவில்லை. விடுதலையினுடைய அடிப்படைத் தேவைகளைக் கூட நிறை வேற்ற முடியவில்லை. எதற்காக இந்த விடுதலை? (கை யொலி). எதற்காக இந்த விடுதலை என்று கேட்பதிலே என்ன தவறு? எனவே அவற்றை உணர்ந்து இங்கு இருக்கிற பெரு மக்கள் தமிழுக்கு ஏதேனும் நல்லதைச் செய்யவேண்டும்; ஏதாவது ஒரு மாற்றத்தை விளைவித்தாக வேண்டும் என்ற மன உணர்வோடும், வெறி உணர்வோடும் அனைவரும் ஒருங் கிணைந்து செயல்படுவோம் என்று சொன்னால், அது சட்டப் பேரவைத் தலைவர் என்ற முறையில் மட்டுமல்ல, ஒரு சாதாரணத் தமிழ்க்குடிமகனாக, எந்தத் தெருவுக்குக் கூப்பிட் டாலும் நான் வரத் தயார். (கையொலி) எந்த இடத்திற்கு வரச் சொன்னாலும் தயார்.

நான் இப்போது செய்து கொண்டிருப்பதை மட்டும் சொல்லிவிடுகிறேன். என்னுடைய துறையில்— சட்ட மன்றத்தில் பல துறைகள் இருக்கின்றன——எல்லாக் கோப் புகளும், ஆளுநருக்கு, பிற மாநிலத்தவருக்கு, நடுவண் அரசுக்கு, நீதிமன்றங்களுக்கு அனுப்புப்படுகின்ற கோப்பு களைத் தவிர, மீதி அத்தனை கோப்புகளும் தமிழில் பேணப் படுகின்றன. (கையொலி). இப்போது நான் எந்த ஊருக்குப் போனாலும் அங்கே இருக்கிற தொழிலாளர் நல அலுவலரைக் கூப்பிட்டு, தொழிலாளர் நல ஆய்வாளர் என்று சொல்கிற 'இன்ஸ்பெக்டர் ஆஃப் லேபர்'-ஐக் கூப்பிட்டு விளம்பரப் பலகைகளைத் தமிழில் மாற்றுவதற்கான இரண்டு சட்டங் களையும் எடுத்துச் சொல்லி, நானே நேரடியாக அந்தப் பணிகளைச் செய்து, பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு ஊர்களில் இருந்து அவர்கள் 100-லிருந்து 200 விளம்பரப் பல கைகளின் பெயர்களை எழுதி எனக்கு அனுப்புகிறார்கள். உடனே அதைத் தமிழ் வளர்ச்சித் துறையில் கொடுத்து, மொழி பெயர்த்து என்னுடைய பொறுப்பிலேயே நான் அனுப்பிக்

கொண்டிருக்கிறேன். அதை இப்போது 9 அல்லது 10 மாவட்டங்கள் வரைக்கும் செய்து இருக்கிறேன். ஒரு தெருவைத் தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு ஊருக்கு ஒரு தெரு. இன்னும் விரிவுபடுத்த வேண்டும். அது பெரிய பணி. எனவே இதுபோன்ற பணிகளை நான் நினைக்கிறேன், ஒரு சட்டமன்றத் தலைவர் என்ற முறையில் சட்டமன்றம் நடக்கிற காலத்தில் அவருக்கு இருக்கிற பொறுப்புகள் ஒருபுறம் இருந்தாலும் மற்றக் காலங்களில் அவர் தமிழ்க்குடிமகனாகவே வாழ வேண்டும் என்ற உணர்வோடு இருப்பதனால்தான் இதைத்தொடர்கிறேன். (கையொலி) இந்த உணர்வைத் தந்த பெருமக்கள் எத்தனையோ பேர் இருந்தாலும் அதில் பாரதிக்குப் பெரும் பங்கு உண்டு என்று கூறி (கையொலி) அவருடைய புகழ் என்றென்றைக்கும் நிலைத்து இருக்கட்டும்; எந்தக் கனவுகளுக்காக அவர் இவ்வளவு சிந்தித்தாரோ அந்தக் கனவுகள் நனவாவதற்கு நாம் கை கொடுப்போம் என்று கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

# கனவிலும் கசக்கும் !

ஒவ்வொரு நூற்றாண்டிலும் உலகத்தின் ஏதாவதொரு பகுதியில் சிந்தனையாளர்கள் தோன்றுகின்றனர். வாழ்ந்து வளர்ந்து, அதன் பட்டறிவு கொண்டு உலக மக்கள் அனைவரும் பின்பற்றலாம் எனும் பொது நோக்கோடு பல செய்திகளைத் திரட்டி நமக்குத் தெரிவிக்கின்றனர். சிலரது கருத்துகள் மிகச் சிறப்பாக இருந்தும் எடுத்துப் பயன்படுத்தவோ, உலகிற்கு உணர்த்தவோ ஆளில்லாமல் மடிந்து போகின்றன. சிலரது சிந்தனைகள் மட்டும் ஒருங்கு திரட்டப்பட்டுப் பின்னால் வரும் சிலரால் செயல் வடிவம் தரப்பட்டு மிளிர்ந்து நிற்கின்றன.

காரல் மார்க்ஸ் தந்த ‘மூலதனம்’ வெறும் நூலக, சிந்தனைத் தொகுப்பாக மட்டும் நின்றுவிடாமல் இலெனின் போன்றவர்களால் எடுத்துச் செயற்படுத்தப்பட்ட காரணத்தால் தான் இன்று ‘பொதுவுடைமை சார்ந்த நாடுகள்’ என்று சிலவற்றை அடையாளம் காணமுடிகிறது. ஆனால் அந்தச் சொல்லையே பயன் படுத்த விரும்பாத நாடுகள் உண்டு. அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் பொதுவுடைமைச் சிந்தனைக்கு மாறுபட்டு நின்று சிறப்படைந்திருப்பதைக் காண்கிறோம். தனியுடைமை நெறி (Capitalism) என்று இதனைக் கொண்டாலும் இந்நெறியிலும் மக்களை வறுமையற்ற வாழ்வுக்கு உட்படுத்த முடியும் என்று இந்த நாடுகள் மெய்ப்பித்து விட்டன,

மேலும் சர்வாதிகாரப் பொதுவுடைமை நாடுகளும் இருக்கின்றன. மக்களாட்சியை முழுமையாக அளிக்கும் தனியுடைமை நாடுகளும் உள்ளன. இந்தியாவில் ஒரு மாநிலத்திற்கு இருக்கும் உரிமையைவிட அமெரிக்காவில் உள்ள மாநிலத்திற்கு உரிமை அதிகம் எனலாம்.

ஆனால் இந்திய நாடு பின் பற்றுகிற பொருளாதாரம் மேற்குறிப்பிட்ட இரண்டிலும் வேறுபட்டது. ஒருவகையில் இரண்டன் கலப்படமும் கூட. அதனால் இந்தியா கலப்புப் பொருளாதாரக் கொள்கை (Mixed Economy) யாக விளங்குகின்றது.

இந்தியாவில் பலகோடி மக்களின் வறுமை தீராத நிலையில் இந்தப் பொருளதார நெறி ஏற்புடையதுதானா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

பொருளியல் நெறிகள் ஒரு புறமிருக்க, அரசியல் நெறிகள் பலவற்றை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரசியற் துறையில் மாக்கிய வல்லி நெறி என்ற ஒன்றுண்டு. கையாளப் படுகின்ற வழி முறை எதுவாக இருந்தாலும்சரி, இலக்கை அடைந்து விடவேண்டும் எனும் நோக்கோடு செல்வது அந்த நெறி. அவர்களுக்கு இலக்குதான் முதன்மையே தவிர வழி நேர்மையானதாக இருக்க வேண்டுமென்ற தேவையில்லை. உலகில் வன்முறையால் சிலவற்றை அடைந்துவிட முயல் பவர்கள் இந்த நெறியில் தான் இயங்குகின்றனர். ஆனால் காந்திய நெறி அத்தகையதன்று; இலக்கு எந்த அளவுக்கு உயர்ந்ததோ அந்த அளவுக்கு அதை அடையும் வழியும் தூயதாக இருக்க வேண்டும் என்பது காந்தியமாகும். உடைமை களைப் பொறுத்த மட்டில் காந்தியம் 'தருமகருத்தா' முறையை வற்புறுத்தினாலும் 'இலக்கு என்னும் வழியும்' உயர்ந்ததாக இருக்கவேண்டுமென்பதில் அது நிமிர்ந்தே நிற்கிறது. இன்னா செய்யாமை (அகிம்சை) யைக் கோட்பாடாக் கொண்ட காந்திய நெறி இந்தியாவிலேயே தனியாகப் பேணப்படாததால் தான் அரசியலில் வன் முறைகள் (Rowdism) தலை விரித்தாடுகின்றது. பகுத்தறிவு நெறி என்று ஒன்றுண்டு. இதை இங்கர்சால் சொன் னாலும் தந்தை பெரியார் சொன்னாலும் நோக்கு ஒன்றுதான். மூடநம்பிக்கைக்கு ஆட்பட்டு விடாமல் எதையும் ஆராய்ந்து முடிவுகட்டிச் செயற்படுத்துவதுதான் பகுத்தறிவு நெறி. மேலை நாடுகளில் எத்தனையோ பேர் இந்த நெறியை வற்புறுத்தி யுள்ளனர். எனினும் தேசத்தில் தந்தை பெரியார் இதற்கு முழு வடிவம் கொடுத்தவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவரது கோட்பாட்டை ஏற்றுக் கொண்ட அண்ணா போன்ற வர்கள் அரசு கட்டில் ஏறும் அளவுக்கு இந்த நெறி வேகமும் செல்வாக்கும் பெற்றது. பகுத்தறிவு என்பது எல்லா மாந்தர்க்கும் பொது என்றாலும் தமிழகத்தில் ஒரு காலகட்டத்தில் 'இதைக் கடவுள் பற்றாளர்கட்கு எதிரானது பகுத்தறிவியக்கம்' என்பது போன்ற மாற்றம் ஏற்பட்டுவிட்டது. மேலும் 'பகுத்தறிவு' எனும் போர்வை போர்த்த சிலர் நாணயமும் நேர்மையும் மற்ற அரசியல் வரம்பும் கடந்ததைக் கண்டு கசப்புற்றவர்கள் பகுத் தறிவு நெறி மீதே புழுதி வாரி இரைக்கத் தொடங்கிவிட்டனர். தெய்வநெறிக் கொள்கை படைத்தவர்கள் ஒரு மக்கள் கூட்டமாக நின்று கடவுளுக்குக் கட்டுப்பட்டு நற்செயல்

ஆற்றுவதாகக் காட்டினர். ஆனால் கள்ள வாணிகம் செய் வோர், கொள்ளையடிப்போர் ஆகியோர் தன் பாவங்களைப் போக்கக் கடவுட் பணியாற்றுவதைக் கண்டபிறகு இறைப் பற்றும் இத்தகைய போலிகளின் புகலிடமோ என்று எண்ணத் தோன்றி விட்டது.

இத்தனை நெறிகளுக்கும் அடிப்படையாகவும், ஒருங் கிணைந்த வாழ்வுத் திட்டங்களை உடையதாகவும் இருப்பது வள்ளுவர் நெறியாகும்.

இந்நெறி பல கோணத்தில்—வாழ்க்கையை முழுமையாய்ப் பார்ப்பது. அறம், பொருள், அரசியல், இல்லற நுட்பம் ஆகிய அனைத்தையும் ஒரு சேரத் தழுவுவது. ஆகையால்தான்,

‘எல்லாப் பொருளும் இதன்பால் உள – இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்’ என்று ...... ‘திருவள்ளுவ மாலை’ குறிப்பிடுகின்றது.

அற உணர்வு என்பது ஒவ்வொரு தனி மாந்தரிடமும் இருக்கத் தான் செய்கிறது. காந்தியடிகள் ஒரு சான்றோர் என்பது எவ்வளவு உண்மையோ அந்த அளவுக்கு உண்மை ஒவ்வோர் ஊரிலும் காந்தியடிகளுக்கு நிகரான சான்றோர்கள் சிலராவது உள்ளார் என்பதும்.

ஊர்ப்புறத் திண்ணையில் ஒதுங்கி நிற்கும் சான்றோர்கள் அரசியலுக்கு வாராமலும் செய்தித்தாளில் விளம்பரம் பெறாம லும் போய்விட்டதால் நம்மால் அவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனாலும் அறவுணர்வு படைத்த மாந்தர்கள் எல்லா இடத்திலும் பரவிக் கிடக் கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. அதில் மற்றொரு வருத்தம், இவர்களில் எவரும் இலக்க அடிப்படையில் இணைந்து செயற்படாமல், ஊருக்கு ஒருவராக ஒதுங்கியே நின்றுவிட்டனர் என்பது தான்.

‘கூடிச் செயற்படாத குற்றத்தாலும்’ சமுதாயத்தில் ஏற்படும் தீங்குகளைக் கூட அமைதியாகப் பார்த்துப் பொறுத்துக் கொள்ளும் மனப் போக்காலும் இவர்களது அறவாழ்வும், அமைதிக் குணமும் ஒதுங்கியே நின்றுவிட்டன.

இதன் விளைவு, வள்ளுவர் 108ஆம் அதிகாரத்தில் குறிப் பிடும் கயவர்கள் பல்கிப் பெருகிவிட்டனர். முறைகேடான வர்கள், ஒழுக்கக் கேடர்கள், சுறண்டல் பேர்வழிகள், வன்

முறையாளர்கள், பொது நலப் போர்வையில் தன்னலம் பேணும் இழுக்கர்கள் ஊர் ஊராகப் பெருகிப் போய்விட்டனர்.

ஓரளவு நீதி நெறியுடையவர்களும், உயர் நிலைச் சான்றோர்களும் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டனர். 'நமக்கேன் வம்பு?' என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இரண்டு பேர்களுக்குள் நடைபெறும் சண்டையை விலக்கி விடுபவன் குத்துப்பட்டுச் சாவதைக் கண்ணால் பார்த்தவர்கள் என்ன முடிவு செய்வார்கள்?

நாம் சொல்வதை எங்குச் கேட்கப் போகிறார்கள் என்ற சலிப்பும், எதையாவது சொல்லிவிட்டு அவமானப் படுவதை விட ஒதுங்கி உட்கார்வதே மேல் என்ற எண்ணமும் அறவுணர்வாளர்களை அழுத்தி விட்டது. அறம் வற்புறுத்தப் படாத போது அட்டூழியம் தலை விரித்து ஆடத் தொடங்கி விடும்', அட்டூழியம் செய்பவர்கள் பெரியாரைத் துணைக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் இல்லாதவர்கள்; அவர்களைத் துணையாக் கொண்டு ஆகப் போவது ஒன்றுமில்லை என்று முடிவுக்கு வந்தவர்கள்; எனவே தன்போக்கில் இயங்கும் சமூகக் குற்றவாளிகள் பெருகி விட்டனர். இந்தக் குற்றவாளிகள் சமுதாயத்தில் பணத்தாலும், வன்முறையாலும் வாங்கப்பட்ட செல்வாக்கை வைத்துக் கொண்டு பல்வேறு அரங்குகளுக்குத் தலைமை தாங்கவும் வந்துவிடுகிறார்கள். அவர்கள் தள்ளி விடும் புளுகு மூட்டைகள் தேன்கலந்து விழுவதால் ஏமாந்துப் போகும் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள்'.

இவர்களிடம் வாக்கு நாணயம் இல்லை. வாழ்க்கைத் தூய்மையும் இல்லை. ஆனால் இந்த இரண்டும் இருப்பது போல் ஒரு பாவனையை உருவாக்கி விடுகின்றனர்.

இவர்களது சொல் வேறு; செயல் வேறு. இன்று பொது வாழ்வில் இத்தகையோர் எண்ணிக்கையே அதிகம்.

'பொதுநலம் பேசும் புண்ணியவான்களின்
    போக்கினில் அநேக வித்தியாசம்—இவர்
புதுப்புது வகையில் புலம்புவ தெல்லாம்
    புலியை மயக்கும் வெளி வேஷம்'

என்று பட்டுக் கோட்டை கூறுவது வெளிப்டையான உண்மை.

'சுருட்டுகின்றார். தம் கையில் கிடைத்தவற்றை'

என்று பாவேந்தர் பாடுவது கூரிய சமுதாயப்பார்வை.

'அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்ப தல்லால்
பொதுநலத்துக்கு இதுவரையும் என்ன செய்தோம்?'

என்று கேட்கிறார் பாரதிதாசன்.

பலர் சொல்வேறு, செயல்வேறாகக் காட்சியளிக்கிறார்கள் என்பதைத்தான் மேற்கண்ட வரிகள் படம்பிடிக்கின்றன.

இப்படி வாழ்பவர்கள் இரட்டை நிலையினர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி ஊரை ஏய்ப்பவர்கள்.

'இவர்களை எண்ணும் போதெல்லாம் மனம் வேகின்றது; நெஞ்சு கொதிக்கிறது'.

இவர்கள் என் நினைவிற்கு வரும்போதெல்லாம் ஒரு கசப்புணர்வே எழுந்து நிற்கிறது. நினைவில் மட்டு மன்று; இவர்களைக் கனவில் நினைத்தாலும் கசப்புத்தான் எழுகின்றது.

இப்படிக் கசப்படைபவன் நான் மட்டுமல்லன். வள்ளுவன் அடைந்த கசப்பைத்தான் இங்கே நான் வழிமொழிகின்றேன்.

'கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு,

அங்கொன்றும் இன்கொன்றுமாக விரும்பிய குறைகளை, குற்றங்களைக் கண்டே — போலி மாந்தர்களைக் கண்டே— வள்ளுவர் மனங்கசந்து பாடுகிறார் என்றால் எங்குப் பார்த் தாலும் குற்றங்களையும் — அதிலும் தேசியக் குற்றங்களையும் — திரும்பும் இடமெல்லாம் தீய மாந்தர்களையும், பார்த்து மனம் வியர்த்துப் போன எனக்கு எவ்வளவு கசப்பு இருக்கும்?.

போலி மாந்தர்களை அடையாளம் கண்டுகொள்ளவும் அவர்களைப் பொருட்படுத்தாது புறக்கணிக்கவும் துணியும் அன்பர்கள் பெருகும் வரை என் கனவிலும் கசப்பே விஞ்சி நிற்கும்.

# இக்காலக் கவிதைகளில் புதுப்பார்வை

சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், சமய இலக்கியம் என வகைமை அடிப்படையில் இலக்கியங்களைப் பிரித்துள்ளோம். அச்சுக்கலை தந்த அளவிடற்கரிய வாய்ப்பால், இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களை இக்கால இலக்கியம் **(Modern Literature)** என்றே பெயர் கொடுத்து அழைக்கிறோம். அதுவும் உரைநடை ஆக்கி வளர்ந்துவிட்ட பிறகு செய்தித்தாள்களும், நூல் வெவியீடுகளும் உரைநடை வளர்ச்சியில் இடையறாது ஈடுபட்டு வரும்போது உரை நடைக்கு முதன்மை கிட்டிவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. கவிதை வடிவில் இருந்த காப்பியம் உரைநடை வடிவம் பெறும்போது புதினம் ஆகிவிடுகிறது. கவிதை வடிவில் அமைந்த குறுங்காப்பியம் உரைநடையில் சிறுகதையாகி விடுகிறது.

'வடிவம்' என்ற ஒன்றை இழந்தவுடனேயே எந்தப் படைப்பையும் உரைநடை தாங்கிப் பிடித்துப் புறப்பெயரையும் கொடுத்துவிடுகிறது.

நாடகங்கள் மட்டும் இதில் ஒரு விதிவிலக்கைப் பெறு கின்றன. கவிதையில் இருந்தாலும், உரைநடையில் இருந் தாலும் 'நாடகம்' தன் பெயரை இழக்கவே இல்லை.

எனவே நாடகம், புதினம், சிறுகதை மட்டுமன்றி உரை நடையும் இக்கால இலக்கியத்தின் வகைகளாகிவிட்டன. இதற்கு மேலும் — இத்தனை அளவு உரைநடையின் செல் வாக்கு மிகுந்து நிற்கும் நிலையிலும் — கவிதை மட்டும் கவிதை யாகவே நிற்கிறது தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்பும், பின்பு இந்த இருபதாம் நூற்றாண்டு வரையிலும் கவிதை கவிதையாகவே நிற்கிறது. கவிதை வேண்டுமானால் 'வடிவம்' அற்ற காரணத்தால் 'புதுக்கவிதை' எனும் புதுப் பெயரைத் தாங்குகிறது என்றாலும் கவிதை — கவிதைதான்.

உரைநடையில் செல்வாக்கு ஓங்கி வளர்ந்துவிட்டதாலும் கட்டுரை, புதினம், சிறுகதை, உரைநடை, நாடகம் எனப் பலவகையிலும் உரைநடை விரிந்து பரந்து செல்வதானாலும் கவிதையின் ஆட்சி குறைந்து விட்டதோ என்று எண்ணத்

தோன்றும். மேற்போக்காக அப்படித் தோன்றினாலும் ஆய்வு நோக்கில் ஒன்றை உறுதிப்படுத்தலாம். கவிதை இலக்கியமும் உரை நடை இலக்கியத்தைப் போலவே வளர்ந்து வந்திருக்கிறது. வேகமாகவும், விறுவிறுப்பாகவும், 'மரபு–புதினம்' என்ற போட்டியுணர்வோடும் வளர்ந்துள்ளது எனலாம். எனினும் இதை மற்றொரு கால் ஆராயலாம்.

வளர்ந்து வந்துள்ள கவிதை இலக்கியங்களை ஊன்றிப் படிக்கும்போது பல உண்மைகள் புலப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் ஆழமான கருத்துக்களும் நுட்பமான உணர்வுகளும் புலப்படுத்தப்பட்டன. பக்தி இலக்கியங்களில் இறைவனைப் போற்றுதல் செய்து வானளாவப் புகழ்ந்து நெகிழ்ந்து நெக்குருகும் போக்கு இருந்தது.

சிற்றிலக்கியங்களில் புரவலர் மனநிலைக்கும் விருப்புக்கும் ஏற்பக் கருத்தோட்டங்களில் மாறுதல் ஏற்பட்டது. அதனால் 'உலா'ப்போன்ற தன்மைக் குறைவுகளும் ஏற்பட்டன. 'கூளப்ப நாயக்கன் காதலில்' இருப்பதுபோன்ற புலனுணர்ச்சித் தூண்டல்களும் தோன்றின. எனினும் அவற்றில் சந்த இனிமை கொடி கட்டிப் பறந்தது. 'விருத்தம்' பாடும் வாய்ப்பும் பிற்காலத்தில் சிந்து, பண்ணத்தி முதலியன பாடும் வாய்ப்பும் பெருகி பிறகு 'ஓசை' உயர்ந்து நின்றது. காதுக்கு இனிமை சேர்க்கும் வண்ணம் கவிதை வளர்ந்தது.

இலக்கியக் கூறுகளான வடிவம், உணர்ச்சி கற்பனை ஆகியவை மெருகு கொண்டு திகழ்ந்தன. கருத்தோட்டம் மட்டும் சற்றுத் தடுமாறிவருவதுபோல் ஒரு தோற்றம் உள்ளது. வீரத்தையும், காதலையும் பாடும் சங்க இலக்கியங்கள் உண்மையான காதலையும் வீரத்தையும் பாடின. இக் காலத்தில் காதல் உணர்வு மட்டும் மாறாமலும் வருகிறது; கவிதையிலும் அழகுற ஆட்சி செய்கிறது. ஆனால் வீரமோ — வாய் வீரமாக — வெற்றுணர்ச்சி ஆரவாரமாகத்தான் இருக்கிறது.

எதிரிகளை எச்சில் துப்பியே விரட்டிவிடுவோம் என்றும், மூச்சுவிட்டே எதிரிகளைத் திணற அடித்துவிடுவோம் என்றும் வீரவரிகள் வெளிவருகின்றன.

நடப்பியலைப் பார்க்கும் எவனுக்கும் இந்த வெற்று உணர்ச்சியும் வேகச் சொற்களும் கேலியாகப்படுகின்றன. அதனால் கவிஞன் கூற விரும்பும் கருத்தும் வலிமையிழந்து போகின்றது. வரவர நம் கவிஞர்களிடத்தில் மரபுணர்ச்சிகள்

குன்றி, நல்ல தமிழ் நடையும் இன்றிச் சொற்களைத் திரட்டி யளிக்கும் போக்கு வளர்ந்துவிட்டது என்று கூடச் சொல்லலாம். பொருந்தாக் கூற்றுகளும், வெற்றுச் சொல்லாட்சிகளும், ஆழமற்ற கருத்துப் போக்குகளும் மிகுந்துவிட்டன என்றே சொல்லலாம்.

பண்டைப் புலவர்களைப்போல் இலக்கியத்தைக் கலை நோக்கிலும், வாழ்வியல் நோக்கிலும் பார்க்காமல் இக்காலத்தில் வணிக நோக்கிலும், உலகியல் நோக்கிலும் படைப்பதால் ஏற் படும் விளைவு இது. அரசியல் சார்புகள் ஊடாடுவதாலும் பலரது கவிதைகளில் உண்மை செத்துவிடுகிறது; அவர்கள் கூறும் கருத்தை ஒரு காலகட்டத்தில் அவர்களே தவறு என்று தள்ளும் நிலை ஏற்படுகிறது.

என்றாலும் தரமான கவிஞர்கள் தோன்றாமல் இல்லை; தரமும், நயமும், நிலைபேறும் படைத்துக் காலங்கடந்தும் வாழும் கவிதைக் கூறுகள் இல்லாமல் இல்லை. குப்பைகளைக் குவித்துப் போட்டு அதற்குள் மணிகளைத் தேட வேண்டியிருக் கிறதே என்ற இடர்ப்பாடு இருந்தாலும் மணி மணியான கவிதை வரிகளும், நயம் காட்டும் சொல்லாட்சிகளும், வளங்குறையாக் கருத்துச் செல்வமும் இன்றும் மேலோங்கி நிற்கின்றன.

இக்காலக் கவிஞர்களில் சிலர் புதிய சொல்லாட்சிகளைக் கையாள்வதிலும் புதிய பார்வைகளை நமக்கு எடுத்துச் சொல்லி வியப்பூட்டுவதிலும் முன்நிற்கின்றனர்.

நமக்கு ஏற்கனவே தெரிந்த நிகழ்ச்சி. நாம் பல நூறு முறை படித்த வரிகள்; பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டு உரை விளக்கம் செய்யப்பட்டு அனைவர்க்கும் நன்கு அறிமுகப்படுத் தப்பட்ட வரிகள் —

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் அந்த வரிகளை இக்காலக் கவிஞர் ஒருவர் புதுக்கோணத்தில் சிந்தித்துப் பார்க்கிறார். நாம் இதுவரையிலும் கொண்டிருந்த கருத்தே மாறிப் போகிறது. ஏன் இப்படியிருக்கக் கூடாது என்று அவர் கேட்கும் போது நாமும் ஒரு நொடி திகைத்து நிற்கிறோம். அவர் கூறுவதிலும் உண்மை இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

கண்ணகி மதுரையை எரித்தாள் என்பது செய்தி. அவள் ஏவல் கேட்டு எரியங்கி வானவன் அச்செயலைச் செய்தான்.

'மாபத் தினிநின்னை மாணப் பிழைத்தநாள்
பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டையோர்
ஏவ லுடையேனால் யார்பிழைப்பார் ஈங்கென்ன'

அவன் கேட்கிறான்.

'பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க'

என்று கண்ணகி ஏவுகிறாள்.

இதில் எரிக்கப்படாமல் விதி விலக்களிக்கப்பட்டோர் பட்டியலை மீண்டும் ஒருமுறை கூர்ந்து நோக்கினால் புறநானூற்றிலும் ஓர் இடத்தில் இத்தகைய விதிவிலக்குத் தரப் பட்டிருப்பதைக் காணலாம்

'எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்' என்று கூறி இயலாதோர் பலருக்கும் முன்னறிவுப்புச் செய்த சால்பு ஈண்டு எண்ணத்தக்கது.

இந்தச் சால்பின் அடிப்படையில்தான் இளங்கோவடிகளும் தீயினால் எரிக்கப்படாமல் காப்பாற்றப்படக் கூடியவர்கள் பட்டியலை வெளியிடுகிறார். தீ 'தீத்திறத்தார் பக்கமே' சேர்கிறது.

இந்த அளவோடு நம் சிந்தனை நின்று போயிருந்தது. பன்னூறாண்டுகட்குப்பின் கவிஞர் தணிகைச் செல்வன் இந்த வரிக்குப் பொருள் விளக்கம் செய்கிறார்.

எரிக்கப்பட்ட நீத்திறத்தார் யார்? விதிவிலக்களிக்கப் பட்டோர் யார்? விதிவிலக்களிக்கப்பட்டோர் உயர்ந்த சாதி மக்கள். எரிக்கப்பட்டவர்கள் ஏழை அரிசன மக்கள் என்கிறார் அவர்.

"கண்ணகியார் வீசிவிட்ட மதுரைத் தீயிலே — அன்று
கருகிப்போன மக்கள் — எங்க ஜாதி மக்களே !
கண்ணகி போய்ஒசந்த ஜாதி ஜனங்களைமட்டும் — அவ
காப்பாத்தினாள் பிறகுயாரு? நாங்கள்தான் மிச்சம்!"

என்கிறார்.

இவ்வாறு சிலப்பதிகாரக் காலத்திலேயே தாங்கள் கொடுமைக் காளாக்கப்பட்டதாக அரிசனங்கள் நினைக்கிறார்களாம். தணிகைச் செல்வனை இப்படிக் கருத வைத்தது வெண்மணி யாக இருக்கலாம். இக்காலச் சமூக நிலையாக இருக்கலாம். அவர் கண்ணகியின் பார்வையில் போய் இப்படிப் பிழை காண்பது சரியா இல்லையா என்பதை ஆராய்ச்சியாளர்கள் முடிவு கட்டலாம்.

ஆனால் இப்படியும் இக்காலக் கவிஞர்கள் பார்க்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவே இதனைக் குறிப்பிட்டேன். அவர் மேற்காணுமாறு ஒரு பார்வையைச் செலுத்திவிட்டுத் தற்கால அரிசன மக்களின் மனக்குமுறலையும் காட்டி விடுகிறார்.

"நொந்து நொந்து வெந்து வெந்து இன்றுவரையில் — நாங்க
நூறுநூறு ஆண்டுகளாய் இந்தப் பூமியில்
சொந்தமென்று என்ன கண்டோம் பசியைத்தவிர — எங்க
சொத்து என்று என்னகண்டோம் உசிரைத் தவிர? "

வாழ்வின் அடிமட்டத்தில் உழல்கின்ற மக்கள் தங்கள் இழி நிலைக்கு யாரெல்லாம் காரணமானவர் என்று ஆழ்ந்து ஆராயும் போதும் அவர்களில் கண்ணகியும் ஒருவராக, முதல்வராக இருந்துள்ளாளே எனும் அளவுக்கு ஆராய்ச்சி நிற்கிறது. உண்மையில் கவிஞர் தணிகைச் செல்வனின் இந்தப் பார்வை முற்றிலும் புதியதுதான்.

சங்க இலக்கிய நடையிலிருந்து இக்காலக் கவிதை நடை பெருமளவுக்கு மாறிப் போய்விட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. சங்க இலக்கிய நடையில் எழுதினால் இக்காலத் தார்க்குப் புரியாது என்பதும் விரும்பிப் படிக்கமாட்டார்கள் என்பதும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையே, ஆனாலும் நல்ல இலக்கியப் புலமையும் கவிதைச் சொல்லாட்சித் திறனும் உடைய சிறந்த பாவலர்கள் இக்காலத்திலும் உள்ளனர். அவர்களால் செம்மாந்த நடையிலும் எழுத முடியும். தெளிவான கருத்துடனும் தேர்ந்த சொல்லாட்சியுடனும் நல்ல இலக்கி யத்தைப் படைக்க முடியும் என்பதற்குப் பெருஞ்சித்திரன் வழங்கும் 'மகபுகு வஞ்சி' ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

'மகபுகு வஞ்சி எனும் இவ்விலக்கியம் புதிதாகத் திருமணஞ் செய்விக்கப் பெற்று, கொண்டான்வீடு குடிபுகும் தலைமகள் ஒருத்திக்கு, அவள் மேற் கொள்ளவிருக்கும் வாழ்வியலுக்குத் துணையாக, நினைவில் இறுத்திக்கொள்ள வேண்டிய அறவுரைகளை முறையாக எடுத்துச் சொல்லும் முறையில் அமைந்தது. இதை ஆசிரியர் அகவியல், புறவியல், பொதுவியல் என்று பிரித்து வழங்கியுள்ளார். இதோ அதில் முதல் பாடல்

'அயன்மனை புகு அதிர்சிலம்படீஇ !
பயன்சுவைமொழி, பணிவுறழ்நடை
மீத்துயர்பொறை, பிழைமறப்பளி,
காத்துயர்நிறை, கரைசேர்களி கொளீஇ,
ஒருநாள் ஒருநாள் உறுகொண்கனொடு
திருநாள் காண்குவை தலைநாட்டகவே !'

ஆழ்ந்து படிப்பார்க்கு இதில் உள்ள அரும்பொருளும் நயமும் விளங்காமற் போகா.

இதில் முதலடி விளி; இறுதி இரண்டடிகள் பயன்தரும் முடிவு. இடை மூன்றடிகளும் அறவுரை.

இந்தக் கோணத்தில் பாடப்பட்டு வெளிவந்த நூல் இக் காலத்தில் இதுவொன்றே. இதில் மற்றொரு புதுமையும் உண்டு. ஆசிரியப்பா, அறுசீர், எண்சீர் விருத்தங்களிலும் சந்தப் பாக்களிலும்தான் இக்காலக் கவிதைகள் அமைகின்றன.

ஆசிரியம், வெண்பா, பெருவழக்காகவும் கலி (கலி விருத்தம் மட்டும்) அருகியும் வழங்கி வருகின்றன. ஆனால் வஞ்சிப் பாவில் யாரும் பாடுவதில்லை. இக்காலக் கவிதைகளில் குறளடி வஞ்சிப் பாவால் அமைந்த ஒரே நூல் இதுதான். இவரே எளிய சொற்களால் நெஞ்சைத் தொடும் கவிதைகளைப் பாடவல்லவர் என்பதற்குப் பல நூல்கள் சான்றாக உள்ளன.

எடுத்துக்காட்டுக்கு ஒன்று தரலாம்;

களிப்பாள் என்று எதிர்பார்த்தேன் காணேன்; இன்பக்
காதலெனும் உணர்வுவெள்ளத்து அவளும் வந்து
குளிப்பாள் என்று எதிர்பார்த்தேன்; குறியும் காணேன்;
கடலுக்கு முன்ஊடல் காட்டிமுத்தம்

அளிப்பாள் என்று எதிர்பார்த்தேன்; அதுவும் காணேன்;
அருகுநுனி விளக்கொளிக்கும் உடலைக் காட்டாது
ஒளிப்பாள் என்று எதிர்பார்த்தேன்; ஒன்றும் காணேன்;
ஒடிந்துவிட்ட மலர்க்கொடியாய்க் கால்வீழ்ந் தாளே.

முதலிரவில் தலைவனது எதிர்பார்ப்பு எப்படி இடிந்து தரை மட்டமாகிறது என்பதை விளக்கும் பாடல் இது.

இப்படி, வல்லமையிருந்தும் வஞ்சிப் பாடலைத் தேர்ந்தெடுத்து நூல் படைத்தது ஒரு புதுமைதான்.

தமிழ் இலக்கியத்தில் கையறு நிலை என்பது நெருக்கமாக நமக்கு அறிமுகமாகி நிற்கும் ஒன்று. பாரியின் பிரிவால் கபிலர் சிந்திய கண்ணீர், இன்றும் ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் மறைவு குறித்துக் குடவாயிற் கீரந்தனார் குறிப்பிடும் பிரிவுத்துன்பம் ஆகியவை தமிழறிந்தாரிடைத் தெரிந்த செய்திகள்.

'வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே'

என்று அவர் வேதனைப் பட்டதுபோலவே இக்காலக் கவிஞரும் தன் வேதனையை வெளிப்படுத்துகிறார். ஆனால் ஒரு வேறுபட்ட பார்வையில், வியப்புக்குரிய முறையில் கவிதை அமைகிறது.

சிவகங்கைச் சண்முக மன்னர் மறைந்தபோது கவிஞர் மீரா பாடிய கவிதை இத்தகைய புதுப் பார்வையுடையது.

சாவையே சாடிப்பாடும் அவரது போக்கினை உரையாடலில் விளக்க வேண்டியதில்லை.

'இருந்தாலும் இது கொடுமை! கொடுமை! சாவே!
இரக்கமற்ற செய்கை உன் செய்கை!'

என்று 'சாவை' நேரடியாகச் சாடுகிறார்.

மறைந்துபோன மன்னரை ஒரு மரமாக உருவகித்து அவர் பாடுவது அழகாக உள்ளது.

'பட்ட மரம் வெட்டுண்டால் பரவா யில்லை;
பாதத்தில் தைக்கின்ற முள்வளர்க்கும்
நெட்டைமரம் வீழ்ந்துவிட்டால் கவலை யில்லை;

நிழல் நாடி நிற்போர்க்கு மயக்கம் நல்கும்
கெட்டமரம்–நச்சுமரம் நிலத்தில் வெட்டிக்
கிடந்திட்டால் வருத்தமில்லை; ஆனால் உன்கை
தொட்டமரம் நல்லமரம் — கனிப முத்துத்
தொங்கிக்கொண் டிருந்தமரம்; வீழ்த்தலாமா?'

என்று சாவைப் பார்த்துக் கேட்கிறார்.

சாவு தந்த துன்ப விளைவை ஒரு பாட்டில் குறிப்பிடுகிறார்.

'கல்யாண மாலைகட்டித் தந்தோன் இன்று
கல்லறைக்கு மாலைகட்டக் கலங்கு கின்றான்;
கல்யாணப் பாட்டிசைத்த பாணன் இன்று
கல்லறைக்குப் பக்கத்தில் புலம்பு கின்றான்;
கல்யாணப் படமெடுத்த கலைஞன் இன்று
கல்லறையை நோக்கிக் கை நடுங்கு கின்றான்;
கல்யாண ஊர்வலத்தைக் கண்டா ரெல்லாம்
கண்ணீர் ஊர்வலங்காண வைத்தாய், சாவே ! '

சாவு வருவதைத் தடுக்க முடியாதென்பது கவிஞர்க்கும் தெரியும். அதனால் முதலில் சாவைச் சாடிய அவர், அதன் வரவு எப்படியிருந்தால் நல்லது என்று அறிவுரை கூறத் தொடங்கிவிடுகிறார்.

'நீ வருதல் கூடாதென் றுரைக்க வில்லை;
நேர்மையுடன் மெதுவாக மந்தை விட்டே
ஆ–வருதல் போல் வந்தால் வரவேற் போமே!
அநியாய மாய் நகரை அழிக்கப் பாயும்
தீ–வருதல் போல் வந்தாய்; இரக்கமின்றிச்
சீறிவரும் புயல் போல வந்தாய் சாவே!
நீ வருதல் முதுமையிலே என்றால் நன்று;
நெருங்கி வந்தாய் இளமையிலே; நன்றா கூறு?'

இப்படியொரு புதுக் கோணத்தில் சாவைப் பார்த்துப் பாடிக் 'கையறு நிலை' இலக்கியத்துக்கு ஒரு புதுச் செல்வத்தை நெஞ்சைத் தொடும் நடையில் படைத்துத் தந்துள்ளார் கவிஞர் மீரா.

இக்காலக் கவிதைகளில் பாடுபொருள்கள் (Content of the poetry) பழையவற்றிலிருந்து பெருமளவுக்கு மாறியுள்ளன. சமுதாயத்தில் அடிமட்டத்தில் காணப்படும் எதனையும் பாடு பொருளாக்கிப் பாடுவதில் கவிஞர்கள் தயக்கம் காட்டவில்லை. அதை ஒரு பெருமையாகக் கூடக் கருதுகிறார்கள். பழைய கவிஞர்கள் பார்க்கத் தவறிய ஒன்றைத் தாங்கள் பார்த்து, கவிதை வரைந்து, உலகிற்கு அளித்திருப்பதாகக் கர்வம் கூடக் கொள்கிறார்கள். கவிஞர் வைரமுத்து கல்லூரி மாணவனாக இருந்தபோதே இந்தப் பார்வையில்தான் இயங்கிருக்கிறார் எனலாம்.

'உலகத் தொழு நோயாளர்களே! ஒன்றுபடுங்கள்' என்பது அவரது கவிதைத் தலைப்பு. இது சென்னையிலிருந்து அரசியல் ஊர்வலங்களைக் கண்டதினால் ஏற்பட்ட தாக்குரவு.

தொழுநோயாளர்களை யாரும் தொடுவதில்லை; உலக அரங்கில் பெயர் பெற்ற சமூகத் தொண்டர்களைத் தவிர யாரும் தொடுவதில்லை.

பொதுவாக நாம் — சராசரி மனிதர்கள். தொழுநோயாளி களைக் கண்டதும் முகஞ்சுளிக்கிறோம். பிறகு தொடுவ தெப்படி? ஆனால் கவிஞர் வைரமுத்து கொஞ்சமும் தயக்க மின்றிச் சாரமுள்ள சொற்களால் (சொற்களால் மட்டும்தான்) தொழுநோயாளியை வாரி அணைக்கிறார். உரையெழுதாமல் நேரடியாக அவர் கவிதையையே பார்க்கலாம்.

'தன்மேனிக் குள்ளேயே உணர்வுகளின் கல்லறையைச்
சரியாகக் கட்டிவிட்ட இறுமாப்பு.

இன்றுவரை வெளிவந்த இறைவனது கவித்தொகுப்பில்
எவருக்கும் பிடிக்காத புதுயாப்பு.'

என்று அருமையாகப் படம் பிடிக்கும் அவர் தொழுநோயின் கொடுமைகண்டு புலம்புகிறார்.

'மனிதஇனக் கட்டுக்குள் மனிதனையே பிரித்துவைத்து
மறைக்கிறதே இதன்பேர்தான் தொழுநோயா?

பனிநனைத்த இரவிருட்டைப் பங்கிட்டுக் கடன்வாங்கும்
பாழ்நாற்றச் சாக்கடைகள் தொழுநோயா?'

நெஞ்சில் நிற்கும் சந்தமும் நினைவில் நிற்கும் வடிவமும், சிந்தையைக் கிளறும் கருத்தும் இவரது கவிதையில் மிளிர்ந்து நிற்கின்றன.

இவ்வாறு, வடிவத்திலும், ஓசை இனிமையிலும், கருத்திலும் புதுப் புதுப் பார்வையுடன் பல கவிதைகள் வெளிவந்துள்ளன. எடுத்துக்காட்டாக இரண்டொன்றைத் தந்தாலும் இக்காலக் கவிஞர்கள் எந்த வகையிலும் தாழ்ந்து போய்விடவில்லை என்பதை மார்தட்டிச் சொல்லும் அளவுக்கு நல்ல கவிதைகள் பல வெளி வந்துள்ளன என்று உறுதியாகக் கூறலாம்.

இந்தப் பார்வை வளரட்டும் !

தரமான கவிதைகளை மறைத்து நிற்கும் போலிப் போர்வைகள் விலகட்டும் !

# பாரதியும் பாரதிதாசனும்

'தமிழகம் தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்'

என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார். பாரதியார் தோன்றியது மிக முக்கியமான காலகட்டம் என்பதனை அனைவரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பாரதி 1882இல் பிறந்தார்; பாரதி தாசன் தோற்றம் 1891. இருவரும் சந்தித்தது 1908-1909 வாக்கில் தான். பாரதியாரின் 26ஆம் அகவையில் 17 அகவைப் பாரதி தாசன் சந்திக்கிறார். பாரதியின் இலக்கிய வேகமும், பிசிறு அற்ற தெளிவான சிந்தனையும், சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இல்லாத ஒருமை நிலை வாழ்வும்தான் இயல்பாகவே குறும்பு படைத்த பாரதிதாசனை ஈர்த்திருக்க வேண்டும். கனக சுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறுவதற்கே இவைதான் காரணம் எனலாம்.

இடைக்காலத்தில் சமயச் சார்பிலும், சற்றுப் பிந்திய நாளில் பாலியல் உணர்வுகளோடும், புரியாத்தன்மைகளோடும் (கூடார்த்தம் — Obscurity), தன்திறன் காட்டும் தடபுடல் நிலை களாலும் (யமகம், திரிபு) தமிழ் இலக்கிய உலகம் தடம் புரண்டு நின்ற காலத்தில் பாரதி தோன்றினான்.

'இடைக் காலத்தில் கடைசியில் நின்ற தேக்கத்துக்குப்பின் பாரதி தமது கவிதைப் படைப்புக்களால் தற்காலத் தமிழ்க் கவிதையின் உருவாக்கத்தைக் கண்டு கொடுத்தார் என்று பாரதிதாசன் மதிப்பிட்டுள்ளார்' என்கிறார் சி. கனகசபாபதி. இந்தக் கூற்று உண்மையானதாக இருந்ததால்தான் பாரதிதாசன் பாரதியை நன்கு புரிந்து கொண்டு பின்பற்றினார். பற்று மிகுதி யானதும் தனது தலைவனைத் தாக்கும் யாரையும் தாங்கிக் கொள்ளும் மனநிலை தொண்டர்க்கு இராது. கல்கி கிருட்டிண மூர்த்தி 'பாரதியார் உலகமகாகவி அல்ல' என்று கூறியபோது வெகுண்டெழுந்த பாரதிதாசன் பாடிய பாட்டு உலகம் உள்ளளவும் உயிரோடு எழுந்து நிற்கும் தன்மையது. பாரதி

---

(பாரதி நூற்றாண்டு விழாவின் போது உருவானது)

பற்றி ஆயிரம் பேர் உரையாலும் கவிதையாலும் வானளாவப் புகழ்ந்தாலும் பாரதிதாசன் பாட்டுக்குப் பின்னால்தான் நிற்க முடியும்.

பைந்த மிழ்த்தேர்ப் பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ! சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடுதுயில் நீக்கப் பாடி வந்தநிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ.
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து.
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்.

புதிய அறம் மட்டுமல்ல, தமிழ் இலக்கணத்தின் பல்வேறு வகைகளை வளர்ப்பதற்கும் வாகாக வித்திட்டவனே பாரதி தான். அவன் எழுதிய 'வசன கவிதை' தான் இன்றைய புதுக் கவிதைகளுக்கு முன்னோடியாக நிற்கிறது. 'பாஞ்சாலி சபதம்', 'குயில் பாட்டு', போன்றவைதான் தமிழில் இன்று ஏராளமாக வெளிவரும் குறுங்காப்பியங்களுக்கு வழிகாட்டுகின்றன. அனைவரும் பாராட்டும் வண்ணம் கவிதையாக்கும் கவிமணி கூட அரண்மனையில் உலவி, மன்னரைச் சார்ந்து நின்று 'தேசியம்' பற்றி வாய்திறந்து பாட முன்வராத காலத்தில் தேசியக் கவியாக விளங்கி, அவன் பாடிய 'வந்தே மாதரம்' பாடலை வாயால் சொல்லுபவர்களை எல்லாம் ஆங்கிலேயரின் தடியால் பதம் பார்க்க வைத்தவன் பாரதி. மொழியின் தொன்மை களையே பாடி அலுத்துப்போன கவிஞர் உலகில் மொழிக்குப் புத்தாக்கம் தேவை, பிற நாட்டாரது நல்ல படைப்புக்களின் வரவு தேவை, பிறமொழிகளோடு போட்டியிட்டுத் தமிழ் வளர வேண்டும் எனும் நோக்கில் 'மெல்லத் தமிழினிச் சாகும்' என எதிர்மறை நோக்கி பாடியவன் பாரதி. சமத்துவம் — மார்க்சீயம் போன்ற உலகளாவிய பொருளியற் கோட்பாடுகளை உள்ளடக்கமாகக் கொண்ட முதல்வன் பாரதி. சாதி வேறு பாடற்ற சமுதாயத்தை உருவாக்குவதில் தன் பங்கைத் தயங்கா மல் செய்தவன் அவன்.

பாரதிதாசன் பாரதியின் இந்தக் கூறுபாடுகளை எல்லாம் உன்னிப்பாகக் கவனித்தது மட்டுமின்றி, மற்றவர்கள் ஒவ்வொரு வகையில் பாரதியைப் பின்பற்றினாலும், பாரதிதாசன் அனைத்தையும் பின்பற்றி, அதனினும் மேலாகப் பாரதியின் வாழ்வினையும் பார்த்துப் பின்பற்றியவன். புதுவை மண் கண்ட சிறப்பு அது.

அனைத்துலகமும் புகழும் தலைவனாக ஒருவன் ஆனாலும் அவன் ஓர் ஆசிரியரிடத்தில் படித்தவனாகத்தானே இருக்க வேண்டும். ஆசிரியரை அப்படியே பின்பற்றுவதைவிட தன் கொள்கை, தன் கருத்து என்பவற்றுக்கேற்ப வளர்ந்து நிமிர்ந்து நின்று ஆசிரியனுக்குப் பெருமை தருபவனே நல்ல மாணவன். பாரதிதாசன் பாரதியாரிடமிருந்து சிலவகையில் மாறுபடுகின்றவன். இந்திய விடுதலைக்காக நம்பிக்கைகொண்டு உழைத்துப் பாடிய பாரதியின் கருத்துக்கு மாறாக மொழி வழி பிரிந்து இனவழி ஒன்றுபடுகின்ற திராவிட நாட்டுக் கொள்கையைப் பாரதிதாசன் வாழ்த்துகிறார்.

'பண்டைத் தமிழும் தமிழில், மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளுமலை யாளம்
கண்டை நிகர்கன் னடமெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்த நாடு;

என்பது பாரதிதாசன் காணும் திராவிட நாடு.

பாரதியார் இறைப் பற்றும், வலுவான கடவுட் கொள்கையும் உடையவர்.

'தொழுவேன் சிவனாம் நினையே — கண்ணா
துணையே அமரர் தொழும்வா னவனே, என்றும்
'காளிமீது நெஞ்சம் — என்றும்
கலந்து நிற்க வேண்டும்'

என்றும் பாடுகிற பாரதியின் உள்ளம் எப்படிப்பட்டது என்று நமக்குத் தெரியும்.

பாரதிதாசனோ

'கடவுள் வெறி சமயநெறி
கன்னல் நிகர் தமிழுக்கு
நோய் நோய் நோயே, என்று சாடுகிறர்.

சமயத்தின் பால் நம்பிக்கையும், வேறு சில நம்பிக்கைகளும் கொண்ட பாரதியின் போக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நிற்கிறார் பாரதிதாசன்.

ஆனால் ஓர் உண்மையை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும். சில கோட்பாடுகளில் மாறுபட்டவரே தவிரப் பாரதிதாசன் ஒரு நாளும் பாரதியின் எதிராளியல்லன்; எதிரணியில் நின்று சாடியவனும் அல்லன்.

பாரதிதாசனுக்குக் கொள்கை வழியில் வேறு தலைவர்களும் உண்டு; வேறு நண்பர்களும் உண்டு. கனித்தமிழ்க் கோட்பாட்டில் மறைமலையடிகளைப் பின்பற்றியவர் பாரதிதாசன். 'தமிழியக்கம்' நூல் இதற்குச் சான்று: சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, கடவுள் மறுப்பு, திராவிட இனக் காப்பு போன்றவற்றில் தந்தை பெரியாரைப் பின்பற்றியவர் பாரதிதாசன். வேகமான செயற்பாடுகள், இயக்க வினைகள், இதழ்ப் போக்குகளில் முற்போக்கு நிலைகள் என்பவற்றில் அறிஞர் அண்ணாவோடு ஒத்துப் போனவர். 'தமிழுக்குத் தொண்டு செய்து சிறைக்குச் சென்றோன்' என்று அண்ணாவைப் பாராட்டினார் பாரதிதாசன். பாரதிதாசனுக்குப் பணமுடிப்பு அளித்துச் சிறப்புச் செய்தவர் அண்ணா.

இவ்வளவு இருந்தாலும் அண்ணாவைத் தரக்குறைவாகச் சாடி, அதனால் கண்ணதாசன் கூடப் பாரதிதாசனைச் சாடும் நிலை ஏற்பட்டது.

பாரதிதாசன் மறைமலையடிகளின் சைவக் கொள்கையைச் சாடினார். தந்தை பெரியாரின் சில போக்குகளில் இருந்து மாறுபட்டார்.

ஆனால் பாரதிதாசன் பாரதியாரை மட்டும் எங்கும் எந்த இடத்திலும் மாறுபட்டுப் பேசியதும் இல்லை; எழுதியதும் இல்லை. தன்னை வளர்த்து ஆளாக்கியவர் என்ற உணர்வோடு கடைசி வரை அவர் அணியில் நிற்பவராகவே விளங்குகிறார் பாரதிதாசன்.

பாரதி பாடல்களில் உணர்ச்சி அதிகம். நாட்டு விடுதலையே அவரது காலத்தின் தேவையாக இருந்ததால் அது தொடர்பாக வரும் செய்திகள் கூட அவரது கவிதைக்குக் கருவாக அமைந்திருப்பதைக் காணலாம். பாரதி மறையும் போது 30 அகவையான பாரதிதாசன் இந்திய விடுதலையை வலியுறுத்துவதற்கான உந்துதல் அமையவில்லை. திராவிட இயக்கச் சார்பு இருந்ததாலும், சமுதாய சீர்திருத்தத்தில் அதிக கவனம் செலுத்தியதாலும், பாரதிதாசன் தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகளை உணர்த்த முற்பட்டார். அதனாலேயே பாரதிக்கு

இல்லாத விரிவான வாய்ப்பு அவர்க்கு அமைந்தது. குடும்ப விளக்கை அமைக்க விரும்பும் அவர் அறியாமையால் துயர் உறும் இருண்ட வீட்டையும் சுட்டிக் காட்டுகிறார்.

பாஞ்சாலியோடு உடனிருந்த அர்ச்சுனன் மாலை நேரத்தைக் கண்டு வியக்குமளவுக்குத்தான் பாரதிக்கு அழகின் எல்லையை வருணிக்க முடிந்தது. பாரதிதாசன் அழகின் சிரிப்பை விரிவாகவே காட்ட முடிகின்றது. 39 ஆண்டு காலத்துக்குள் பாடிய பாரதி 73 ஆண்டு காலத்துக்குள் நிறையப் பாடும் வாய்ப்பைப் பாரதிதாசனுக்கு உருவாக்கிக் கொடுத்தார் என்றே சொல்லலாம். ஆசிரியன் குறிப்பாகச் சுட்டியது, சுருக்கமாக உரைத்தது ஆகியவற்றை மாணவர் விரிவாக ஆராய்வதற்கு இதுவே காரணம்.

பாரதிதாசனின் இலக்கியப் படைப்புகள் பலவற்றுக்குப் பாரதியின் தொடர்பும் இலக்கியப் படைப்புகளும் உந்துதலாக அமைந்தன. பாரதி குறுங்காப்பியப் படைப்புக்களாகச் செய்தவை 3. (பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, கண்ணன் பாட்டு.) பாரதிதாசனின் முதல் கவிதைத் தொகுதியில் 3 குறுங்காப்பியங்கள் இருப்பதைக் காணலாம். புராண, இதிகாசங்களின் தாக்கமும் இருவர் படைப்பிலும் இருக்கும். பாஞ்சாலி சபதம் குறியீட்டுத் தன்மை **(Symbolic effect)** வாய்ந்து இந்திய நாட்டு விடுதலை நோக்கி நகர்ந்ததுபோல, சஞ்சீவி பர்வதமும் பாரதிதாசனின் பகுத்தறிவுக் கோட்பாட்டை உணர்த்தப் பயன்படுவதைக் காணலாம்.

ஆத்திசூடியில் கூட இருவரும் ஈடுபாடுகாட்டினர். கருத்துகளிலே கூடப் பல ஒற்றுமைகள் இருக்கும்.

'குன்றென நிமிர்ந்து நில்' என்று பாரதி கூறினால்
'நிற்கையில் நிமிர்ந்து நில்' என்று பாரதிதாசன் கூறுகிறார்.

பாரதிதாசனுக்குக் கிடைத்த கால வாய்ப்பும், தந்தை பெரியாரின் சமுதாய சீர்திருத்தப் பணியும் புதியன படைக்க வாய்ப்பாக அமைந்தன. பாரதிதாசனின் நூல்கள் பலவகையில் விரிந்து நிற்பது ஒரு பெருஞ் சிறப்பாகும். அதிலும் 'சத்திமுத்தப்புலவர் போன்ற கவிதை நடைக் காப்பியப் படைப்புகள் மிகச் சிறப்பாக அமைகின்றன. பாரதிக்கு வெகுளி வரும் போது சாடுவது உண்டு. ஆனால் எதிரிகளைச் சாடுவதைவிட 'அடிமையில் மோகம்' கொண்டு அலையும் நம்மவர்களையே சாடுவதுதான் பாரதியின் இயல்பு.

இந்தியர்களை 'நாய்கள்' என்று திட்டும் உரிமையை அவன் எடுத்துக் கொண்டான். அதிலும் 'வீரமிலா நாய்கள்' என்று திட்டுகிறான். நிலைமைகள் தெளிவாகத் தெரிந்தும் 'பெட்டைப் புலம்பல்' பேணும் நெட்டை மரங்களென நிற்பதாகச் சாடுகிறார். பாரதிதாசனோ எதிரிகளைச் சாடுவதில் வேகம் காட்டுபவர். ஆனல் இருவருமே நம்மவர்களின் தூக்க நிலையும் துயர்நிலையும் கண்டு மனமுருகுகிறர்கள்.

'நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,

என்பதுடன்

'துஞ்சி மடிகின்றாரே — இவர்
துயர்களைத் தீர்க்க ஓர் வழியுமில்லை அந்தோ'

என்றும் மனம் நொந்து பாடும் பாரதியின் உணர்வு பாரதிதாசனிடத்தில் அப்படியே படிந்திருக்கிறது.

'இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள
என்தமிழ் மக்கள் துயின் றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்க முண் டாக்கி என்
ஆவியில் வந்து கலந்ததுவே'

என்று வருந்துகிறார் பாரதிதாசன்.

பாரதியார் மிகக்குறுகிய காலமும் பாரதிதாசன் சற்று அதிகமான காலமும் ஆசிரியர்பணி ஆற்றியவர்கள். இரண்டு பேருமே இதழாசிரியர்களாக இருந்து எழுதிக் குவித்தவர்கள். பாரதி, தன் இதழ் உரிமையாளர்கள் கருத்துக்கேற்பவும் மிகுந்த வேகம் காட்டிவிடாமலும் எழுத நேர்ந்தது. பாரதிதாசனுக்கு அந்தக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. உரிமையோடு எழுதியது மட்டுமின்றி மனம்போனபடியும் எழுதுவதற்கு இது வாய்ப்பாகிவிட்டது.

பாரதிக்கு இந்திய விடுதலை — ஒரு வரலாற்று மாற்றம் — வாழ்வின் குறிக்கோளாக அமைந்தது பாரதிதாசனுக்கோ சமுதாய சீர்திருத்தமே அதிக அளவிலும் பெரிய நிலையிலும் குறிக்கோளாக அமைந்தன. நாரண. துரைக்கண்ணனின் நேரடிக் கேள்விக்குப் பாரதிதாசனே விடை கூறியிருக்கிறார்.

'பாரதியார் அன்றுள்ள நிலையில் தேச விடுதலையை முதன்மையாகக் கருதினார்; இன்று அவர் இருந்திருப்பாரானால்

என்னைப் போலவே முழுக்க முழுக்கச் சமூக சீர்திருத்தம் குறித்த கவிதைகளையே இயற்றியிருப்பார்' என்கிறார் பாரதிதாசன்.

நாட்டின் நலிவுகளைப் போக்குவதில் பொருள் நிலைச் சீர் திருத்தத்தையே பெரிதும் ஏற்க வேண்டும் என்பதில் இருவரும் ஒத்த கருத்துக்கொண்டிருந்தனர்.

உருசியப் புரட்சி பற்றிப் பெரிதும் எண்ணிப் பாடிய பாரதி

'முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பிலாத சமுதாயம்'

என்கிறான். பாரதிதாசன் இதனை முற்றிலும் மனத்திற்கொண்டு

'ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர்'

ஆகிட வேண்டும் என விரும்புகிறான்.

'எல்லார்க்கும் எல்லாமென் றிருப்ப தான
இடம்நோக்கி நகர்கின்ற திந்த வையம்'

என்று உலகின் எதிர்காலத்தையே தெளிவுபடுத்துகிறான்.

'பொதுவுடைமைக் கொள்கை புவியெங்கும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிர்என்று காப்போம்'

என்று தன்னை உணர்த்துகிறான். பொருளியல் ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயத்தை அமைத்து விடுவதே நிலையான தீர்வு என்பதை இரு கவிஞர்களும் மிக அருமையாக உணர்த்தியிருக் கிறார்கள்.

தமிழின்மீது பற்று என்பது இருவரிடத்தும் இயல்பாக உள்ளது. மற்றொருவர் சொல்லியோ, உணர்த்தியோ வரவேண் டியதில்லை. மணிப் பிரவாள நடை பெரு வழக்காகி இருந்த காலத்தில், 'வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ' எழுத வேண்டும் எனும் அழுத்தம் வாராத காலத்தில் பாரதியாரின் படைப்புகள் எழுந்தன. எனவே, சமுதாயம், ஸங்கம் என்ற வாறு சொற்களைப் பயன்படுத்தியதின்றி 'பூலோக குமாரி' போன்ற பாடல்களையும் எழுதினான் பாரதி. தனித்தமிழ்க் கொள்கையின் தாக்கம் அவரை எட்டும் நிலைக்கு முன்பே அவர் பிரிந்துவிட்டார். பாரதிதாசனிடத்திலும் 'தனித்தமிழ்ச் சொல்' இதுவென்ற பாகுபாடின்றிக் கையாளும் முறையே முதலில் இருந்தது.

'ஆதரவு காட்டாமல் ஐய எனை விடுத்தால்
பாரதரட்சை போலுன்றன் பாதம் தொடர்வதன்றி'

என்று எழுதுகிறார். 'சபாஷ் கரகோஷம்' என்று கவிதையில் இணைக்கிறார்.

'தமிழ் எங்கள் உயிருக்குநேர்' என்று கூறும் பாரதிதாசனிடத்திலும் இந்தப் போக்கு இருந்தது

மறைமலையடிகளே தொடக்கத்தில் வேறுபாடு இன்றி எழுதியவர்தான்.

பாரதிதாசனுக்குக் காலம் தந்த வாய்ப்பில் தனித்தமிழ் கொஞ்சுமாறு எழுத முடிந்தது.

'உணவு தரு விடுதியினைக்
கிளப் என வேண்டும்போலும் !'

என்றுகேட்டு நம்மைமடக்கும்'தமிழியக்கம்' அவரது உச்சமான வளர்ச்சியைக் காட்டும். பாரதிக்குக் காலம் வாய்க்கவில்லை என்பது தவிர வேறு குறை சொல்ல முடியாது. ஆனால் ஒரு திறனாய்வாளர் பாரதி கையாண்ட பிறமொழிச் சொற்களைத் தொகுத்துக் காட்டிச் சாடுவதோடு பாரதிக்குத் தமிழ்ப்பற்றே இல்லை என்றும் நிறுவ முற்படுகிறார்.

பாரதியாரைப் பற்றிப் பாரதிதாசனுக்குத் தெரியாததையா நாம் கண்டுவிடப் போகிறோம்?

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்று ஒரு முடிவு கூறும் பாரதிதாசன் அதற்குச் சான்று காட்டும்போது 'தமிழ்க் கவிஞன் பாரதிதாசன் செத்ததுண்டோ?' என்று கேட்கிறான்.

தன் உணர்ச்சிகளால், இலக்கியப் படைப்புக்களால், விடுதலை வெறி கொண்ட வாழ்வால் என்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பாரதிக்கு இது நூற்றாண்டு விழா ! காலத்தின் வேகம்தான் என்ன !

# அறிஞர் அண்ணாவின் மனித நேயமும் அறிவியற் சமவுடைமையும்

'அண்ணா' என்றழைக்கப்படும் கா. ந. அண்ணாதுரை, இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில், தமிழக வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்குகிறார். 'அறிஞர்' எனும் பட்டத்தைப் பல்கலைக் கழகங்களே பலர்க்கு வழங்கி வந்தாலும், 'அறிஞர்' என்றாலே அது அண்ணாவைத்தான் — அண்ணாவை மட்டும்தான் — குறிக்கும் எனும் அளவுக்கு ஆற்றலால் செல்வாக்கால் உயர்ந்தவர்: அவரது பேச்சின் சாரமும் நயமும் பாமர மக்களை ஈர்த்தன: அவரது பேச்சின் ஆழமும் நடையழகும் உவமை நயங்களும் படித்தவர்களை — இளைஞர்களை — ஓர் அணியில் திரள வைத்தன. அவரது எழுத்துக்கள் சமுதாயத்தில் புரையோடிப்போயுள்ள பகுதிகளைக் கீறிக் கிழித்து அறுவை மருத்துவம் செய்பவை. தமிழ் — தமிழினத்தின் பண்பாட்டையும் உலக ஒருமைப்பாட்டுக்கு அவர்கள் வழங்கிய நன்கொடையையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆழமாக எடுத்துச் சொல்பவை. அதே நேரத்தில் உலகளாவிய பார்வையில் இவர் ஊன்றி நிற்பவர் என்பதை மெய்ப்பிப்பவை. பதவியில் இருந்த காலத்திலும் 'கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு' எனும் கோட்பாட்டின் வடிவமாகத் திகழ்ந்தவர். ஒரு முழு மனிதனாக மனித நேய உணர்வோடு திகழ்ந்த மாபெருந் தலைவராக அண்ணா விளங்குகிறார்.

**'Magnanimity! Thy name is Anna'** என்ற சொல்லாட்சி நிலைக்கும் வண்ணம் அவர் பெருமை படைத்தவராகிறார்.

பதவிதான் ஒரு மனிதனை முழுமையாக அடையாளம் காட்டுவது. பதவிக்கு வரும் முன் பாமர மக்களை ஏமாற்றுவதற்

---

**(சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சார்பில் 'இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தமிழர்கள் அளித்த நன்கொடை' எனும் தலைப்பில் 26—3—93 முதல் 28—3—93 வரை நடத்தப்பட்ட கருத்தரங்கில் படைக்கப்பட்ட கட்டுரை)**

காகச் சிலர் ஆடும் நாடகங்களும் போடும் வேடங்களும் எண்ணில. பதவிக்கு வந்ததும் ஊரை அடித்து உலையில் போடும் அளவுக்கு அவர்களது உண்மை வடிவத்தை அவர்களாகவே உலகுக்கு உணர்த்தி, ஊரார் காறி உமிழும் நிலைக்கு ஆளாகி அழிகின்றனர். ஆனால் அண்ணா இதில் ஒரு ஞானி போல வாழ்ந்தவர். தி.க.வை விட்டுப் பிரிந்து **தி.மு.க.வின் தலைமைப் பதவியைக் காலியாக வைத்திருந்தவர். 1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வரும் எனும் சூழ்நிலை தெரிந்தும் தான் முதல்வராக வரவேண்டும் எனும் எண்ணமே இல்லாமல் 1967 தேர்தலில் சட்டமன்றத் தேர்தலுக்கு நிற்காமல் தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் நின்றவர். ஆனால் நாடு அவரை முதல்வராக்கி விட்டது.

அவருடைய நோக்கம் நாட்டில் நல்லாட்சியை நிறுவ வேண்டும் என்பதும் ஒரு சமத்துவ சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பதுமேயாகும். அரசியல் கல்வி பயின்றவராகலின் ஃபிரஞ்சுப் புரட்சியின் மூலமந்திரங்களே அவரது முழக்கங்களில் இடம் பெற்றன.

இந்த அடிப்படையில் அவரது கோட்பாடுகள் அலசி ஆராயப்படவேண்டும்.

முதலில், மனிதத்தன்மை (Humanism) என்றால் என்ன?

**"Humanism is a system of views based on respect for the dignity and rights of man, his value as a personality, concern for his welfare, his all-round development and the creation of favourable conditions of social life".**

**"Humanism is the opposite of fanaticism, rigorism, intolerance and disrespect for the views and knowledge of others......".**

(Dictionary of Philosophy. p.178)

**"Humanism is the attitude of mind which attaches primary importance to man and to his faculties, affairs, temporal aspirations and well being".**

**(Encyclopaedia Britannica — Vol. 11 — p.825).**

இதுகுறித்து அண்ணாவின் கருத்து இதுதான்.

---

** தி.மு.க.வைத் தொடங்கிய போதும் பெரியாரையே அதன் தலைவராகக் கொண்டார்.

"அரசியலில் நம்மோடு மாறுபட்டிருப்பவர்களிலே பலரும் கனிவு காட்டிடக் கண்டேன் - மனிதத்தன்மை அடியோடு மடிந்துவிடவில்லை என்பதனை உணர்ந்தேன். தம்பி! அந்த மனிதத்தன்மையிலேதான் முழுக்க முழுக்க நம்பிக்கை கொண்டிருக்கிறேன். மனிதத்தன்மை திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லை என்றே கருதுகிறேன். அரசுகள் அமைவதே இந்த மனிதத்தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான் என்று கருதுகிறேன். என்னால் எந்தப் பிரச்சனையையும் மனிதத்தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ளமுடிகிறது. அதனால் கொடுமை நேரிட்டு விடும்போது குமுறிப் போகிறேன். அக்கிரமம் நடைபெற்றிடும் போது நெஞ்சில் வேல் பாய்கிறது......................".

(காஞ்சி, பொங்கல் மலர், *12—1—69*)

மனிதத்தன்மை மேலும் சிறக்க முழு மலர்ச்சி பெற்று மணம் பரப்பிட மக்களாட்சி நெறி பயன்படக்கூடும் என அண்ணா நம்பினார். மனிதத்தன்மையும், மக்களாட்சி பண்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்றே அண்ணா கருதினார்.

"சனநாயகம் ஓர் அரசு முறைமட்டுமன்று!
வாழ்க்கை நெறி; மனிதத் தன்மையை மேம்பாடு
உடையதாக்கவல்ல மார்க்கம்'!

(காஞ்சி, *27—6—65*)

மனிதத் தன்மையோடு அவர் செயற்பட்டவர், அதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு.

தளபதி அழகிரிசாமிக்கு உதவி செய்வதில் அவர் காட்டிய மனிதத்தன்மை — கோவா விடுதலை வீரர் ரானடேக்காக அவரின் பரிந்துரை — போன்ற பல செயல்கள் உண்டு.

மாற்றுக் கருத்துகளை மதிக்கும் மாண்பு — பிறர் வசைமொழியைத் தாங்கிக்கொள்ளும் பக்குவம் வசைபாடியவர்களும் நாணும்படி அவர்களுக்கு நல்லது செய்யும் பேருள்ளம் - அறவழியில் அசைக்க முடியாத நம்பிக்கை — எல்லையற்ற எளிமை — பொறுமை - அடக்க உணர்வு — ஆதிக்க எதிர்ப்பு உணர்வு — மனித உரிமைகள்மீது நாட்டம் — எல்லோரிடமும் அன்பு பிறர் துன்பம் கண்டு நெகிழும் உள்ளம் — அநீதி கண்டு குமுறும் நெஞ்சம் — இவையே அண்ணாவின் மனிதப் பண்புக் கொள்கையின் கூறுகளாகும்.

"யாரொடும் பகை கொள்ளலன் என்றதன்
போரொடுங்கும் தன் புகழொடுங்காது'

என்று கம்பர் குறிப்பிடுவார். பிராமணர்களை எதிர்த்தபோதும், 'பிராமணீயம்' எனும் கோட்பாட்டை மட்டும் எதிர்த்தாரே தவிர, அவர்களிடம் தனிப்பட்ட பகையுணர்வு ஏதுமில்லை. வட நாட்டை எதிர்த்துக் குரல் கொடுத்தபோதும் இதே அணுகு முறைதான். எனவேதான் அவரை யாரும் பகையாகக் கருத முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கு முழுக்க முழுக்க அவரது மனிதத் தன்மைதான் காரணம்.

போரற்ற உலகத்தையே அவர் இலட்சியமாகக் கொண்டிருந்தார். இதுதொடர்பாகப் பெர்ட்ரண்ட் ரசல் கொண்ட கருத்தை ஏற்று, எடுத்துரைத்துப் பாராட்டினார்.

**"Anna was vigorously opposed to violence and war, and he never failed to promote the cause of World Peace. He was all praise for Bertrand Russell — "An erudite scholar and eminent philosopher, he is now engaged actively in a erusade against the H Bomb and nuclear weapons. None could fail to appreciate the abundance of sinoerity and sobriety underlying his message to humanity"**

**(*Home Land*: 30. 7. 61)**

பெல்கிரேடில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு அவர் வரவேற்புத் தெரிவித்தார்.

**When the first Non-aligned conference was held at Belgrade, Anna editorially wrote: "If the Big Powers become isolent because of their size and status, science and finance, all have got to stand up and speak, for, if a war breaks out, all the efforts undertaken in all the countries, projects and plans of reconstruction, become a huge waste, and humanity is bound to be drive backwards, to the Stone Age, as it were. So the effort at Belgrade is to be applauded and appreciated"**

**(Home Land: 10. 9. 61)**

அரசியல் கட்சியின் தலைவராக இருந்தும் முரண்பட்டவர்களைத் திருத்த முற்பட்டவரே தவிர எவர்மீதும் நடவடிக்கை எடுத்து நீக்க முற்பட்டதில்லை சம்பத் கட்சியைவிட்டு நீங்கும் நிலை ஏற்பட்ட போதுகூடக் கண்ணீர்விட்டு அழுதார் அவர். அதையே அண்ணாவின் பலவீனமாகப் படம் பிடித்தவர்களும் உண்டு; கட்சிக் கட்டுப்பாட்டை மீறுபவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்காமல் நழுவுகிறாரே என்று உடனிருந்த கட்சிப் பிரமுகர்கள் வருத்தப்பட்டனர். அண்ணா 'வழவழப்' போக்கினர் என்றும் கருதப்பட்டார். ஆனால் இவற்றுக்கெல்லாம் காரணம் அண்ணாவின் மனிதத் தன்மைதான் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அன்று முணுமுணுத்தோரும் இன்று ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

அண்ணாவைக் கீழ்த்தரமாக விமர்சித்ததுபோல வேறு யாரையும் விமர்சித்திருக்கமுடியாது. மிகவும் முற்போக்காளரான பாரதிதாசனே அத்தகைய விமர்சனத்தை அவிழ்த்தவர். அது கண்டு அனைவரும் கொதித்தனர். கண்ணதாசன் போன்றவர்கள் மிகவும் மோசமாகத் திருப்பித் தாக்கும் அளவுக்கு நிலைமை மீறிச் சென்றது. இந்த நிலையிலும் அண்ணா அதீதச் சலனத்திற்கும் ஆட்படவில்லை, 'வாழ்க வசவாளர்!' என்று கட்டுரை வரையத்தான் அவரால் முடிந்தது. 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்!' எனும் தொடர்க்கு வாழ்வும் நிலைப்பாடும் கொடுத்த அண்ணா மனிதத் தன்மையின் உச்சத்துக்கே சென்றுவிட்டார் எனலாம்.

இனி அண்ணாவின் சமதர்மக் கோட்பாட்டைப் பார்க்கலாம்.

What is Socialism?

**"By abolishing private ownership and exploitation, Socialism establishes truly humanistic relations, based on the principle that man is to man a friend, comrade and brother. In other words, Socialism is based on public ownership of the means of production, which precludes the existence of exploiter classes and of the exploitation of man and provides for the comradely co-operation and mutual assistance in society".**

**"Under Socialism there is no social oppression of inequality of nations, and no antithesis between town and country, between mental and physical labour".**

"By Virtue of public ownership. Socialism develops its economy and entire society on a planned basis. The development of social production serves to satisfy the people's growing material and cultural requirements to an ever full degree."

Material wealth is distributed according to the principle, "From each according to his ability, to each according to his work".

Higher educational standards, the development of culture, the prevalence of the scientific world outlook and Marxist-Leninist ideology reflect the people's rich spiritual life.

(Dictionary of Philosophy, pp.387 - 388)

Socialism is essentially a movement for the promotion of the well being and happiness of individual men and workers, akin to utilitarianism in that it seeks the 'greatest happiness of the greatest number'.

(Encyclopaedia Britannica - Vol. 20-p.757).

சமவுடைமைக்கும் பொதுவுடைமைக்கும் உள்ள நுட்ப வேறுபாட்டை மனத்திற் கொள்ள வேண்டும்.

'சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம்' என்பது சமவுடைமை. 'சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற ஊதியம்' என்பது பொதுவுடைமை. புகழ்மிகு உருசிய நாடு கூடப் பொதுவுடைமை நோக்கி நடந்தாலும் நிறுவியது என்னவோ சமவுடைமைச் சமுதாயத்தைத்தான்.

"நடப்பு நிலையை ஆராய்வது, முதலாளித்துவ உலகிலும் சோசலிச உலகிலும் நடக்கும் நிகழ் முறைகளை ஆழ்ந்து சோதித்து அறிவது, புரட்சி நடைமுறையின் அடிப்படையில் சித்தாந்த முடிவுகளை வளர்ப்பது, செப்பம் செய்வது ஆகியவை விஞ்ஞானக் கம்யூனிசத்துக்கு இயல்பான பண்புகள்" என்று வி.கே. அபனாசியெவ் குறிப்பிடுகிறார்.

"நவீன சோசலிசமானது ஒருபுறத்தில் இன்றைய சமுதாயத்தில் உடைமையாளர்கட்கும் உடமையற்றவர்களுக்கும், முதலாளிகட்கும், கூலித்தொழிலாளர்கட்கும் இடையே நிலவும்

வர்க்கப் பகைமைகளையும் மறுபுறத்தில் பொருளுற்பத்தியில் நிலவும் அட்டூழியங்களையும் கண்டறிவதன் நேரடியான விளைவாகும்'' என்கிறார் எங்கெல்ஸ்.

அறிவியல் சமவுடைமையின் கடமை என்ன என்பதையும் எங்கெலீசு விளக்கிறார்.

'Class struggle between Haves and Havenots'

என்பதுதான் சோசலிசம் உருவாவதற்கான தேவையை உண்டாக்குகிறது. உழைக்கும் வர்க்கத்தின் மேம்பாட்டைச் சோசலிசம் இறுதி இலக்காகக் கொள்கிறது. அண்ணா, பொருளியற் கல்வி பயின்றவராகலின் இவைபற்றி மிகத் துல்லியமாக அறிந்திருந்தார். எனினும் அண்ணாவின் சம வுடைமைக் கோட்பாடு மற்றோர் அடிப்படையையும் தழுவிச் செல்வது

தமிழ்நாட்டில் வர்க்கப் போராட்டம் என்பது உழைக்கும் வர்க்கத்திற்கும் உறிஞ்சும் வர்க்கத்திற்கும் இடையில் ஏற்படும் போர்தான் என்றாலும் அதன் அடித்தளம் பொருளுற்பத்தித் தொடர்பாக இல்லாமல் சமூக ஏற்றத்தாழ்வுத் தொடர்பாதை யாக அமைந்துள்ளது.

வருணாசிரம தர்மம் என்பது தமிழ்நாட்டில் தலையெடுக்கத் தொடங்கிய காலத்திலிருந்து சில மேட்டுக்குடியினர் தங்களை உயர்சாதியினராகக் கருதிச் செயற்பட்டு வந்தனர். அவர்கள் சுரண்டும் வர்க்கமாகவும் மாறினர். தங்களையல்லாத பிறர் அனைவரையும் தாழ்ந்த குடிமக்களாக நடத்தினர். இவர்கள் உழைக்கும் வர்க்கமாக இருந்தனர். வருணாசிரம அடிப் படை இதுவே; ஆரியர் — திராவிடர் போராட்டமாக முடிந்தது.

இந்த வேறுபாட்டை முதலில் களைந்து, சமூக சமத்து வத்தை உருவாக்காமல் வெறும் பொருளாதாரச் சீர்திருத்தம் மட்டும் பேசுவதால் பயனில்லை என்பது அண்ணாவின் கருத்து.

இது தொடர்பாக அண்ணா எண்ணற்ற கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

பாட்டாளி வர்க்கம் பகுத்தறிவுக் கல்வி பெற வேண்டும் என்பது அவரது பார்வை. சாதி முதலாளித்துவம் — பண முதலாளித்துவம் ஆகிய இரண்டும் ஒழிக்கப்பட்டாக வேண்டும்.

இந்த அடிப்படையில்தான் முன்னைய அரசால் கொண்டு வரப்பட்ட 'நில உச்சவரம்புச் சட்டம்' எந்த வகையிலும் ஏழைகட்குப் பயன்படவில்லை என்று எடுத்துக் காட்டினார்.

**Regional Planning forms part of Anna's economic Philosophy of scientific socialism.**

இந்த அடிப்படையில் அண்ணாவின் சமதர்மக் கோட்பாடுகள் அலசி ஆராயப்பட வேண்டும்.

அப்போது தான் அரசியல் கலை கொடி கட்டிப் பறந்த ஒருவரின் அடிமனத்தில் எழுந்துள்ள ஆர்வம் எது என்பதை அடையாளம் கண்டு போற்ற முடியும்.

### சமுதாய சீர்திருத்த நோக்கம்[1]

இக்காலக் கவிதைகளில் சமுதாயச் சீர்திருத்த உணர்வு பற்றி ஆராயுமுன் இஃது எதன் செல்வாக்கால் விளைந்தது என்பதனையும் இந்நோக்கம் தோன்றிய காலப் பின்னணி எதுவென்பதையும காணல் தகும்.

மறுமலர்ச்சி இயக்கம் என்பது முன்னைய தீமையை அகற்றிப் பின்னைய புதுமையை ஏற்பது எனச் சுருங்கக் கூறலாம். தமிழகத்தில் சமயத்திலும் சமுதாயத்திலும் சீர் திருத்தக் கருத்துகளைப் பரப்பி அறிவுரைப் போக்கில் அவ்வப் போது பலர் மறுமலர்ச்சி காண முயன்றனர். எனினும் சமுதாயச் சீர்திருத்தம் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர்தான் உண்மையான வடிவத்தைப் பெற முடிந்தது. ஃபிரெஞ்சுப்புரட்சி, இங்கிலாந்தின் தொழிற்புரட்சி, அமெரிக்காவின் உள்நாட்டுப் போர் ஆகியன மேல்நாட்டு நாகரிகத்திலும் பண்பாட்டிலும் கலைத்துறையிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. அத்தகைய மறுமலர்ச்சியின் தாக்குரவு ஐரோப்பிய இலக்கியங்களிலும் ஏற்பட்டமையால் கவிஞர்களுடைய பாடுபொருளின் போக்கு புதிய திசையில் திரும்பியது. பொதுவாக ஐரோப்பியர் வருகையாலும், சிறப்பாக ஆங்கிலேயர் ஆட்சியாலும் ஏற்பட்ட ஆங்கிலக்கல்வி நம்மவர்க்குப் புதிய சிந்தனையைத் தோற்றுவித்தது. இச்சூழ்நிலையில்தான் இக்காலத் தமிழ்க்கவிதைகளில் சமுதாய சீர்திருத்த உணர்வு அடிக்கருத்தாக அமைந்தது எனலாம்.

1885-இல் தோன்றிய காங்கிரசு இயக்கத்தின் நோக்கம் 1906 வரை விடுதலை கேட்பதாக இல்லாமல் வேலைவாய்ப்பில் இந்தியர்க்கு அதிகப் பங்கு வேண்டுவதாகவே இருந்தது. அப்படிக் கிடைத்த வேலைவாய்ப்பிலும் கல்வித்துறையிலும் பிராமணர் அதிகப் பங்கையும் பிராமணர் அல்லாதார் சிறு பங்கையும் பெற்றுவந்தனர். அதனால் இந்தியா முழுவதும் சமுதாய ஏற்றத்தாழ்வு மிகுதியாயிற்று.

இந்தியாவுக்கு விடுதலை வேண்டும் எனும் அதே நோக்தில் சமூக சீர்த்திருத்தமும் காணவேண்டும் எனப் பலர் முயன்றனர். காங்கிரசுக் கட்சி நடத்திய மாநாடுகளில் சமூக மாநாடுகளும் (Social Conferences) இடம் பெறத் தொடங்கின. இடையில் ஏற்பட்ட எதிர்ப்புகளால் அவை கைவிடப்பட்டதும் உண்டு.

அன்றைய நிலையில் சமூகத்தில் நிலவி வந்த கொடிய பழக்கவழக்கங்களை ஒழிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டது விடுதலை உணர்ச்சிக்கு முன்பே இத்தகு சிந்தனைகள் தோன்றிவிட்டன. இந்திய அளவில் இராசாராம் மோகன்ராய், அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த பெண்டிங் பிரபுவின் துணையுடன் பெண்டிர் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழித்தார். 'ஏழைகட்கும், தாழ்த்தப்பட்ட மக்கட்கும், பிராமணர் அல்லாத அனைவர்க்கும் கல்வியும், நீதியும், சமத்துவமும் மறுக்கப்பட்டன. மறுக்கப்பட்ட உரிமைகள் மக்கட்குச் சேர இராசாராம் மோகன்ராய் உறுதி பூண்டார்.'[2]

சாதி ஏற்றத்தாழ்வுகள் மறைந்து சமத்துவம் நிலவ வேண்டி 'பிரம்மசமாசம்' எனும் அமைப்பைத் தோற்றுவித்தார். ஈசுவர சந்திரவித்யாசாகர் போன்றவர்களால் விதவை மறுமணம் வலியுறுத்தப்பட்டது. 1856ஆம் ஆண்டில் இதற்கான சட்டமே வரும் அளவுக்குச் சீர்திருத்த உணர்ச்சி மேலோங்கி நின்றது. சுவாமி தயானந்த சரசுவதி ஆரியசமாசத்தினைத் தொடங்கி அதன் வாயிலாகச் சில சீர்திருத்த முயற்சிகளை மேற் கொண்டார். கேசவசந்திரசென் 'பிரார்த்தனை சமாசம்' தோற்றுவித்தார். சாதி ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் சேர்ந் துண்ணல் இவ்வமைப்பின் சிறப்பான கூறாகும். இந்நிலையில் கல்வி, அதிகாரம், செல்வாக்கு மிகவுடைய மகாதேவ கோவிந்த ரானடே 'விதவைத்திருமணக் கழகம்'' (Widdow marriage Association) எனும் அமைப்பின் வாயிலாகக் கடுமையாகச் செயலாற்றி வந்தார்.

தமிழ்நாட்டு நிலை

இந்தியாவின் பொதுவான சிந்தனையே தமிழ்நாட்டின் சிந்தனையாகவும் இருந்துவந்தது. இந்திய விடுதலைக்காகக் குரல் கொடுத்த திலகர் போக்கில் பற்றுக்கொண்டு வேகமான உணர்வோடு வ.உ.சி, பாரதியார், திரு.வி.க போன்றவர்கள் குரல் கொடுத்தனர். ஈ.வெ.ரா. பெரியார் போன்றவர்கள் பெண்ணுரிமை பற்றிப் பெரிதும் முழங்கி வந்தனர். சமயத்திலும் பொதுமை காண வேண்டும் எனும் வேட்கையும், சமுதாயம் தன் இழிவு போக்கி முன்னேற வேண்டும் எனும் அவாவும் உடைய வள்ளலார் 'சமரச சுத்த சன்மார்க்கசங்கம்' கண்டார்.

மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டு மெனவும் உணர்வு எழுந்தது. அதனடிப்படையில் 1909 இல் தீண்டாமை எதிர்ப்பு மாநாடும் நடத்தப் பெற்றது. கல்வித் துறையிலும் வேலை வாய்ப்பிலும் பிராமணர் அல்லாதாருக்கு உதவும் நோக்கில் பி. டி. தியாகராயர், டி. எம். நாயர், டாக்டர் நடேசன் போன்றவர்கள் 1916 இல் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை நிறுவினர்.[3] இவ்வமைப்பே நாளடைவில் நீதிக் கட்சியாக நிமிர்ந்து நின்றது. சில ஆண்டுகள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பையும் அது பெற்றது.

1925இல் சுயமரியாதை இயக்கம் மேலும் வலுப்பெறத் தொடங்கியது.

சாதி, மதம், வகுப்பு ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டுள்ள முரண்களையும் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் இருந்து வரும் உயர்வு தாழ்வுகளையும் அகற்றி மக்கள் யாவரும் ஒரே சமூகமாகவும் உடன் பிறப்பு உணர்வுடனும் வாழ வேண்டும் என்பதே இவ்வியக்கக் குறிக்கோள் ஆகும்'.[4]

1938இல் இவ்வியக்கம் நீதிக்கட்சியுடன் இணைந்து பின்னர் 1944இல் திராவிடர் கழகமாகியது. அரசியல் பற்றிக் கவலைப்படாமல் முற்றிலும் சமுதாய சீர்திருத்த இயக்கமாகவே செயல்பட்டு வந்தது.

இலக்கியங்கள் சமுதாய மறுமலர்ச்சியில் பெரும்பங்கு பெறுகின்றன. இயக்கங்கள் கூட இலக்கியங்களையும் மேடைப் பேச்சுகளையும் தங்கள் கருவிகளாகக் கொண்டிருந்தன. "20ஆம் நூற்றாண்டுத் தமிழக மறுமலர்ச்சி என்பது மிகப் பெரிய அளவில் திராவிட இயக்கத்தையே சார்ந்துள்ளது. மேடைகளில் பேசியும் ஏடுகளில் எழுதியும் மறுமலர்ச்சிப் பணி

ஆற்றிய திராவிட இயக்கத் தலைவர்களுள் அண்ணாவின் இடம் தலைமை சார்ந்தது.''[5]

இவ்வகையில் இந்திய இலக்கியங்கள் சமுதாய மறுமலர்ச்சியில் ஆற்றிய பங்கினைக் காண்பது பொருத்தமாகும் வங்க இலக்கியம் சரத்சந்திரரின் புதினங்களாலும் தாகூரின் கவிதைகளாலும் ஈசுவர சந்திர குப்தாவின் பாடல்களாலும் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. மராத்திய இலக்கியங்கள் காண்டேகரின் கதைகளாலும் கேசவசுதாவின் கவிதைகளாலும் மறுமலர்ச்சிச் சிந்தனைகளை எழுப்பின. வள்ளத் தோள், குமாரன், ஆசான், உள்ளூர் போன்றவர்கள் மலையாள இலக்கிய உலகில் மறுமலர்ச்சி உணர்வை வெகுவாக வளர்த்தனர். தெலுங்கு இலக்கிய உலகில் வீரேசலிங்கம் குறிப்பிடத்தக்கவர். அவர் புதினம், சிறுகதை, கவிதை ஆகிய அனைத்துத் துறையிலும் சமுதாய சீர்திருத்த உணர்வைத் தூண்டினார். சமுகப் போராட்டங்களைப் படம் பிடித்ததோடு நடப்பியல் பாங்கோடும் தம் படைப்புகளை உருவாக்கினார்.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை தம் 'மனோன்மணிய' நாடகத்தை ஒரு மறுமலர்ச்சி நோக்கோடு வெளிக் கொணர்ந்தார் எனலாம். பழையன புதுப்பித்தல், புதியன படைத்தல் எனும் நோக்கோடு ஒரு பெண்ணை தான் விரும்பாத ஒருவரை மணக்க வற்புறுத்தலாகாது எனும் கருத்தும் வலியுறுத்தப்பட்டது. வ. ரா. போன்றவர்கள் விதவை மறுமணத்தை வலியுறுத்தி வந்தனர். புதுமைப்பித்தன் தம் சிறுகதைகளில் மறுமலர்ச்சிக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

திராவிட இயக்கத்தவர் சமூக மறுமலர்ச்சியில் பெரிதும் பங்கு பற்றி உழைத்தனர். அண்ணா காலத்தில் அதே உணர்வுடைய பாரதிதாசன் தம் கவிதைகளில் சமுதாய சீர்திருத்தத்தைப் பெரிதும் வலியுறுத்தினார் என்பதனை உணரலாம். பாரதியாரின் சார்பும் திராவிட இயக்க அடித்தளமும் பாரதிதாசனை மூடநம்பிக்கைகளைச் சாடும் சீர்திருத்தக் கவிஞராக உருவாக்கின. மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தால், மக்கள் விழிப்புணர்ச்சி எய்தித் தம் வறுமைப் பிணியிலிருந்தும் விடுபடுவர் எனும் கருத்து எழுந்தது.

ஈ.வெ.ரா. பெரியார் தம் இயக்கக் கோட்பாட்டை விளக்கும் போதும் இவ்வுண்மையை வெளிப்படுத்துகிறார். "மக்களைப்

பீடித்துள்ள மூடநம்பிக்கைகளும் சமுதாயக் கொடுமைகளுமே அவர்களை வறுமையிலும் அறியாமையிலும் ஆழ்த்திவிட்டன''[6] என்கிறார்.

இந்த உணர்வுடன் இலக்கியத் துறைக்கு வந்தவர்கள் இக் கால இலக்கிய வகைகள் அனைத்திலும் சமுகச் சீர்திருத்த உணர்வு மேலோங்கச் செய்தனர். எந்தப் படைப்பாளியும் சமூகத்திலிருந்து விலகிப் போகவிரும்பவில்லை. இந்நிலையில் சமூகத் தேவைகளின் விளைவுகளாகவே இலக்கியங்கள் தோன்றின.

தமிழ்ச்சமூகப் புதினங்களின் வரலாற்றைக்கூறும் தா. வே. வீராசாமி ''அரசியல் அலைகள் மோதி தெறிக்கும்போது அவைபற்றிய இலக்கியங்கள் எழுவதற்கு இடம் ஏற்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட குறிக்கோள்களைக் கொண்டமைவது அவற்றின் கடமையாகவும் மாறுகிறது''[7] என்று குறிப்பிடுகிறார்.

கவிதை உலகை நோக்குமுன் அக்கால கட்டத்தில் வெளி யான புதினங்களின் சமூகப் பார்வையை ஒப்பிட்டு நோக்கலாம். ''சீர்திருத்த இயக்கத்தில் தோன்றிய நாவல்களின் போக்கு பொருந்தா மணத்தைச் சாய்க்கவும், பெண்ணிற்கிழைக்கும் கொடுமையைக் கண்டு அவள்மீது பரிவுகொள்ளவும், பெண்கள் சாதிக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலைபெற, கலப்பு மணம் செய்யவும் தூண்டுகிறது. அத்துடன் பகுத்தறிவைப் பரப்பும் இயக்கம் வலுப்பெற வேண்டும் என்னும் சமூகச்சீர்திருத்த இயக்கப்போக்கே உயர்மட்டத்தில் தெரிகிறது.''[8]

புதினங்களில் இத்தகைய சீர்திருத்த நோக்கம் பரவலாகி நிற்கின்ற காலகட்டத்தில் தமிழ்க் கவிதைகளின் போக்குப் பற்றிச் சிந்தித்தாலே உண்மை தெளிவாகும். பாரதிதாசன் ஒரு சீர்திருத்தக் கவிஞராக இருந்ததோடு அவரை ஒட்டிப் பாரதி தாசன் வழிமுறை ஒன்றும் உருவாகியது. ஆய்வுக்கால எல்லைக்கு முன்பும், எல்லைக்குள்ளும் வரும் கவிஞர்களில் மிகப் பெரும்பான்மையோர் சமுதாயச்சீர்திருத்த உணர்வு கொண்டவராகவே உள்ளர்.

கி.மு. 500 முதல் கி.பி. 200 வரை சங்க இலக்கிய காலம் என்றும் கி.பி. 100 முதல் கி.பி. 500 வரையில் நீதி இலக்கியம், முற் காப்பிய காலம் என்றும் கருதலாம். கி.பி. 600–900க்குள்ளான காலத்தைப் பக்தி இலக்கிய காலமாகக் கொள்ளலாம். அதன் பின் பிற்காப்பியகாலமும் சிற்றிலக்கிய காலமும் வருகின்றன.

கி.பி. 1500க்குப் பின் புராண இலக்கியங்கள் தோன்றின. கி.பி. 1891க்குப் பின் மறுமலர்ச்சி இலக்கியங்கள் தோன்றின. இக்கால இலக்கியம் எனப்படும் புதினம், கவிதை, நாடகம், சிறு கதை, உரைநடை ஆகியவற்றின் பெருகிய வளர்ச்சியே இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வெற்றி எனலாம். இந்த இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு எழுந்தவை என்பதனை மனிதவாழ்வினை நேரடியாகப் பார்த்து அதனி னின்று இலக்கியத்தை மலர்விக்கும்போக்கு மேலோங்க நிற்பன என்பதனையும் உணர்தல் தகும். இக்கருத்தினை மு.வ.வும் உடன்படுகிறார்.[10] "சமுதாயத்தின் அல்லது சமுதாய உழைப் பினராகிய மனிதனின் போராட்டமும் இன்ப துன்பமுமே அவர் களின் எழுத்துக்கு உரிய பொருளாக ஓங்கி நிற்கின்றன."[11] என்று மேலும் அவர் வற்புறுத்துகிறார்.

சமுதாயத்தைச் சீர்திருத்த முனையுமுன் சமுதாயம் எப்படி அமைந்திருக்கிறது என்பதனை நன்கு புரிந்து கொள்ளவேண் டும். நோயாளியை மட்டும் அறிமுகம் செய்து கொள்ளுவதோடு நிறுத்தாது, நோய் எதுவென்று துல்லியமாகத் தெரிந்து கொள்ளு தலே சீர்திருத்தவாதிகளின் கடமை. கவிஞர்கள் நேரடியாகச் சீர் திருத்த முனைபவர்கள் என்று சொல்லிவிட முடியாது. தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டும், மனப்புழுக்கத்தை வெளியிட வேண்டும் எனும் துடிப்பே பெரிதும் முன்னிற்கிறது. அத்துடிப்பு கவிதை வடிவாகி வெளிவந்ததும் கவிஞர்களைக் கண்டுபிடிக்க முடியாமலும் போய்விடும். எனவே கவிதைகள் (1) கற்பனை யாகப் பாடுதல் (2) செயல் துடிப்போடு அமைபவை என இரு வகைப்படும். இந்த இருபோக்குகளையுமே நம் கவிதைகளில் காணலாம்.

"இந்தியா ஒரு நாடு! — நித்தம்
வேலை நிறுத்தம் வீட்டுக்கு வீடு!
திருப்பதி உண்டியல் நிறைந்ததில் திருப்தி!
திரும்பிய பக்கமெல்லாம் வாழ்வில் அதிருப்தி!
'ஐயப்பா!' என்ற பக்தர்கள் முழக்கம்!
'ஐயோ! அப்பா! என்ற பசித்தவர் கலக்கம்!"[12]

எனக் குருவிக்கரம்பை சண்முகமும்,

'மிகப்பெரிய தேசந்தான் நமது தேசம்.
வீரத்தின் விளைநிலந்தான் எனினும் சாதித்
தொகைக்கணக்கால், சோம்பேறித் தனத்தால், நீண்ட
தூக்கத்தால், பொறாமையினால், தொன்று தொட்டுப்

பகைப்பெருமை பேசியதால், அண்ணன் தம்பி
படையெடுப்பால், சிற்றின்ப வெறியால் நன்கு
வகுத்தமுறை வழுவியதால் வீழ்ச்சி யுற்றோம்"[13]

எனச் சுரதாவும் நாட்டின் நிலையினைத் தெளிவாகக் காட்டுகின்றனர். இத்தகைய நாட்டினைச் சீர்திருத்துவதற்குக் கவிதைகளைப் படைக்கலன்களாகக் கொண்டுமுயலவேண்டும் எனும் முனைப்பு உள்ளது. அப்படைக் கலன்கள் சமுதாய நச்சு மரங்களை வெட்டி எறியவும் கொடிய மனித விலங்குகளைக் கூண்டோடு ஒழிக்கவும் பயன்படுகின்றன."[14] தக்க படைக்கலனைக் கையில் எடுத்துக் கொண்டு,

"செத்துக் கொண் டேவரும்
இத்தமிழ் நாட்டினைத்
தேற்றுவ தெப்படியோ? — இதில்
சேர்ந்துகொண் டேவரும்
மாபெரும் நோய்களை
நீக்குவ தெப்படியோ?"[15]

என்று கவிஞர் கேட்கிறார்.

'நான் எதையாவது பாடிவைப்பேன்; அதை நீங்கள் செயற்படுத்த வேண்டும்' என்று தூர விலகி நின்று சொன்னவர்கள் நம் பழைய கவிஞர்கள். பாரதி, பாரதிதாசன் போன்ற ஒரு சிலர் மட்டுமே இந்த விதிக்கு விலக்காக இருந்தார்கள். இன்றைய கவிஞன் சமுதாயத்தை விட்டு விலகி நிற்கவில்லை"[16] என்கிறார் சாலை இளந்திரையன்.

"சமுதாயத்தில் பாதிக்கப்பட்டோர் பக்கமெல்லாம் தமிழ்க் கவிதை பாய்ந்தோடி அவர்தம் உணர்வலைகளை உலகோர்க்கு உணர்த்தும் ஆற்றல் பெற்று நிற்றலைப் பரக்கப் பார்க்க முடிகிறது"[17] என்பார் கருத்தும் இவண் நினைக்கத்தக்கதாகும்.

சீர்திருத்த வரும் கவிஞனின் கவிதைகளுக்குள் சமுதாயச் சிந்தனை கட்டாயம் இருந்தாக வேண்டும் எனும் உணர்வு எல்லாரிடத்தும் காணப்படுகிறது. எப்படியும் சீர்திருத்தியே ஆகவேண்டும் எனும் துடிப்புடன் அனைவரும் முரசு கொட்டுகின்றனர். நம்பிக்கை கொண்டு (Optimism) இந்த முயற்சியில் இறங்குபவர்களும் இருக்கிறார்கள். நாடு சீர்திருந்தும் என்ற நம்பிக்கை சிறிதுமின்றிச், 'சொல்ல வேண்டியது என் கடமை' என்ற அளவோடு நிற்பவர்களும் உண்டு. "இந்த நூல் உலகைச் சீர்திருத்தப் போவதாக நான் எண்ணவில்லை. வள்ளுவனும்,

வள்ளலாரும், பாரதியும், பாவேந்தனும் பிறந்தே திருந்தாத இந்தக் குமுகாயத்தை என் பாடல்களா திருத்திவிடப் போகின் றன! அந்த நம்பிக்கையெல்லாம் எனக்கில்லை! ஏதோ என் நெஞ்சக் குமுறல்களை இந்தப் பாடல்களின் மூலம் கொஞ்சம் கொட்டித் தீர்த்திருக்கின்றேன் அவ்வளவுதான்"...[18] என்கிறார் சுப. வீரபாண்டியன்.

முதல் நூலை வெளியிடுகின்ற ஓர் இளங்கவிஞர்க்கு எடுத்த எடுப்பிலேயே இவ்வளவு மனச்சோர்வு ஏற்படக் காரணியம், நாடு அந்த அளவுக்குக் கெட்டுப்போயிருக்கிறது என்பதுதான்.

**போலிகள்**

சீர்திருத்தம் மேற்கொள்ளுகிறோம் என்றும், ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கப் போகிறோம் என்றும், முன்னின்று முயற்சி எடுக்கும் பொதுமக்களிடத்தும், சொல்லுக்கும் செயலுக் கும் தொடர்பில்லாத பெரியவர்களிடத்தும் காணப்படுகின்ற போலி நிலைதான், உண்மையானவர்களின் உள்ளத்தைப் புண் படுத்துகிறது. சமுதாயப் போலி நிலையைச் சுட்டுவதற்கு முன் சமுதாயச் சீர்திருத்தம் பேசுபவர்களே போலியாக இருக் கிறார்கள் என்பதனை உணர்த்துகிறார் கலைக்கூத்தன்.

"சமுதாயச் சீர்திருத்தம் பேசு வோர்கள்
சலிக்காமல் ஊரூராய் மலிந்து போனார்
சமுதாயச் சீர்திருத்தம் பேசு வோர்கள்
தான் திருந்தித் தானுணர்ந்து நடந்தி டாமல் "[19]

இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

"பணமென்ற திரைக்குள்ளே கிடப்பார் — நாளும்
பழியென்ற சாலையிலே நடப்பார்
மணம்தந்த சோலையினை எரிப்பார் — நெடு
வையத்தை இருளாக்கிச் சிரிப்பார்
அறிவிக்கு விலங்கிட்டுத் தடுப்பார் — தூய
அன்பிற்கு நஞ்சிட்டுக் கெடுப்பார்
வறுமைக்கு வித்தாகி நிற்பார் — எங்கும்
மானத்தைவிலை கூறி விற்பார்[20]

என. இப்படியொரு போலி உலகத்தைக் கோ. மோகனரங்கன் நமக்குக் காட்டும்போதே நாம் சமுதாயத்தை அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது.

"எண்ணி எண்ணிப் பார்த்தேன்
எழுதுகிறேன் இப்பாட்டை
இன்றும் பொறுப்பதற்கு
என்மனமும் கல்லல்ல
நல்லமனம் உள்ளவர்கள்
நலிகின்றார் நாணுகிறார்
நயவஞ்சப் பிண்டங்கள்
நன்றாய்க் கொழுக்கின்றார்."[21]

என்று எசு. டி. சுந்தரம் சமுதாய இழிநிலை கண்டு வேதனையோடு புழுங்குகிறார். நல்ல உள்ளம் இப்படித்தான் வேதனைப் படும். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட கவிஞர் விடுதலைக்குப்பின் சமுதாயம் சீரழிவதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. 'நன்றறிவார் அனைவருமே நெஞ்சத்து அவலம் உடையவர்' (குறள் 1072) என்ற குறட்கருத்து இங்கு இழையோடுவதைக் காணலாம்.

இவை போன்ற போலிப் போக்குகள்தாம் இன்று சல்லடைக் கண்களாக எல்லாவற்றையும் அரித்துக் கொண்டிருக்கின்றன. இதனைத்தான் கவிஞர் உலகம் வன்மையாகக் கடிந்துரைக்கின்றது.

நாட்டாட்சியிலேயே ஊழல்கள் மலிந்து விட்டதால்தான் சமுதாயம் புரையோடிப்போய்க் கிடக்கிறது. ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை என்ற நிலையை உருவாக்கத் தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் அவற்றின் விளைவினைப் பற்றி, "திட்டங்களின் பலன் ஏழைகளைப் போய்ச் சேரவில்லை; இத்தனை திட்டங்களுக்குப்பின் ஏழை மேலும் ஏழையாகிவிட்டான்; பணக்காரன், மேலும் பணக்காரனாகி விட்டான்;[22] என்று அரசியல் தலைவர் காமராசர் ஒருமுறை குறிப்பிட்டார்.

"பரங்களே சாபங்கள்
ஆனால்
....................
இங்கே
தவங்கள் எதற்காக?"[23]

என்று 'திட்டங்கள்' எனும் தலைப்பிலேயே இப்படிக் கூறுகிறார் அப்துல் ரகுமான்.

மதுவால் இந்தச் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் சீர்கேடு ஒருபுறம்; அரசியல் வாதிகளும், வணிகர்களும் மேற்கொள்ளும் இரட்டை நிலை மறுபுறம். இதனைக் காணும் நா. காமராசன்

"மாளிகைக்குப் "பெர்மிட்டு"
சேரிக்கு மட்டும் கைவிலங்கு!"[24]

என்று கொதிப்படைகிறார்.

'தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ் பட்டு நின்றதாமோர் பாரத தேசம் தன்னை வாழ்விக்கவந்த' காந்தியாரையே இப்போது நாம்,

"அரசியலில் நாடகங்கள் ஆடுகின்ற பொதுமேடை"[25]

யாக ஆக்கியுள்ளோம் என்கிறார் இரா. வைரமுத்து. இந்தப் போலி நிலைகளுக்கு அரசியல்வாதிகள், வணிகர்கள், அதிகாரிகள், மக்கள் ஆகிய நான்கு தரப்பினரும்தான் பெரும் காரணமாகின்றனர்.

**அரசியல்வாதிகள்**

"தான் தேய்ந்து மணமளிக்கு சந்தனம்போல்
தனையழித்துப் பயனளிக்கும் வித்தினைப்போல்
தான் என்னும் நிலைமறந்து பொதுப்ப ணிக்குத்
தனைஈவோர் தக்கவர்கள்; பொன்னுக் காக
வானார்ந்த புகழுக்காய் போகத் திற்காய்
மற்றாங்கே வீட்டின்பம் பெறுவ தற்காய்த்
தேனார்ந்த பொதுப்பணியில் இறங்கு வோர்கள்
தீயவர்கள்! வஞ்சகர்கள்; கொடும னத்தார்! ![26]"

என்று அரசியல்வாதிகள் எப்படி இருக்கவேண்டும் என்பதனை யும் இன்று எப்படி இருக்கிறார்கள் என்பதனையும் சாமி பழனியப்பன் தெளிவுபடுத்துகிறார்.

"சீமான்கள் மதக்கொடுமை அன்று தொல்லை
சீர்கெட்ட அரசியலால் இன்று தொல்லை
ஏமாறும் தொண்டரினம் இவர்கள் என்றால்
ஏமாற்றும் தலைவரின்மேல் என்ன குற்றம்?
..................................................................
கொடிமட்டும் வான்முட்டப் பறந்திருக்க,
கொள்கையினைத் தலைவரெல்லாம் மறந்திருக்க,
அடிதடியே அரசியலாய் மாறிப் போக,
ஆங்காங்கே சிலதொண்டர் அலறிச் சாக,
வெடியாத எரிமலையாய் மக்கள் வாழ
வியாபார மாயதனைச் சிலரோ ஆள
முடிவெங்கே இதற்கென்றே புரிய வில்லை'''[27].

என அரசியல்வாதியின் ஆட்டத்திற்குப் பலியாகும் நாம்தான் முட்டாள்கள் என்று சுப. வீரபாண்டியன் சுட்டிக்காட்டுகிறார். அவர்கள் அப்படியே நடப்பதைக் கண்டு குமுறுகிறார் மு. உலகநாதன்.

"ஓ! ஓ! ஓ! தலைவர்களே! ஏனிந்தக் கூச்சல்?
உருப்படியாய் இதுவரையில் நீரென்ன செய்தீர்?
தேரோடும் வீதிகளில் செத்து விழும் பிணங்கள்!
தெருவுக்குத் தெருவிங்கே குத்துவெட்டுக் கொலைகள்
நீரோடும் காவிரிபோல் நிலமெல்லாம் செம்மை!
நிலைகொள்ளாப் பிணவாடை! இரத்தவெறி! குமுறல்!
பேரோடு புகழோடு நீரிங்கே பவனி!
பிள்ளைக்குப் பாலில்லா நிலையுளதே அவனி!
ஏமாற்றுக் காரர்களே! எத்தனை நாள் ஆட்டம்?
எலிகூடப் புலியாகும் நாள்வரலாம்! கவனம்!"[28]
"உங்களுக்குத் தானிங்கே உழைக்கின்றேன் என்றே
ஊரெல்லாம் கூப்பாடு! சொற்பொழிவு! விளக்கம்!
இங்குச்சில பைத்தியங்கள் உம்மையெல்லாம் தங்கள்
இணையற்ற தலைவரெனத் துதிபாடும் நிலைமை!
எங்களுக்குக் கட்சியிலை! தலைவரிலை! எதற்கு?
இடிந்துவிட்ட கோயிலுக்குக் கலசம்ஏன்! தேவை?"[29]

அரசியல்வாதிகள் ஆடும்வரை ஆடிவிட்டு ஐந்தாண்டுக்கொரு முறை தேர்தல்நேரத்தில் மக்களை நாடிவரும்போது 'ஓ! கவுன்சிலரே! என அழைத்து வெ. நடராசன் வரவேற்புரை நல்குகின்றார்.

"என்னய்யா வேட்பாளரே ஏதேது ரொம்பநாளாய்
கண்ணெதிரே காணவில்லை! காடுமலை சென்றீரோ?"[30]

என்று தொடங்கி

'நரி உருவில் நடமாடி நல்லவன்போல் வருகின்ற
திருவாளர் கவுன்சிலரே திரும்பிப்போய் விடுவீர்!"[31]

என்று விரட்டுகிறார்.

அரசியல்வாதிகளின் போக்கால்தான் சமுதாயத்தில் கையூட்டுப் பெருகி நிற்கிறது. 'லஞ்ச பூதம்' என்ற கவிதையில்

"அந்தநாள் கர்ணன்போல்
மக்களெல்லாம்
அகங்கையும் சிவக்கின்றார்
லஞ்ச மீந்தே!"[32]

என்கிறார் செல்வகணபதி.

தேர்தல் நாளுக்கு முதல் நாளிரவில் வாக்காளர்களுக்குத் தரப் படும் பணத்தினை 'வேசிமகளாக'வே கருதி

"சீரான புதுநோட்டாம்
சிறுபல்வரி சைகாட்டி
கூர்வேல் விழியாலே
கொத்திடுவாள் வாக்குகளை
ஊர்கெடுக்கும் பேய்மகளை!
ஊர்விட்டே ஓட்டுங்கள்."[33]

என்கிறார் வெ. நடராசன்

தேர்தல் நேரத்தில் அரசியல்வாதிகள்,

"துட்டுத் தருவார் சத்தியம் பெறுவார்
சாதி உணர்ச்சியைத் தூண்டி விடுவார்"[34]

என்ற உண்மையை உரைக்கிறார் ப. சிவராமகிருட்டிணன்.

அதிகாரிகள்

அரசியல்வாதிகளுக்குச் சில்லறை சேர வேண்டுமென்றால் அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். பொதுத் தொண்டர் தட்டிக்கேட்பார், தவறுகண்டால் தண்டனை கிடைக்க வழி செய்வார் எனும் அச்சம் இருந்திருந்தால் அதிகாரிகள் ஊழல் புரிய வாய்ப்பிராது. ஆனால் நம் அரசியல்வாதிகளுக்குப் பண ஏற்பாடு செய்து கொடுக்கும் அதிகாரிகள் தங்கள் பங்குக்கு இந்தச் சமுதாயத்தைச் சுரண்ட முற்படுகின்றனர். கையூட்டு இந்த இடத்தில்தான் தொடங்குகிறது அதிகாரிகள் செய்யும் தவறுகளை என். ஏ. வேலாயுதம் தன் "இதய மலர்" எனும் நூலில் கடுமையாகச் சாடுகிறார்.

வணிகர்கள்

'கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது' (பட்டினப்பாலை: 210-211) வாணிகம் நடத்த வேண்டும். "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்பிறவும் தமபோற் செயின்" (குறள், 120) என்பது நெறி. இன்றோ கலப்படம், கள்ளக் கடத்தல், கறுப்புப் பணம், கள்ளநோட்டு, ரூபாய் நோட்டு இரட்டிப்பு, வருமான வரி ஏய்ப்பு, மோசடி போன்ற குற்றங்களை வரம்பின்றிச் செய்கின்றனர். பணம் புரளும் வாய்ப்புள்ள வணிகர்கள்தாம் அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் காமதேனுவாக உதவி வருகின்றனர்.

இந்நிலையில் சமுதாயம் கடுமையான சீர்கேட்டுக்கு உள்ளாகிச் சரிசெய்யவே முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. வணிகர்களின் இந்தத் தன்மைகளைப் பற்றி அரு. சோம சுந்தரம் 'செக்கிழுத்த செம்மல்' எனும் நூலிலும், தணிகைச் செல்வன் தன் கவிதைகளிலும் கடுமையாகச் சாடியுள்ளனர்.

இனி, மக்களிடம் காணும் பல்வேறு குறைபாடுகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் பற்றி இக்காலக் கவிஞர்கள் விரிவாக எடுத்துரைக்கக் காண்கிறோம்.

சாதி

சாதி எனும் நோய் தான் இன்று நாடுமுழுவதும் ஆழ்ந்து பரவிக்கிடக்கிறது. கல்வி நிறுவனங்கள் நகர் கிராமப்புறங் களில் உள்ள குடியிருப்புகள், அலுவலகங்கள் ஆகிய அனைத் திலும் சாதியே தலைதூக்கி நிற்கிறது. தேர்தல் நேரத்தில் இச் சாதி உணர்வு முனைப்போடு நிற்றல் கண்கூடு. கட்சிகள் வேட்பாளர் தேர்ந்தெடுத்தல், தேர்தல் வேலை செய்தல்–வாக்காளர்களை வளைத்தல் ஆகிய அனைத்திலும் சாதியமே ஆட்சி செலுத்துகின்றது.

சாதியை ஒழிக்க வேண்டுமென்று பலரும் விரும்புகின்றனர். வேகம் காட்டுகின்றனர்.

"தெருவுக்குள் ஐந்தாறு கோவில்! அங்கே
சிலைமூட பொன்னாலே மணிகள் ஆடை!
கருவுக்கும் சாதிமதம் போற்று தற்குக்
கற்பிக்கும் பொய் மிகும் புராண வாடை!"[35]

என்று தமிழ்ப்பரிதியும்,

"உலவிடும் சாதிகள் ஒழிப்போம் — இனி
உயர்வெனச் சொல்வது பழிப்போம்!"[36]

என்று தென்னவனும்

"சாதிசமய வழக்குகளை
சாற்றுகின்ற கயவரினை
மோதியவர் பரம்பரையை
பூண்டோடு சாய்த்திடுவோம்!"[37]

என்று கருமலைத் தமிழாழனும் சாதியைச் சாடுகின்றனர்.

சமயம், சடங்குகள்

சமயங்கள் கூட இன்று சாதிகளை மறைமுகமாக ஊக்கு விக்கின்றன. சமயங்கள் கற்பிக்கும் கடவுள்களின் பெயரால்

நடக்கும் கேடுகள் சொல்லும் தரமல்ல. கடவுள்மீது நம்பிக்கை வருவதற்காகவே பாவம், நரகம் போன்ற கற்பனைகளை வளர்த்து அவற்றின் தண்டனையிலிருந்து தப்பிக்கச் சடங்கு முறைகளைக் கற்பித்து அவற்றின் பேரால் இந்நாட்டில் நடக்கும் சுரண்டல்கள் எண்ணில. கவிஞர்கள் சாதியோடு சேர்த்தே சமயங்களையும், சடங்குகளையும் சாடுகின்றனர்.

"கடவுளை வளர்த்தே ஏய்க்கும்
கயவரை ஓட்ட வேண்டும்:
கடவுளின் பெயரைச் சொல்லி
காசுகள் பெறுகின் றோரை
கடவுளின் கோயி லுள்ளே
கடுஞ்சிறை யாக்க வேண்டும்:
கடவுளே தடுத்தா லும்என்
கருத்தினைக் கூற வேண்டும்!"[38]

என்பதோடு

"சாத்திரங்கள் கூறுகின்ற சாதி யொரு பிரிவு
சமயங்கள் கூறுகின்ற பேத மொரு பிளவு
மாத்திரைகள் உடல்நோயைக் குண மாக்கும்: ஆனால்
மந்திரமா குணமாக்கும்? எத்தனை வேடிக்கை!"[39]

என்றும் குறிப்பிடுகின்றார் உதயை மு. வீரையன்.

சாதி, சமயம், சொர்க்கம், நரகம், அனைத்தையும் பற்றி

"சாதி மதங்கள்
சமயம் யாவும்
தாழ்வின் படுகுழிகள்
ஆதி முதலா
ளியத்தின் வலைகள்
உழைப்போர்க் காட்கொல்லி"[40]

என்றும்

"எங்கோ உள்ள துவாம்
'சுவர்க்கம்' 'கடவுள்'
'தொழுவீர்' என்னும்
சுரண்டல் கூட்டங்கள்"[41]

என்றும் ஆணித்தரமாகக் கூறுகிறார் த. கோவேந்தன்.

'மதம் மக்களுக்கு அபின்' எனும் மார்க்சீயக் கொள்கையில் ஊறிய கவிஞரால் இத்தகைய கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

மூடநம்பிக்கை

மக்களிடையே நிலவும் மூடநம்பிக்கைதான் அவர்களை நிமிர்ந்து நிற்க விடாமல் செய்துவிடுகின்றது. மூடநம்பிக்கைகள் தொழுநோயினும் கேடானவை.

"ஈயும் கொசுவுங் குடிவாழ
ஈன்ற தாயும் மனங்கோண
எப்பேர்ப் பட்ட மருத்துவரும்
எம்மா லாகா தெனச்செல்ல
மூயுந் துணிமேற் புழுநெளிய
முடையும் சீயும் குடல்பிடுங்க
மூடப் பழக்க வழக்கமெனும்
முதிர்ந்து மூத்த தொழுநோயை"[42]

ஒழிக்க வேண்டுமென்கிறார் புலவர் குழந்தை. சமுதாயம் சீழ் பிடித்து நாறிக்கிடக்கிறது என்பதனைக் காட்ட இதற்கு மேல் சொற்களைப் பயன்படுத்த முடியாது.

சாதி பார்த்தும் பஞ்சாங்கம் பார்த்தும் காதல் வாழ்வினைத் தீய்ப்பது நெடுங்காலமாக நிலவிவரும் கொடுமையாகும். இதனைக் குறித்து,

"இனப் பொருத்தம் பஞ்சாங்கம் ஏனிங்கே வேண்டும்?
மனப் பொருத்தம் அன்றோ மனம்!"[43]

என்று சுப வீரபாண்டியனும்

"சாதி முறையெனும் தாழ்ந்த உரைசொலி
சாய்க்க முனைபவர் தெளியாரோ
காதல் உணர்வினர் காணும் கனவுகள்
காய்ந்த சருகெனல் முறையாமோ?"[44]

என்று கோ. மோகனரங்கனும் உருகுகின்றனர்.

தீர்வு — பகுத்தறிவுக் கொள்கை

இவற்றிற்கெல்லாம் மாற்று மருந்து பகுத்தறிவுக் கொள்கை தான். ஈ. வெ. ரா. பெரியார் தமிழ்ச் சமுதாயத்தில் செய்த புரட்சியிலேயே சாதி சமயம் எல்லாம் அடியோடு ஒழிந்திருக்க வேண்டும். அவர் ஓரளவுக்கு அவற்றின் தீமையை நாடு முழுவதும் உணரச் செய்துள்ளார் எனினும் அம்முயற்சியில் முழுமையாக வெற்றிகாணவில்லை. பகுத்தறிவுக் கொள்கையைப் பறை சாற்றிப் பலகவிஞர்கள் பாடியிருக்கிறார்கள்

என்பதுடன் சாதியை எவரும் வாழ்த்தியோ வரவேற்றோ பாடியதில்லை என்பதும் எண்ணத்தக்கது. இந்த அளவில்தான் பகுத்தறிவுக் கொள்கை தமிழ்க் கவிதை உலகில் வெற்றி பெற்றுள்ளது.

### பெண்ணடிமை

சமுதாயத்தில் சமஉரிமை பெறவேண்டிய பெண்கள் நெடுங்காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். பெண்கள் உரிமைபெற்று இந்த நாட்டையே ஆளும் பெருமை பெற்றிருக்கிறார்கள் என்றாலும் பெண்களுக்கு இன்னும் பல கொடுமைகள் இழைக்கப்படுகின்றன என்பது குறித்து இக் காலக் கவிஞர்கள் சிந்தித்துள்ளனர்.

### பரத்தைமை

பெண்களைப் போகப் பொருளாகவே வைத்திருக்கும் கொடுமை இச்சமுதாயத்தில் மண்டிக்கிடக்கிறது. விலைமகளிர் சமுதாய அடித்தளத்தில் தள்ளப்பட்டு மனம் புழுங்கி வாழும் இழிநிலைதனை,

> "கற்புச் சிறையை உடைப்பதால்
> கைது செய்யப் படுகிறோம்
> ..................................................
> எங்களுடைய நீதிமன்றத்தில்தான்
> ஒழுக்கம் தண்டிக்கப் படுகிறது
> நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம் --
> ஆடை வாங்குவதற்காக"[45] எனவும்
> "நாங்கள் அடிமைகள்
> அதனால்தான்
> எங்கள் சாம்ராஜ்யத்தில்
> சூரியன் உதிப்பதுமில்லை
> அஸ்தமிப்பதும் இல்லை"[46]

எனவும் வரும் கவிதைப் பகுதியால் உணரலாம்.

### கற்பழிப்பு ;

இன்று சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் பெரும் கொடுமை கற்பழிப்பாகும். துரை மாணிக்கம் 'வில(ா)ங்கு', 'அத்திப்பூ' ஆகிய குறுங்காப்பியங்களில் ஒரு கதைக் கருவாக இந்நிலையைக் காட்டுகிறார். கற்பழிக்கப்பட்ட ஓர் ஆசிரியை தன் கணவனோடு நீதி கேட்டுச் சென்றபோது

அக்கயவனே அறங்கூறவையத் தலைவனாக வீற்றிருந்தமை யினைப் பின்வரும் பாடற்பகுதி உணர்த்தும்.

சிதைக்கப்பட்ட உடலோடும் செத்துப்
புதைக்கப் பட்ட நெஞ்சோடும்: தன்னால்
அருந்துயர் உற்ற கணவன் தன்னொடும்
பெருந்துயர் மன்றம் புகுந்தனள்: ஆங்கே,
மங்கையின் கற்பை மாய்த்த
வெங்கொடுங் கயவனே வீற்றிருந் தானே''[47]

வேலியே பயிரை மேய்கிறது என்பதனையும் நிலைமை இவ்வாறு தொடர்ந்தால் யாரை யார் பாதுகாக்க முடியும் என்பதை வினாவாகத் தொடுத்தும் கவிதை நடக்கிறது.

காதலும் சாதியும்

சில இளைஞர்கள் கன்னியரின் உடலழகுக்கு ஆட்பட்டுக் காதல் வயப்படுகின்றனர். அப்போது சாதி, சமயம் ஆகியன கண்முன் வருவதில்லை. ஆனால் திருமணம் என்று வரும் போது சாதி உணர்வுக்காட்பட்ட உற்றம், சுற்றம், பெற்றோர் எல்லாரும் திரண்டெழுந்து காதலைச் சாய்த்து விடுகின்றனர். இப்படி நேரும் என்பதனை உணர்ந்த ஒருபெண் தன்னை விரும்பும் இளைஞனுக்கு,

சாதிகளே இல்லையென்று சொல்வார்; ஆனால்
சங்கடங்கள் வருவதெல்லாம் சாதி யால்தான்;
ஈதறிந்த நான்பிறந்த சாதி வேறு
ஈர்க்கின்ற திறம்காட்டும் நீங்கள் வேறு;
பாதியிலே முடிவதற்கா வாழ்க்கை? வீணே
படபடப்பில் காதலித்துக் கலங்க வேண்டாம்''[48]

என்று எச்சரிக்கை விடுக்கிறாள்.

ஒரு பெண்ணைக் காதலித்தவன் சாதி வேற்றுமைகருதி அவளை மணம் செய்து கொள்ள முடியாமல் வேறொருத்தியை மணக்க முற்படுகிறான். இந்நிலையில்,

"பொருளில்லா வறியவள்நான்; சாதிவேறு
போட்டுவிடும் தடை யென்றேன்; நிலையில் லாத
பொருளெதற்கு? பண்புடைமை போதும், இன்றே
பொசுக்கிடுவோம் சாதியினை'' என்று கூறித்
தெருளூட்டி மலர்விட்டு மலரை நாடித்
தேனுண்ணும் வண்டாக மாறி என்னை

இருளிட்ட புலிமுழைஞ்சில் வீழ்த்தி வேறோர்
ஏந்திழையை மணம் செய்யத் துணிந்தீர் போலும்!'[49]

என்று காதலி குமுறுகிறாள்,

வரதட்சணை :

வரதட்சிணைக் கொடுமை இப்பொழுது இந்தியா முழுவதும் மேலோங்கி நிற்கிறது. இந்தியத் தலைமை அமைச்சரின் நேரடிக் கவனம், எச்சரிக்கை, சட்டங்கள் ஆகிய எல்லாம் இருந்தும் வரதட்சிணைக்காகக் கொலைகள் நடக்கின்றன. தமிழ்க் கவிஞர்களில் வா. மு. சேதுராமன், கோ. மணிவண்ணன், இரா. இளவரசு ஆகியோர் இதனைப் பாடுகின்றனர். கோ. மணிவண்ணனின் 'சுந்தரி சபதம்' எனும் குறுங்காப்பியம் 'வரதட்சிணை'யைக் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப் பட்டுள்ளது. தன்னைப் பலரும் வந்து பெண்பார்த்து விட்டுச் சென்றும் பணமில்லாக் கொடுமையால் மணம் நிகழத் தடை ஏற்படுகிறது என்பதனை ஒரு தலைவியின் கூற்றாக இரா. இளவரசு பாடுகிறார்.

"இத்தனை ஆயிரம் எண்ணிவைத் தால்தான்
ஏற்கலாம் பெண்ணை என்றன ராம்சிலர்!
... ... ... ... ... ... ... .... ... ...
பண்பை எவனடி பார்க்கிறான் நன்று?
பணத்தை யல்லவோ கேட்கிறான் இன்று!
துன்பமாம் துன்பம் படித்தவன் பெரிய
தொகையெதிர் பார்த்தால் ... ... ...... ........"[50]

எனும் பாடற்பகுதியில் பெண்கள் படும் துயரையும் படித்த ஆண்கள் தங்களை விலை நிர்ணயித்து விட்டுவிடும் அவல நிலையினையும் காண்கிறோம்.

தீர்வு

கதை இலக்கியத்தில் நாட்டின் நிலையை உள்ளவாறே கூறி அப்படியே விட்டுவிடுவதே பெரும்பான்மை. ஆனால் இது போன்ற கொடுமைகளுக்குத் தீர்வு என்ன என்பதனையும் கவிஞர்கள் பலர் மறக்காமல் பாடுகின்றனர்.

கலப்பு மணம்

'கலப்புத் திருமணம் செய் தோழா!
கலப்புசெய் கலப்புசெய் கலப்புசெய் தோழா

கலப்புத் திருமணம் செய் தோழா!
... ... ... ... ... ... ... ... ... ...
மாமன் மகன் – அடே அத்தை மகள் இவள்
மாறாத 'முறைப்பெண்' என்னும் பழம்பாட்டுக்
கோமாளி உறவெல்லாம் குப்பையில் போட்டிடு
குவலயத் தோடுபெண் கொண்டு கொடுத்திடு''[51]

என்கிறார் பொன்னடியான்.

(2) விதவை மறுமணம்:

விதவை மறுமணம் குறித்துப் பாரதியாரும், பாரதிதாசனும் முன்னோடிகளாக இருந்து முன்னரே உணர்ந்து பாடியிருக் கின்றனர். அவர்கள் வழி வந்த இக்காலக் கவிஞர்களும் 'கைம் பெண்' களுக்கு மறுவாழ்வு வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி

'வேனிலும் இளமை மேவிடக் கண்டு
மேதினிக் கெழில்பூ தூவிடக் கண்டு
தானுளம் வாடும் தனியிர வதனில்
தையலின் வாட்டம் தணிந்திட இன்று
இன்னொரு கவிதை தீட்டு''[52] என்றும்,
''இல்லாள் இறந்திடின்
தள்ளா வயதிலும்
கொள்வான் மறுமணமும் — செய்து
கொள்வான் மறுகணமே! — இந்தப்
பொல்லா உலகினில்
நல்ல இளமையில்
முல்லை விதவையடா! அவளுக்கு
இல்லை இல் வாழ்க்கையடா!
... ... ... ...... ...அட
நித்தம் உணர்வுகள்
கொத்திப் பிடுங்கிட
தத்தை துடித்திடவோ? — வாழ்வைச்
செத்து முடித்திடவோ''[53]

என்றும் பாடுகின்றனர். என்றாலும் இவ்விவாதம் இன்னும் வலுவாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்! காதலை மனம்போன போக்கில் வாரிக் கொட்டியிறைக்கும் கவிஞர்கள் சமுதாய சீர் திருத்தத்தின் சரியான பகுதியை உறுதியாக நின்று வலியுறுத் தாதது குறையேயாகும்.

(3) குடும்பநலம்

மக்களை அளவிறந்து பெறுதல் பெண்களைப் பெரிதும் அடிமைப்படுத்துகிறது. இந்தியச் சமூகத்தில் மிகுதியான பாச உணர்வுக்கு ஆட்பட்ட பெண்கள் மக்கட்பேறு எய்தியபின் கணவனது ஈடுபாட்டைவிட மக்கள் மீது கொண்ட ஈடுபாட்டைப் பெரிதாக வளர்த்துக்கொண்டு குடும்பப் பிணைப்பை மிகுதிப்படுத்திக் கொள்ளுகின்றனர். குடும்ப வாழ்வுக்கு இது தேவையானது என்றாலும் அளவிறந்த பிள்ளைப்பேறு பெண்களைத்தாம் பெரிதும் தாழ்த்துகிறது. அளவோடு நின்று வளம் காணக் குடும்பநலத்திட்டம் தக்க துணைசெய்யும். அரசின் திட்டங்களில் இது குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றது. பெரி. இலக்குமணச் செட்டியார் போன்ற கவிஞர்கள் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வாறாகப் பெண்கள் விடுதலைக்கான பல கூறுகளும் கவிஞர்களின் பார்வையில் தைத்து உயிர்ப்பான வடிவம் பெறுகின்றன.

**சமத்துவம், சமூகப் பொதுமை**

இனி, சமூக சீர்திருத்தத்தின் பிற கூறுகளையும் ஆராயலாம்.

பொதுவாகவே எங்கும் எதிலும் சமத்துவம் நிலவவேண்டும் என்றும், சமூகப் பொதுமை ஒன்றே தெளிவான காட்சியை வழங்கும் என்றும் அனைவரும் கருதுகின்றனர். சமுதாய சீர் திருத்த நோக்குடைய கவிஞர்கள் இதனை வலியுறுத்தாமல் இருக்கமாட்டார்கள். ஒருபுறம் மேட்டுக் குடி வாழ்வும் மற்றொரு புறம் பள்ளத் தாக்கிலிருந்து பரம்பரை பரம்பரையாக எழுந்திருக்க முடியாத நிலையும் உள்ளன. இவற்றுக்கிடையே ஒரு சமரசம் உண்டாகவேண்டும் எனும் மனநிலையும் கொள்கையும் அனைவர்க்கும் உள்ளன என்றாலும் சமத்துவம் உண்டாக்குகிறோம் என்ற பெயரில் மேலிருப்பவர்களை வெட்டிச் சாய்ப்பது முறையாகாது என்றும் கருதுகின்றனர்.

> "வாடுகின்ற பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சி
> வளர்ப்பதுவே முறையாகும் அன்றிச் சற்றும்
> வாடாமல் வளர்பயிரைத் தண்ணீரின்றி
> வாடவைத்துச் சமன்செய்தல் வழக்காறாமோ?"[54]

என்று கருத்துடன் கேட்கிறார் புலவர் குழந்தை.

> "பாடறிந்து வாழ்வுதர மறுப்பார் தம்மைப்
> பாட்டாலே நீ சாடு உறுதியோடு!

"வாடுகிறார் வாடுகிறார்' என்றே சொல்லி
வாய்ச்சேவை செய்யாதே உன்றன் பாட்டால்"[35]

என்று அரசுதாசன் முழங்குகிறார்.

முதலாளியும் தொழிலாளியும் புரிந்து கொண்டு செயலாற்றினால் அதுவே சமத்துவத்துக்கு வழி வகுக்கும் என்னும் கருத்தில்.

"கொள்ளை அடிக்காதீர் — உழைக்கும்
கூலி மறுக்காதீர்
வெள்ளை உளமோடு — கூலி
விரும்பிக் கொடுத்திடுவீர்"[56]

எனப் பாடுகிறார் மு. உலகநாதன்

சமத்துவமற்ற நிலை பல வகையிலும் உலகெங்கும் காட்சியளிக்கிறது என்பதனை,

"ஒருபுறத்தில் மனிதரில்லாவெறுமைப் பூமி!
ஒருபுறத்தில் புற்றீசல் மனிதர் கூட்டம்!
ஒருநாட்டில் பெருவிளைச்சல் ஆன தாலே
ஒண்கடலில் எறிகின்ற காட்சி; இங்கே
ஒருநாட்டில் எச்சிலைக்குச் சொறிநா யோடே
ஓயாத போராட்டம் நடக்கும் காட்சி"[57]

என்று விரிந்த பார்வையில் காட்டுகிறார் கா. வேழவேந்தன்.

"மலையின் முடியில் ஒருவனும் — புழுதி
மண்ணில் கிடக்கும் ஒருவனும்
இலையெனக் கூறும் நிலையினை — நாம்
இன்றே படைத்திட வேண்டுமே"[58]

என்கிறார் கோ. மோகனரங்கன்.

இவ்வாறாகக் கவிஞர் பலரும் சமூகப் பொதுமை பற்றிச் சரியான நெறியில் நின்று கவிதை வழங்குகின்றனர்.

### பொருளியல் பொதுமை, பொதுவுடைமை

சமவாய்ப்புகள் (Equal opportunities) அளிப்பதன் வாயிலாக ஏற்படும் பொதுமையினும் பொருளாதார நிலையில் ஏற்படும் சமத்துவமே சரியான, உடனடியான தீர்வாகும். வறுமை பலரை வாட்டுகிறது. அதனினின்றும் விடுபட்டால் வாழ்வின் அடித்தளம் வலுவாக அமைந்துவிடும்.

"வறுமையப்பா பலரைவாழவிடப்பா — நாட்டை
வளமையாகக் கொஞ்சமேனும் ஆளவிடப்பா
கருமியான உனது தன்மை மாறவிடப்பா"[59]

என்று வறுமைக்கு வேண்டுகோள் விடுகிறார் கலைக்கூத்தன்.

"பருப்புடன் நெய்யே உண்பவன் ஒருநாள்
பாடுபட்டால் என்ன? — தன்
பணத்திமி ராலே உழைக்கா தவன்எக்
கேடுகெட்டால் என்ன? — இங்கு
'இருப்பவன், ஏழை' என்கிற இழிநிலை
மறைவதில் தடை என்ன? — நெஞ்சு
இளைத்தவர் எல்லாம் ஒன்றுபட் டால்பின்
எழுகிற விளைவென்ன?"[60]

இவ்வாறு பணம்படைத்தவனும் உழைக்கத் தொடங்குவது ஒரு நல்ல தீர்வும் சமத்துவம் மலர்வதற்கான அறிகுறியும் ஆகும் என்று நினைக்கிறார் தமிழ்நம்பி.

"ஒருவன் வாட, மற் றொருவன் வாட்ட
இருப்பதா வாழ்வு? இதுவா வாழ்வு?
... ... ... ... ...

என்றைக்கு

ஏழ்மை, வறுமை இடுகா(டு) ஏகுமோ
சத்தியம் பூக்குமோ சமத்துவம் சிரிக்குமோ
இலட்சிய வெறிகொண் டிளைஞர் பட்டாளம்
புதிய உலகுக்குப் பூசை போடுமோ
பழைய பொய்ம்மைகள் பயந்தோ டிடுமோ
தன்னலம் மறந்து தாயகம் காத்த
மறவா படைக்கு மரியாதை கிடைக்குமோ"[61]

அன்றுதான் சமதர்ம உலகைக் காணலாம் எனக் குறிப்பிடு கிறார் மீரா.

இந்தியா முழுமைக்கும் பொதுவுடைமை பூக்க வேண்டு மெனப் பாரதியாரும், 'எல்லார்க்கும் எல்லாமென்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்றதிந்த வையம்' என்று பாரதிதாசனும் பாடினர்.

உலகில் பொதுவுடைமை அரசுகள் சில அமைந்து ஏற்றத் தாழ்வுகளை அகற்றிச் சமுதாய ஏற்றம் காணச் செய்திருக்கும் செய்தியை அனைவரும் உணர்வர். இந்நிலையில் எங்கு பார்த்

தாலும் ஏமாற்றும், பூசலும் மண்டிக்கிடக்கும் சமுதாயத்திற்குப் பொதுவுடைமைக் கொள்கையே பொருத்தமான மாற்று மருந்து என்று பல கவிஞர்கள் கருதிப் பாடுகின்றனர். இதனை,

"ஏற்றம் இறக்கம்
தட்டிச் சமநிலை
எய்திடல் நம்வேலை
மாற்றம் என்பது
பொருளாதார
மடுவினைத் தூர்ப்பதுவே"[62]

என்ற பாட்டில் வலியுறுத்துகிறார் த கோவேந்தன். பொது வுடைமை பூப்பதற்கு முன்னால் துன்பப்படுகிற ஏழைகள் நிலையினையும் சுரண்டப்படுகின்ற தொழிலாளர்கள் நிலையினையும் இக்காலக் கவிஞர்கள் பாடுபொருளாக்கிப் பார்க்கின்றனர்.

ஏழைகள் நிலை

ஏழைகளின் ஓலைக் கிடங்கைப் பார்க்கும் இரா. வைரமுத்து, அவை

"ஏற்றி முடித்த இருட்டின் எச்சம்
காற்றில் உதிர்ந்த கனவின் மிச்சம்
வெறுமையின் நிறைவிடம் வறுமையின் ரகசியம்!"[63]

எனக் கவல்கின்றார்.

நாட்டில் அவ்வப்போது நடைபெறும் தீய நிகழ்ச்சிகள் மிகப்பலரிடம் எந்த உணர்ச்சியையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் கவிஞர்கள் நெஞ்சில் அந்த நிகழ்ச்சிகள் நெருப்புப் பொறிகளாக விழுந்து விடுகின்றன. அவை நெருப்புத் துண்டங்களாகக் கனிந்து நிற்கும்போது சிறந்த சொல்லாட்சியுடன் கூடிய கவிதைகள் உருவாகின்றன. அந்நிலைச் சமுதாயத் துக்கும் சற்று உணர்ச்சிவரச்செய்யும் முயற்சியாக அமைகின்றது.

"நெருப்பை நீயும் நேசிப்ப தில்லை
நெருப்பே உன்னை நேசிக் கின்றது"[64] என்றும்

"எங்கும் நெருப்புப் பரவிடுதே — ஐயோ
எங்கள் விழிநீர் பெருகிடுதே!
பொங்கும் துயரில் புதைகின்றோம் — நாங்கள்
புழுதித் தரையில் அழுகின்றோம்!

கஞ்சிக் கலயம் இழந்துவிட்டோம் — பழைய
கந்தல் உடையும் பறிகொடுத்தோம்!
எஞ்சும் உயிரை இழக்காமல் — இன்னும்
ஏனோ நலிந்து கிடக்கின்றோம்?'![65]

என்றும் உளம் நெகிழ்ந்து பாடுகின்றனர். இத்தகைய குடிசைகளில் வாழும் ஏழைகள்.

"காட்டுமூலிகை போல்
கண்டெடுக்க முடியாமல்
ஓட்டைக் குடிசைகளில்
உயிர் வாழும் நடைப்பிணங்கள்!"[66]

என்கிறார் நா. காமராசன். இந்த ஏழைகளுக்கு எப்படியாவது வாழ்வளித்துத் தீர வேண்டும் எனும் கவிஞர்க்கு வயல்களைப் பார்த்ததும் வளமான சிந்தனை பிறக்கிறது.

"காலமெனும் பெருவெளியில்
காற்றைப் போல்
நீரைப் போல்
சோறிடு வோம்

எங்கள் சபதம் இது —

"ஏழைகளின் அடுப்பெரிப்போம்
இல்லையெனில் சூரியனில்
தீக்குளிப்போம்"[67]

என்று வயல்கள் சூளுரைப்பதாகக் கூறுகிறார்.

ஏழ்மைத் துயரை உருவகமாகப் படம்பிடிக்கிறார்கள் சிலர்.

'கொடி மரத்துக்குக் கூட ஒரு பெருமை இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு துணியாவது தொங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஏழை உடுத்திக்கொள்ள அந்த ஒரு முழத் துணி கூடக் கிடைக்கவில்லையே'[68] என்கிறார் ஒரு கவிஞர். அது மட்டுமின்றி

"ஏழைப் பெண்களுக்குச்
சூலுற்ற காலத்தில் மட்டுந்தான்
வயிறு நிறைகிறது"[69]

என்கிறார் மற்றொரு கவிஞர்.

ஏழைகளிலும் தண்டிக்கப்பட்டவர்களாக விளங்கும் தொழுநோயாளர்களைப் பாடுவதன் வாயிலாக அவர்களை யாரும் மறக்க முடியாதபடிச்செய்துவிடுகிறார் இரா. வைரமுத்து.

### தொழிலாளர் நிலை

தொழிலாளர்கட்காகப் பெரிதும் முனைந்து கவிதை படைத்துள்ளவர் முற்போக்குச் சிந்தனையாளரான தணிகைச் செல்வன்.

> "தொழிலாளி வர்க்கத்தைத் துண்டாக்கி ரெண்டாக்கும்
> சூழ்ச்சிகள் ஒருபக்கம்! துப்பாக்கி ஒருபக்கம—"[70]

என்றும்

> "உழவனுக்கும் பாட்டாளிக்கும் கூலிபோதலை — நாட்டில்
> உழைக்கவரும் பிள்ளைகட்கு வேலை கெடைக்கலை."[71]

என்றும் பல நிலைகளிலும் பாட்டாளிகள் படும் துயரைப் பாடுகின்றார்.

### அரிசனங்கள்

அரிசனங்கள் படும் துயரையும் இன்றும் பலவகையில் ஒதுக்கி வைக்கப்படுதலையும் கலக்கத்தோடு கூறுகிறார் தணிகைச் செல்வன்.

> "கண்ணகியார் வீசிவிட்ட மதுரைத் தீயிலே — அன்று
> கருகிப்போன மக்கள் — எங்கஜாதி மக்களே!
> கண்ணகி போய்ஒசந்த ஜாதி ஜனங்களைமட்டும்-அவ
> காப்பாத்தினாள் பிறகுயாரு? நாங்கள்தான் மிச்சம்."[72]

இவ்வாறு சிலப்பதிகாரக் காலத்திலேயே தாங்கள் கொடுமைக்காளானதாய் அரிசனங்கள் நினைக்கிறார்களாம்.

> "நொந்து நொந்து வெந்து வெந்து இன்றுவரையில்—நாங்க
> நூறுநூறு ஆண்டுகளாய் இந்தப் பூமியில்
> சொந்தமென்று என்ன கண்டோம்பசியைத்தவிர — எங்க
> சொத்து என்று என்னகண்டோம் உசிரைத் தவிர?" [73]

அரிசனங்களின் முன்னேற்றத்திற்காக எவ்வளவோ திட்டங்கள் தீட்டப்பட்டாலும் நிலைமை மாறவில்லை என்பதனை இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

### அடிப்படையில் தேவைப்படும் மலர்ச்சிகள்

#### 1. கல்வி

சமுதாயத்தைச் சீர்திருத்துவதில் படிப்படியான முறைகளும் உண்டு. கல்வி அனைவர்க்கும் கிடைக்கச் செய்வதன் வாயிலாக அறியாமையைப்போக்கி, உலகைப் புரிந்து

கொண்டு, ஏமாற்றுவோருக்கு இடந்தாராமல் ஒதுக்க வழி ஏற்படுத்துவது நன்முறையாகும். இந்தியச் சூழ்நிலையில் இதுவே தக்க முயற்சியாகக் கருதப்படுகிறது.

“வடநாட்டிலும் தென்னாட்டிலும் முற்சாதியினராகிய பிராமணர்களே மிகுந்த கல்வி வாய்ப்பையும் வேலை வாய்ப்பையும் பெற்று வந்தனர். இந்நிலையில் அரிசனமக்கள் போன்றவர்கட்கும் கல்வி வாய்க்க வேண்டுமென்றால் ஊர்ப் பள்ளிகளின் சூழல் மாறவேண்டும். சாதியுணர்ச்சியற்ற பொறுப்பான ஆசிரியர் இதில் முக்கிய பங்கு வகிக்க முடியும்.”[74] என்பார் கூற்றும் கருதத்தக்கது.

புதுமைவாணன் ஒரு ‘புரட்சிப் பெண்’ணைப் படைக்கிறார். காளியம்மன் கோவில் கட்டிக் குடமுழுக்குச் செய்யப்போகும் வேளையில் அவ்வூர்ப் பண்ணையாரையும் மக்களையும் ஒரு பெண் கலங்க வைக்கிறாள். சாமி வந்து விட்டதாக ஆடும் பெண் அவர்களது மூட நம்பிக்கையையே கருவியாகக் கொண்டு,

“எத்தனையோ பேர்படிக்கா திருக்கும்போது
பணமீந்து கல்விதனை வளர்க்கப் பள்ளி
பலப்பலவும் கட்டியதில் ஏழை மக்கள்
உணவருந்தி இலவசமாய்க் கல்வி ஓத
உகந்தநற் பணிமுடிக்கா தெனக்குக் கோயில்
தனைக்கட்டி விழாவெடுக்கும் மடையா!
..........................................................
என்மக்கள் ஏழைமக்கள்! அவர்க்குக் கல்வி
ஈந்துபணி புரிந்திடுவோர் எனது பக்தர்!”[75]

என்று தெளிவுபடுத்துகிறாள்.

2. புரட்சி

வேகமான புரட்சி ஒன்று எழுந்தால்தான் விரைவாக வளர்ச்சி காண முடியும் எனப் பலர் நம்புகின்றனர்.

“வாழ்வைச் சுவைக்கும் வழியைத் தடுக்கும்
வல்லரண் யாவையுமே
போழ்ந்து பொசுக்கிப் புரட்சிமுன் நிறுத்திப்
புதுக்குவோம் உலகத்தை”[76]

என்கிறார் த. கோவேந்தன். அரசுதாசன் ‘நான் கடவுளானால்’ என்று கற்பனை செய்து கொண்டு

"திறமின்றிப் பெரும்பதவி வகிப்போர் மேனி
தீ போலத் தினந்தினமும் எரியச் செய்வேன்
புறம்பேசிச் சுயலாபம் சேர்ப்போர் வாய்தான்
புழுநெளியும் சாக்கடையாய்ப் போகச் செய்வேன்"[77]

என்கிறார். வெறும் கற்பனை செய்து புது உலகம் படைத்து விடமுடியாது என்பதனையும் பொங்கி எழுந்தவரே புதுமை காண்பார் என்பதனையும் சீர்திருத்திகள் கண்டு கொண்டார்கள். கற்பனையோ, போதனையோ தேவையில்லை என்று முடிவு கட்டிக் கொண்டு

"பொறுத்த தெல்லாம் பொறுத்தோம் ஒரு புண்ணிய
மில்லை — காந்தி
போதனைகளாலே எங்க புண்ணு ஆறலை
இருபத்தேழு வருஷமாக ரத்தம் சிந்தினோம் — இனி
இதுக்குமேலே ரத்தமில்லை நெருப்பைச்
சிந்துவோம்."[78]

என்கிறார் தணிகைச் செல்வன். புரட்சிவேண்டும் என்று முடிவுக்கு வந்த பிறகு கூட நேரடிச் செயலில் இறங்காமல் புரட்சியை அன்புடன் அழைக்கும் மிதப்போக்கும் காணப் படுகிறது.

மா. செல்வராசன் தன் 'வைகறை மலர்களில்'

"புரட்சியே புகல். இப்போது!
பொறுப்பதா இனியும், மேல்கீழ்ப்
புரட்டினைப் போக்க வேண்டும்:
புறப்படாய், புயல்வீ சட்டும்!
இருள்கிழி மின்னல் வெட்ட
இடியெழுந் தார்க்க வையப்
பொருள் எலாம் பொதுவாய் மாற்றும்
புரட்சியே வாராய் இங்கே!"[79]

என்று அழைப்பதில் வேகம் முழுமைப்படாத நிலையாகவே நிற்கிறது.

"அடிப்பவர்க்கும் முதுகெலும்பை ஒடிப்பவர்க்கும்
அன்றியிங்கே
அன்பான சொற்களுக்கோ அணுவேனும்
மதிப்பில்லை"[80]

என்று கண்டிப்புக் காட்டுகிறார் சுப. வீரபாண்டியன்.

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால்"

என்று பாரதிதாசன் கூறும்போதே என்ன நடக்கப்போகிறது என்பது தெரிந்து விடுகிறது. அதே போக்கைத் தொடர்கிறார் த. கோவேந்தன். பாரதிதாசனின் உலகப் பண்பாட்டின் போக்கிலேயே

"உதைக்கும் உதையில்
உலகின் உண்ணிகள்
உறவற்று அழியட்டும்
... ... ... ... ... ... ... ... ...
உலுக்கும் உலுக்கில்
முதலா ளிப்பேய்
உயிர்கள் முடியட்டும்"[81]

என்கிறார் த. கோவேந்தன்.

முடிபுகள் :

சமுதாயச் சிக்கல்களுக்கான தீர்வுகள் பற்றி நம்பிக்கை வறட்சியுடன் பாடுவோர், நம்பிக்கையுடன் பாடுவோர் என இருவகையினரும் உள்ளனர். அரசியல்வாதிகள், அதிகாரிகள், வணிகர்கள் மக்கள் ஆகியோராலேயே சமுதாயச் சீர்கேடுகள் மலிவதாகக் கருதுகின்றனர். சமுதாயச் சீர்கேடுகட்குக் காரணியமாக அமைபவையாகச் சாதி, சமயம், சடங்குகள், மூட நம்பிக்கை ஆகியவற்றைக் காட்டுகின்றனர். இவற்றிற்கு மாற்று மருந்தாகப் பகுத்தறிவுக் கொள்கை கருதப்படுகிறது.

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளாகப் பரத்தமை, கற்பழிப்பு, சாதிமுறை, வரதட்சிணை ஆகியவை அமைகின்றன. பெண்கள் விடுதலை பெறுவதற்கான தீர்வு களாகக் கலப்பு மணம், விதவை மறுமணம், குடும்ப நலம் ஆகியவை பற்றிக் கவிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

கணவன் மனைவியர்க்குள் பிளவு ஏற்பட்டு மனஒருமை சிதையுமாயின் மணவிலக்குப் பெற்றுக் கொள்ளுவதற்குச் சட்டம் இடம் தருகிறது. கவிஞர்கள் பதிவு செய்யப் பெறாத மக்களின் சார்பாளர்கள் (unacknowledged legislators) என்று பெயர் பெற்றவர்கள். அவர்கள் இக்காலத்தில் பெண்கள் விடுதலைக்குப் பெரிதும் தேவையானதும், அடிமைப்பட்டு உழலும் பெண் தன்னை விடுவித்துக் கொள்ள வாய்ப்புள்ளது

மான மணவிலக்கினை ஏன் பாடவில்லை என்பது புதிராகவே உள்ளது.

சமுதாய சமத்துவம் கண்டு, பொருளியல் ஏற்றத்தாழ்வு போக்கும் பொதுவுடைமை பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளது. சமுதாயத்தைச் சீர்திருத்தும் சரியான நீர்வுகளாகக் கல்வியும் புரட்சியும் காட்டப்படுகின்றன.

இக்காலக் கவிதைகள் அனைத்தையும் ஆராயும்பொழுது பாடுபொருள் வன்மை கொண்டும், கவிஞர்தம் சீரிய நோக்கம் கொண்டும் இக்கால கட்டத்தைச் 'சீர்திருத்த இலக்கிய காலம்' என்று கூறலாம்.

## குறிப்புகள்

1. "The Social reform movement was uniquely a result of English education" - Chalres H. Heimsath, 'Indian Nationalism and Hindu social reform'. p.47

2. "Justice and Education were denied to the poor including the non-Brahmins and the lower castes until the Bengal Renaissance brought an impressive change and an all round reformation which shook the entire country" - Jamua Nag, Rajaram Mohan Roy, p. 141.

3. பி. எசு. இளங்கோ, சர். பி. தியாகராயர் முதல் டாக்டர் கலைஞர்வரை பக், 37, 38.

4. வே. ஆனைமுத்து (தொ. ஆ.) பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், (முதல் தொகுதி) ப. 458.

5. இரா. சேது, 20–ஆம் நூற்றாண்டுச் சமுதாய மறுமலர்ச்சிக்கு அண்ணாத்துரையின் சிறுகதை: புதினங்களின் கொடை, சென்னைப் பல்கலைக்கழகத்திற்குப் பிஎச்.டி. பட்டத்திற்கு வழங்கப்பட்ட ஆய்வேடு ப. 17

6. "We have always maintained that the blind superstitions and the social evils which hold the names

in their grip have kept them in poverty and ignorance."

— N.K. Mangala Murugesan, 'Self respect in Tamilnadu', 1920 — 1940, P. 202.

7. தா. வே. வீராசாமி, தமிழில், சமூக நாவல்கள், ப. 18
8. மேலது. ப. 57
9. இராம. பெரியகருப்பன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு ப. 183.
10. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 314.
11. மேலது.
12. குருவிக்கரம்பை சண்முகம் கவிதைகள், ப. 41.
13. சுரதா, துறைமுகம், ப. 133.
14. இரா. வடிவேலன், முன்னுரை, தமிழ்க்குமரன், தமிழருவி.
15. சாலை இளந்திரையன், பூத்தது மானுடம், ப. 41.
16. மேலது, முன்னுரை, ப. 6.
17. பி. யோகீசுவரன், அறுபதாண்டுத் தமிழ்க்கவிதை (1920 — 1980) கழக மணி விழா மலர், ப. 73.
18. செம்பை சேவியர் சுப. வீரபாண்டியன், என்னுரை: புதுத்தென்றல், ப. 10.
19. கலைக்கூத்தன் கவிதைகள், ப. 123.
20. கோ. மோகனரங்கன், சித்திரப்பந்தல், ப. 51.
21. எசு. டி. சுந்தரம், கவியின் குரல், ப. 100.
22. நேரில் கேட்டது.
23. அப்துல் ரகுமான், பால்வீதி.
24. நா. காமராசன், கறுப்பு மலர்கள், ப. 39.
25. இரா. வைரமுத்து, வைகறை மேகங்கள், ப. 76.
26. சாமி பழனியப்பன், மலர்கள், ப. 80.

27. செ. சே. சுப. வீ., மு. நூ., ப. 25.
28. மு. உலகநாதன், அமுதக்கலயம், ப. 163.
29. மேலது, ப. 165.
30. வெ. நடராஜன், புதிய ராகங்கள், ப. 81.
31. மேலது, ப, 82.
32. செல்வ கணபதி, கவிதைகள், ப. 35.
33. வெ. நடராசன், மு. நு., ப. 40.
34. ப. சிவராம கிருட்டிணன், முத்துமாலை, ப. 33.
35. தமிழ்ப் பரிதி, ஓ; புரட்சி நெஞ்சங்களே, ப. 42.
36. தென்னவன், மலர்ந்தபின்பு, ப. 10.
37. கருமலைத் தமிழாழன், நெஞ்சின் நிழல்கள், ப. 48.
38. உதயை. மு. வீரையன், அக்கினிக் குஞ்சுகள், ப. 34.
39. மேலது, ப. 37.
40. த. கோவேந்தன், புதியதோர் உலகம் செய்வோம், ப. 15.
41. மேலது, ப. 28.
42. புலவர் குழந்தை, பாடல், ப. 92.
43. செ. சே., சுப. வீ., மு. நூ., ப. 23.
44. கோ. மோகனரங்கன், மு. நூ., ப. 32.
45. நா. காமராசன், மு. நூ. ப. 88.
46. மேலது, ப, 90.
47. துரை மாணிக்கம், பாவியக் கொத்து, ப. 58.
48. சேர. சந்திரகாசன் கவிதைகள், ப. 6.
49. இரா. இளவரசு, விடுதலை, ப. 52.
50. மேலது, ப. 55.
51. பொன்னடியான், ஒரு கைதியின் பாடல்கள், ப. 46.
52. மின்னூர் சீனிவாசன் கவிதைகள், ப. 35·
53. தமிழ்க்குமரன், மு. நூ. ப. 28.
54. புலவர் குழந்தை பாடல். ப. 161.
55. அரசுதாசன்; அழகுமலர். ப. 11.

56. மு. உலகநாதன், மு. நூ. ப. 176.
57. கா. வேழவேந்தன், வண்ணத்தோகை, ப. 53.
58. கோ. மோகனரங்கன், மு. நூ. ப. 25.
59. கலைக்கூத்தன், மு. நூ. ப. 116.
60. தமிழ் நம்பி, இதயப்பூங்கா, ப. 36.
61. மீரா, மூன்றும் ஆறும், பக். 69-70.
62. த. கோவேந்தன், மு. நு. ப. 22.
63. இரா. வைரமுத்து. மு. நூ. ப. 12.
64. மேலது.
65. கோ. மோகனரங்கன், மு. நூ., ப. 49.
66. நா. காமராசன், மு. நூ., ப. 26.
67. மேலது. பக் 84-85.
68. இளங்கம்பன்-நேர்காணலில் கேட்டவை.
69. மேலது.
70. தணிகைச் செல்வன் கவிதைகள், ப. 48.
71. மேலது. ப. 55.
72. மேலது. ப. 69.
73. மேலது. ப. 71.
74. "One suggestion that to make these schools more congenial to such a social environment would be the teacher. The teachers should be recruited from the Harijan Community or from among persons who have no caste prejudices."

    Alladi Vagiswari, Income earning trends and social status of the Harijan community in Tamilnadu; p. 139.

75. புதுமைவாணன், கட்டில் வீணை, ப. 42.
76. த. கோவேந்தன், மு. நூ., ப. 65.
77. அரசுதாசன், மு. நூ., ப. 65.
78. தணிகைச் செல்வன், மு. நூ., ப. 72.
79. மா. செல்வராசன், வைகறை மலர்கள், ப. 112.
80. செ. சே. சுப. வீ., மு. நூ., ப. 20.
81. த. கோவேந்தன், மு. நூ., ப. 27.

# ஆட்சி மொழி - ஒரு பார்வை

இன்று தமிழ்நாடு முழுவதும் 'எங்கும் தமிழ் — எதிலும் தமிழ்' எனும் முழக்கம் பலராலும் நிகழ்த்தப்படுகிறது. இதில் கட்சி வேறுபாடு இல்லை என்றே கூறலாம்.

உள்ளபடியே தமிழ் எல்லா மட்டத்திலும் முழு ஆட்சி மொழியாக விளங்கவேண்டும் என்பதே அனைவருடைய அவாவாகவும் உள்ளது. தமிழை ஆட்சிமொழியாகப் பயன் படுத்திய ஒரு கல்லூரி முதல்வராக, தமிழ் ஆட்சிமொழியாக வேண்டுமெனச் செயற்படும் தமிழக அரசு நடவடிக்கைகளில் பங்குகொண்ட சட்டப் பேரவைத் தலைவராக 'ஆட்சிமொழி' பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க விரும்பினேன். அதன் விளை வாக எழுந்ததே இக்கட்டுரை. இதில் எந்த அரசியல் கட்சிச் சார்பும் இல்லை. ஆனால் இயற்றப்பட்ட சட்டங்கள் செயற் படுத்தப்படாத நிலையும், தமிழ்மக்களின் மனப்போக்கும் இதில் புலப்படுத்தப்பட்டுள்ளன. நாம் என்ன செய்ய வேண் டும் என்ற குறிப்போடு இக்கட்டுரை நிறைவு பெறும். இந்த முன்னுரையோடு இப்போது செய்திகளை அலசுகிறோம்.

இந்தியா முழுமையும் உள்ள பல்வேறு மாநிலங்களும் வட்டார மொழிகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு மொழி வாரி மாநிலங்கள் அமைகிற காலம் 1956 வரை. சென்னை இராசதானி என்ற பெயருடன் விளங்கிய பகுதியில் இப் போதைய தமிழ்நாடும், இப்போதைய ஆந்திரப் பிரதேசமும், கர்நாடக மாநிலத்தில் ஒரு பகுதியும், கேரள மாநிலத்தில் ஒரு பகுதியும் அடங்கியிருந்தன. மொழிவாரி மாநிலம் பிரிக்கப் பட்டபின்தான் இப்போதைய 'தமிழ்நாடு' சென்னை மாநிலமாகி 1967-இல் அறிஞர் அண்ணா அவர்களது அரிய செயலால் 'தமிழ்நாடு' என்ற பெயர் பெற்றது.

தமிழ்நாடு என்ற பெயர்தான் பிந்தி வந்ததே தவிர தமிழக அரசு — சென்னை அரசு 1956-இல் இப்போதைய எல்லை யுடன் அமைந்ததுமே ஆட்சி மொழிச் சட்டமும் வந்துவிட்டது.

ஆம்! 1956-ஆம் ஆண்டிலேயே காமராசர் முதலமைச்சராக இருக்கும்போதே திரு. சி. சுப்பிரமணியம் அவர்களால்

கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் அது. (சட்டம் எண். 39/1956) அந்தச் சட்டத்தின் சாரம் இதுதான்:

(1) சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள், சட்டமுன் வடிவுகள் மற்றும் திருத்தங்கள் அனைத்தும் தமிழிலேயே இருத்தல் வேண்டும்.

(2) அரசியல் சட்டத்தில் 211-ஆம் பிரிவின்படிப் பிறப்பிக்கப்படும் அவசரச் சட்டங்கள் அனைத்தும் தமிழிலேயே இருத்தல் வேண்டும்.

(3) அரசியல் சட்டப்படி அரசு பிறப்பிக்கும் ஆணைகள். விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் துணைச் சட்ட விதிகள் அனைத்தும் தமிழிலேயே இருத்தல் வேண்டும்.

(4) பிரிவு 4இன்படி ஒரு சுற்றோட்டக் குறிப்பின் மூலம் அரசு அவ்வப்போது தமிழ் ஆட்சி மொழியாவதற்குரிய துறைகளை அறிவிக்கும்.

இதனைச் செயற்படுத்துவதற்கென்றே பல்வேறு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. இதில் எல்லா அரசுகளும் பங்கு பெற்றுள்ளன. தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

**பேராயக் கட்சி (காங்கிரசு) ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள்:**

| வரிசை எண் | ஆணை எண் | துறை | நாள் |
|---|---|---|---|
| 1. | 225 | பொதுத் துறை | 13— 2—63 |
| 2. | 609 | ,, | 23— 3—63 |
| 3. | 912 | ,, | 18— 5—63 |
| 4. | 1759 | ,, | 13—11—63 |
| 5. | 537 | ,, | 21— 3—64 |
| 6. | 603 | ,, | 24— 3—65 |
| 7. | 453 | ,, | 24— 2—66 |

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள்:

| வரிசை எண் | ஆணை எண் | துறை | நாள் |
|---|---|---|---|
| 1. | 1893 | பொதுத்துறை | 28— 8—67 |
| 2. | 2010 | ,, | 11— 9—67 |
| 3. | 1609 | ,, | 2— 6—68 |
| 4. | 1796 | ,, | 27— 9—69 |
| 5. | 3148 | ,, | 27—12—69 |
| 6. | 517 | ,, | 9— 3—70 |
| 7. | 2070 | கல்வித்துறை | 2—12—71 |

அண்ணா தி. மு. க. ஆட்சிக் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள்:

| வரிசை எண் | ஆணை எண் | துறை | நாள் |
|---|---|---|---|
| 1. | 1134 | கல்வித்துறை | 21— 6—78 |
| 2. | 432 | ,, | 10— 3—81 |
| 3. | 968 | ,, | 21— 5—82 |
| 4. | 317 | தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை | 31—10—86 |

அரசாணைகளின் சாரம்

முதல் கட்டம்

(1) பொதுமக்களிடமிருந்து தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் எழுத வேண்டும்.

(2) அவை பற்றிய குறிப்புகளும் தமிழிலேயே இருத்தல் வேண்டும்.

(3) துறைத் தலைமை அலுவலகங்களிலிருந்து மக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் இருத்தல் வேண்டும்.

செயற்படுத்தும் காலம்

(1) இந்த முதல் நிலை 1—3—1963 முதல் செயற்படுத்தப்பட வேண்டும்.

(2) இதற்கென்று 26—12-1962 முதல் தமிழில் எழுது வதற்கான பயிற்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

(3) முதல் நிலையை மூன்று ஆண்டுகட்குள் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். (அதாவது 1—3—1966க்குள்)

(4) குறிப்பிடத்தக்க 38 அரசு அலுவலகங்களில் இது செயற்படுத்த வேண்டும்.

(5) 38 துறைகட்கும் 56 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் கட்டம்

துறையின் தலைவர்கள் தமக்குக் கீழே பணியாற்றும் உதவியாளர்களிடத்தும் மற்றும் மாவட்ட அலுவலகங்களோடும் கொள்ளும் கடிதத் தொடர்புகள் தமிழில் இருக்க வேண்டும்.

இரண்டாம் கட்டம் 13—4—65 முதல் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது அரசாணை.

அதிலும் நினைவூட்டல்கள், மேலொப்பமிடல் போன்ற ஏனைய பகுதிகள் அனைத்தும் தமிழில் வர வேண்டும் என்பது விதியாகும்.

22 அலுவலகங்களில் 85 பிரிவுகளில் (Sections) தமிழ் இரண்டாம் கட்டச் செயற்பாட்டில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று பட்டியலிடப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டம்

துறையின் தலைவர்கள் ஒருவர்க்கொருவர் கொள்ளும் தொடர்புகள் தமிழில் இருக்க வேண்டும்.

(அ) துறைத் தலைமை மற்றும் மண்டல அலுவலகங்கள் தங்கள் சார்நிலை அலுவலகங்களோடும், மாவட்ட அலுவலகங்களோடும் கீழே குறிப்பிடப்பெற்றுள்ள விதி விலக்குகளுக்கு உட்பட்டு, எல்லாப் பொருள் களிலும் தமிழிலேயே கடிதப் போக்குவரவு நடத்த வேண்டும்.

(ஆ) திட்டத்தின் மூன்றாம் நிலையையும் இப்பொழுதே செயற்படுத்தித் துறைத் தலைமை மற்றும் மண்டல

அலுவலகங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளும்போது எல்லாப் பொருள்களிலும் தமிழிலேயே கடிதப் போக்குவரவு நடத்த வேண்டும்.

**நான்காம் கட்டம்**

தலைமைச் செயலகத் துறைகள் மட்டத்தில் கடிதத் தொடர்புகள் தமிழில் இருக்க வேண்டும்.

*1—5—1966* முதல் தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகளிலிருந்து அனுப்பப்படும் அனைத்து அலுவலகத் தொடர்புகளிலும் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆட்சி மொழிச் சட்டம் இயற்றப்பட்டு, அதனைச் செயற்படுத்தும் முகத்தான் இதுவரை 7 அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றாலும் அரசு குறிப்பிட்ட நான்கு சட்டங்கள் எதுவும் முழுமை பெறாமல் அனைத்தும் அரைகுறையாகவே நின்று விட்டன.

இதன்பின் தி. மு. க. ஆட்சி அறிஞர் அண்ணா தலைமையிலும் பின் கலைஞர் தலைமையிலும் அமைந்தபோது இந்த முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

தி. மு. க. ஆட்சிக்காலத்தில் 8 அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன.

***1967-க்குப்பின் நிலை***

*அரசாணைகளின் சாரம்*

(1) தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளிலும் முதற்கட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

(2) தமிழ் வளர்ச்சித் துறையில் அனைத்துப் பிரிவுகளிலும், தமிழ்நூல் வெளியீட்டுத் துறையிலும், மொழி பெயர்ப்புத் துறையிலும் தமிழ் எல்லாத் தொடர்புகளிலும் பயன்படுத்தப்படவேண்டும். (1967இல்)

***1968***

(3) செய்தி விளம்பரத் துறையில் முழுமையாகச் செயற்படுத்த ஆணை.

*1969*

(4) தலைமைச் செயலகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும்.

(1) தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, மாறுதல் மற்றும் பணியமர்த்தம், சுற்றுப்பயண நிகழ்ச்சி மற்றும் பல — இவை தொடர்பான குறிப்பாணைகள், அனைத்துப் பதிவேடுகளில் பேணுதல்.

(2) குறிப்புரைகள், வரைவுகள் மற்றும் வரப்பெறும் கடிதங் களின் மீதான ஆணைகள் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும்.

(பின்குறிப்பு:

தக்க தமிழ்ச்சொல் கிடைக்காதபோது பொருத்தமான ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தலாம்.)

இதில் வேடிக்கையும் வியப்பும் என்னவென்றால் 1956–இல் சட்டம் நிறைவேற்றப்பட்டுப் பல அரசாணைகளும் பிறப் பிக்கப்பட்டு 11 ஆண்டுகள் கழித்து அடுத்து வந்த ஆட்சி பிறப்பிக்கும் முதல் அரசாணையே தலைமைச் செயலகத்தில் முதற்கட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான்.

பொதுமக்கள் தமிழில் எழுதும் விண்ணப்பங்களுக்குத் தமிழிலேய விடை தரவேண்டும் எனும் அடிப்படை உணர்ச் சியே கூடத் தலைமைச் செயலகத்துள் வந்து சேரவில்லை. அதன் விளைவுதான் மேற்கண்ட அரசாணைகள்.

இது தொடர்பாக அடிக்கடிக் கலந்தாய்வும் கூட்டங்களும் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றன.

தமிழை முழு ஆட்சிமொழியாக்கும் வகையில் 14—10—1969 இல் தலைமைச் செயலகத்தில் கலந்தாய்வுக் கூட்டம் நடை பெற்றுள்ளது. அதில் 1—4—1970 முதல் சட்டம் மற்றும் நிதித் துறையிலும் முதற்கட்டத்தைச் செயற்படுத்த ஆணை பிறப் பிக்கப்பட்டது.

2—12—1971இல் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் நான்கு சட்டத்தின் முழுச் செயற்பாடும் நடைமுறைக்கு வர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்கப் பட்டது.

இதன்பின் 1977–இல் அ. தி. மு. க. ஆட்சி அமைந்தது. எம். ஜி. ஆர். ஆட்சிக்காலத்தில் 1978–இல் அனைத்து அரசு ஊழியர்களும் தமிழில் மட்டுமே கையொப்பமிட வேண்டும் எனும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

1—4—1981இல் மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. 1982–இல் அனைத்து அரசுத் துறைகளிலும் ஆட்சிமொழி முழுமை பெறும் வகையில் திட்டமிடப்பட்டது.

### 1986–இல் வெளியான அரசாணைச் சாரம்

(அ) வெளியிடப்படும் கடிதங்கள், அலுவல் சார்பற்ற குறிப்புகள், அலுவலக ஆணைகள், அரசாணைகள் மற்றும் இதர கடிதப் போக்குவரத்துகள் ஆகியவை அரசாணை (நிலை) எண். 2070, கல்வித்துறை நாள் 2–12–71ல் அறிவிக்கப் பட்டவாறு விலக்களிக்கப்பட்ட இனங்களைத் தவிர பிற எல்லா இனங்களிலும் தமிழில்தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### (ஆ) கடிதப் போக்குவரத்து மற்றும் இதர குறிப்புகள்:

கடிதப் போக்குவரத்தைப் பொறுத்த மட்டில் ஆங்கிலத்தில் ஒரு கடித வரைவினை எழுத வேண்டுவது இன்றியமையாத தென்று கருதப்பட்டால் பொறுப்புள்ள ஒரு அலுவலரின் அனுமதியின்றி அதனை ஆங்கிலத்தில் எழுதக் கூடாது எனவும், அவ்வரைவு விதி விலக்குப் பெற்ற இனத்தைச் சேர்ந்ததா என் பதை ஆராய்ந்து அந்த அலுவலர் அனுமதித்த பின்னரே ஆங்கில வரைவுகள் எழுதப்படலாம். இதைத்தவிர சுற்றாணைக் குறிப்புகள், குறிப்புக் கோப்பின் குறிப்புகள், நினைவூட்டுக்கள், ஒப்பளிப்புக் கடிதங்கள், இடைக்கால மறுமொழிகள், அசல் திருப்புகை முடிவுகள், அலுவல் சார்பற்ற குறிப்பாணை ஆகிய வரைவுகளுக்கும் தமிழையே பயன்படுத்த வேண்டும். ஆங்கிலத்தை அறவே தவிர்த்திட வேண்டும்.

### (இ) பதிவேடுகள் பேணுகை:

பொதுவாகப் பதிவேடுகள் அனைத்தும் தமிழிலேயே பேணப்படலாம். அவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட வில்லை. மாநிலக் கணக்காய்வாளரால் கணக்கு தணிக்கைக்கு உட்பட்ட சில பதிவேடுகளை மட்டும் ஆங்கிலத்தில் பயன்படுத் தலாம். இதைத் தவிர இதுவரையில் ஆங்கிலத்தில் பயன்

படுத்தப்பட்டு வந்த பதிவேடுகளை உடனடியாகத் தமிழுக்கு ஏற்றவாறு மாற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1989-இல் மீண்டும் தி.மு.கழக ஆட்சி ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்தில், ஆட்சிமொழித் தொடர்பாகச் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அவை :

(1) 1971-ஆம் ஆண்டின் அரசாணை நினைவூட்டப்பட்டு விலக்களிக்கப்பட்ட இனங்களைத் தவிரப் பிற அனைத்து இனங்களிலும் தமிழில் தான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(2) தலைமைச் செயலகத் துறைகள் ஆங்கிலத்தில் ஆணைகள் வெளியிடும் நேரங்களில் இனித் தமிழிலும் ஆணைகள் வெளியிடவேண்டும். இவ்வாறு வெளியிடப்படுவதைத் தொடர்புடைய அரசுத் துறைச் செயலாளர்கள் முழுமையாகக் கண்காணிக்க வேண்டும்.

**கண்டறிந்த உண்மைகள்**

(1) 1—3—63 முதல் 38 அலுவலகங்கள்
23—3—63 முதல் மேலும் 5 அலுவலகங்கள்
1—6—63 முதல் மேலும் 7 அலுவலகங்கள்
1—12—63 முதல் மேலும் 6 அலுவலகங்கள்

ஆக 56 துறை அலுவலகங்களில் 1963-ஆம் ஆண்டிலேயே தமிழ் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தும் ஆணை பிறப்பிக்கப்பட்டும் அது செயற்படுத்தப்படவில்லை.

எடுத்துக்காட்டு:

பெயர்ப் பலகைகள் தமிழில் அமைய ஊர்வலம் நடத்துவதற்கான இசைவைத் தலைநகர்த் தமிழ்ச்சங்கம்கேட்டிருந்தது. அதற்கான இசைவு ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது. (13-1-90) (படி இணைக்கப்பட்டுள்ளது). அதாவது தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தின் முதல் சட்டமே செயற்படுத்தப்படவில்லை.

1963-இல் போடப்பட்ட ஆணை 1990-லும் செயற்படுத்தப் படவில்லை.

(2) ஒவ்வொரு துறையும் ஆறு மாதத்துக்கொரு முறை 'தமிழ் ஆட்சி மொழிச் செயற்பாடு' குறித்து அறிக்கை தரவேண்டும். மேற்குறித்த 56-இல் 19 துறைகள் மட்டுமே அரையாண்டு அறிக்கை தந்துள்ளன. இன்னும் பல துறைகள் அவற்றைப் பற்றிக் கவலைப் படவில்லை.

(3) சிலர் வேகமாகவும் செயல்பட்டுள்ளனர்.

1963–இல் முதற்கட்டத்தைச் செயல்படுத்தக் கோரிய ஆணையை ஏற்று அப்போதிருந்த இந்து சமய அற நிலையத்துறை ஆணையர் இரண்டாம் கட்டத்தையும் சேர்த்தே செயல்படுத்தி விட்டார்.

(4) 1987 வாக்கில் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை யிலிருந்து என் நூலுக்கு அளிக்கப்பட்ட மானியம் குறித்த ஆணை ஆங்கிலத்தில்தான் உள்ளது.

முதன்முதலில் செயற்படுத்தப்படவேண்டிய தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையே தமிழை முழு ஆட்சி மொழியாக்கவில்லை.

(5) 1957 தொடங்கி 1962, 1971, 1983–இல் பதிப்பிக்கப் பட்ட ஆட்சிச் சொல் அகராதி மற்றும் துறைச் சொல் அகராதிகள் இருந்தும் பலர் தமிழில் எழுதவில்லை.

(6) 23—1—1968இல் அண்ணா காலத்தில் நிறைவேற்றப் பட்ட சட்டமன்றத் தீர்மானம் இது.

"தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாகப் பல்வேறுதுறைகளிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரித மான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம் மன்றம் தீர்மானிக்கிறது''.

மீண்டும் நினைவூட்டல் — சுருக்கமாக

(1) 1963–1966க்குள் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் எனப் பேராயக் (காங்கிரசு) கட்சிக் காலத்தில் முயற்சி எடுக்கப்பட்டது.

(2) 1967 முதல் 1971 வரை அறிஞர் அண்ணா, கலைஞர் காலத்தில் வேகமான முயற்சிகள் எடுக்கப்பட்டு முழுமையான அரசாணைகளும் பிறப்பிக்கப்பட்டது.

(3) 1981–84 வரை ம. கோ. இரா. காலத்தில் மூவாண்டு முனைப்புத் திட்டம் போடப்பட்டது.

(4) மீண்டும் 27—6—89 இல் அரசாணைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவர வேண்டுமெனும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(5) தொடர்புடைய அமைச்சர்கள் இவைபற்றி எந்தக் கவனமும் எடுத்துக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது.

(6) பொறுப்புடைய செயலர் மற்றும் ஆணையாளராகிய இ. ஆ. ப. அலுவலர்கள் எந்த அரசாணையையும் பொருட்படுத்தவே இல்லை என்றும் சொல்லாம்.

செய்ய வேண்டுவன

1. அரசு இதில் கடுமையாக இருந்தால் 6மாதத்தில் தமிழ் முழு அளவில் ஆட்சிமொழியாக வாய்ப்புண்டு.

2. தொடக்கத்தில் நிதி, சட்டம், சட்டமன்றத் துறை ஆகிய மூன்றிலும் தமிழ் ஆட்சி மொழியாவதிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டன. பின்னர் நிதி, சட்டத் துறையிலும் முதற்கட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் எனும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

3. இன்றும் விதிவிலக்களிக்கப்பட்ட துறை சட்டமன்றத் துறைதான். ஆனால் விதிவிலக்குப் பெற்ற இத்துறையில் தமிழ் முழுமையான ஆட்சிமொழியாக உள்ளது.

கையொப்பம், வருகைப் பதிவேடு, குறிப்புகள், கோப்புகள் அனைத்தும் தமிழில் பேணப்படுகின்றன. ஆளுநர், நடுவண் அரசு, பிற மாநிலங்கள், அயல் நாடுகள் ஆகியோர்க்கு அனுப்பப்படும் மற்றும் விலக்களிக்கப்பட்ட இனங்களில் மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது.

இதற்கெனச் சுற்றோட்டக் குறிப்புகளும் அனுப்பப்பட்டன.

4. விதிவிலக்கான துறையிலேயே செயற்படுத்த முடியும் போது விதிகளுக்குட்பட்ட துறைகளில் ஏன் செயற் படுத்த முடியாது? — முடியும்.

5. "மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரும் தமிழை ஒரு ஆட்சி மொழியாக்குவதில் தக்க கவனம் செலுத்த வேண்டும்.

விதிவிலக்கு அளிக்கப்பட்ட கீழ்க்கண்ட இனங் களில் தவிரப் பிற அனைத்திலும் கோப்புகள் தமிழில் பேணப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க வேண் டும். தமிழில் வைக்கப்படும் கோப்புகளில் மட்டுமே கையொப்பம் இடவேண்டும். தமிழில் வைக்கப்படாத கோப்புகளைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

இதனை முழுமையாகவும், முறையாகவும் செயற் படுத்தத் தத்தம் துறைச் செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்களை வற்புறுத்த வேண்டும்.

வாய்ப்பு நேரும் போது, தலைமைச் செயலகத்தில் உள்ள நம் துறை சார்ந்த அலுவலகத்தையும், தமிழ் நாட்டில் சுற்றுப்பயணங்களின் போது தத்தம் அலுவலகப் பிரிவுகளையும் பார்வையிட்டுக் குறிப் பெழுதி அறிவுறுத்த வேண்டும்."

என்று அமைச்சர்கள் அனைவருக்கும் தெளிவான கட்டளை பிறப்பிக்கப்பட்டால் பயன் விளையும்.

விதிவிலக்கு

துறைகள்

(1) நிதி, சட்டம், சட்டமன்றம் ஆகிய துறைகள் முதலில். கடைசியாக, சட்டமன்றத்துறை மட்டும்.

(2) அயல்நாட்டுத் தூதுவரகங்கள், அயல்நாட்டு அரசுச் சார்பில் இயங்கும் அலுவலகங்கள்.

(3) அயல்நாட்டார்.

(4) சட்டப்படியான அதிகாரங்களை (Statutory Powers) செயற்படுத்துவதில் வரும் வழக்குத் தொடர்பான கடிதங்கள்.

(5) நடுவண் அரசு.

(6) பிற மாநிலங்கள் ஆகியவற்றுடன் கொள்ளும் தொடர்பு.

(7) உயர்மட்டத் தொழில்நுட்பச் செய்திகள்.

இவை தவிரப் பிற துறைகளில் தமிழ் ஆட்சிமொழி யாவதில் என்ன சிக்கல் உள்ளது?

**இனங்கள்**

(1) சம்பளப் பட்டியல், பயணப்படிப் பட்டியல், எதிர் பாராச் செலவினப் பட்டியல், பயிற்சி உதவித் தொகைப் பட்டியல், மற்றும் கருவூலங்கள், தணிக்கை அலுவலகங்கள், மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (A.G.) சம்பளக் கணக்கு அலுவலகம் ஆகியவற்றோடு கொள்ளும் கடிதத் தொடர்புகள்.

(2) கிராம நீதிமன்றங்கள் தவிர்த்த பிற நீதிமன்றங்களோடு கொள்ளும் தொடர்புகள்.

இவை தவிரப் பிற இனங்கள் இன்னும் தமிழுக்கு இணங்காதது ஏன்?

6. ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்குக் கீழ்க் கண்டவாறு ஓர் அறிக்கையை அளிக்கலாம்.

"தமிழக அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் கவனத் திற்கு:

தமிழ் முழு அளவில் ஆட்சி மொழியாக்கப்பட வேண் டும் என்பதற்காக 19 அரசாணைகள் பிறப்பிக்கப் பட்டிருந்தும் அவை செயற்படுத்தப்படாததால் 50% அளவில்தான் இத்திட்டம் நிறைவேறியுள்ளது. அனைத்து மக்களையும் அரசாணைகளைக் கொண்டே ஆட்சி செலுத்தும் நாம், தமிழ் ஆட்சி மொழித் தொடர்பான குறைகளை மட்டும் ஏன் சரியாகச் செயற்படுத்தவில்லை என்பது கருதிப் பார்ப்பதற்குரியது. உயர்மட்ட அலுவலர்கள் ஆர்வ மும் அக்கரையும் எடுத்துக் கொள்ளாததாலும், தம் கருத்துள்ள அலுவலர்களின் செயற்பாடுகளைக் கண் காணித்துச் சுட்டிக் காட்டாததாலுமே இக்குறை நேர்ந்துள்ளது. எனவே,

(1) இனிப் பிறப்பிக்கப்படும் அரசு ஆணைகளை ஒரே நேரத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடுங்கள்.

(2) விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிரப் பிற அனைத்துக் கோப்புகளும் அமைச்சர்கட்கு அனுப்பப் படும்போது தமிழில் உள்ளனவா என்று பார்த்து அனுப்புங்கள்.

(3) உங்களளவிலேயே தமிழைப் பயன்படுத்தாத கோப்பு களைத் திருப்பி அனுப்பி அலுவலர்களைச் சரியாகச் செயற்பட வையுங்கள்.

(4) ஆட்சிமொழி ஆணைகளின் சாரத்தை விளக்கி ஒரு சுற்றோட்டக் குறிப்பு வாயிலாகத் தங்களின் கீழ் உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் அனுப்பி வையுங்கள்.

(5) ஆறுமாத காலத்திற்குள் இவற்றில் முழு வெற்றி காண ஆவன செய்யுங்கள்.

(6) அரசுச் சார்பில் வெளியிடப்படும் விளம்பரங்களைத் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையில் காட்டிச் செம்மையாக வெளியிட ஆவன செய்யுங்கள்.

7. மாவட்ட ஆட்சித் தலைவர்கட்கு அனுப்பப்பட வேண்டிய அறிக்கை:

(1) விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிரப் பிற அனைத் துக் கோப்புகளும் தலைமைச் செயலகத்துக்கு அனுப்பப்படும் போதும், கீழே உள்ளவர்கட்கு அனுப்பும்போதும் ஆணை தமிழில் உள்ளனவா என்று பார்த்து அனுப்புங்கள்.

(2) தமிழைப் பயன்படுத்தாத கோப்புகளை உங்களளவி லேயே திருப்பி அனுப்பி அலுவலர்களைச் சரியாகச் செயற்பட வையுங்கள்.

(3) ஆட்சிமொழி ஆணைகளின் சாரத்தை விளக்கி ஒரு சுற்றோட்டக் குறிப்பு வாயிலாகத் தங்களின் கீழ் உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் அனுப்பி வையுங்கள்.

(4) ஆறுமாத காலத்திற்குள் இவற்றில் முழு வெற்றி காண ஆவன செய்யுங்கள்.

தமிழ் உணர்வோடு ஆட்சியாளர்களும், அமைச்சர்களும், அரசு அலுவலர்களும் செயற்பட்டால் பொதுமக்கள் தாமாகவே

முன்வந்து செயற்படுவர். புகைவண்டிக்கு முன்பதிவுச் சீட்டு பதிவு செய்கிறோம். அந்த விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தபோது ஆங்கிலத்தில் நிரப்பினோம். ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ள விண்ணப்பம் வந்ததும் என் கை தமிழில்தானே படிவத்தை நிரப்பும்?

எந்த ஆட்சியாளர் காலத்தில் இது நிறைவேறியது, அல்லது நிறைவேறவில்லை என்று ஆராய்வது பயனற்ற முயற்சி. மொத்தத்தில் 1956–இல் அடிக்கல் நாட்டியும் 36 ஆண்டுகளாகியும் கட்டிடம் முழுமையடையவில்லையே என்ற வருத்தம் மட்டும் ஏற்பட்டால் போதும்.

அரசு ஊழியர்களுக்குக் கோடிக்கணக்கில் அள்ளிக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் கோரிக்கையை ஏற்று ஆறு நாள் வேலையை 5 நாள் ஆக்கியுள்ளோம். விடுமுறைகட்கோ பஞ்சமில்லை. அக்டோபர் 2 — காந்தியார் பிறந்தநாள் 3 — சனிக்கிழமை 4 — ஞாயிறு 5 — ஆயுத பூசை 6 — விசய தசமி. அக்டோபர் 1க்குப்பின் அக்டோபர் 7 தானே வேலை நாள்?

உரிமைகளைக் கொடுத்து விட்டோம். கடமைகளை வற்புறுத்தி வேலை செய்ய வைப்பது நம் கடமை.

இதனை அரசு அலுவலர்களும் உணர்த்து ஒரு கோப்பினைப் பார்த்து அடுத்தடுத்து வருபவரும் தொடர்வார் என்பது தானே உண்மை?

ஏக்கம் தீருமா? நோக்கம் நிறைவேறுமா?

# பெண்வழிச் சேறல் — ஒரு பார்வை

காலங்காலமாக இந்திய சமுதாயத்தில் அதிலும் குறிப்பாகத் தமிழ் மண்ணில் பேசப்படும் பிரச்சினைகளுள் ஒன்று ஆண்களின் மேலாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும் ஆகும். பழக்கத்தின் காரணமாகவும் ஒப்புக் கொள்ளப்பட்ட சமூக மரபுகளின் காரணமாகவும் பெண்களே கணவர்க்கு அடிமைப் பட்டிருப்பதை ஒரு பேறாகக் கருதும் மனநிலை இருந்து வந்தது. ஆனால் காலப்போக்கில் சமூக சீர்திருத்த முயற்சிகள் பெருகிப் பலரும் இந்த இருநிலைகளையும் தாக்கி அழித்து 'ஆண் பெண் சமத்துவம்' எனும் அரிய நிலையை — உரிய நிலையைக் கொண்டு வந்துவிட்டனர்.

'எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காண்'

என்று பாடிய பாரதி, தன் கட்டுரைகளில் இளம் விதவையர் குறித்த புள்ளி விவரங்களைத் தந்து மனம் நொந்து போகிறார். அவர் மாணவர் பாரதிதாசனோ

'கோரிக்கை யற்றுக் கிடக்குதண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா'

என்று விதவையர் மறுமணத்துக்குக் குரல் கொடுத்தார்.

இப்படி எத்தனையோ சீர்திருத்தங்கள் ஏற்பட்டாலும் வள்ளுவர்மீது மட்டும் இன்றும் ஒரு பழி தொடர்ந்தது. வரைவின் மகளிரைப் பற்றிக் குறிப்பிட்டதை யாரும் மறுக்கவில்லை. சமுதாயத்தில் உலவும் இருமனப் பெண்டிரை இனம் கண்டு ஒதுக்குக என்பது நல்ல அறிவுரைதானே! அதே நேரத்தில் 'வாழ்க்கைத் துணை நலம்' எனும் பெயரில் 'பெண்ணின் பெருத்தக்க யாவுள' என்று வியந்து போற்றுகிறவரும் அவர்தான். இந்த நிலையில் மனைவியின் ஏவல் கேட்டு மனிதன் மாண்பயனை இழக்கக் கூடாது என்று சுட்டவந்த வள்ளுவர் 'பெண்வழிச் சேறல்' எனும் தலைப்பில் பெண்ணை — மனைவியை வரையிறந்து சாடிப் பெண்களை இழிவுபடுத்துகிறார் எனும் மனக்குறை பலர்க்கு. இது உண்மை தானா? வள்ளுவர் அந்தக் கோணத்தில் தான் பாடினாரா?

இல்லை......... சமுதாயம் ஒரு சமநிலை இழந்து ஒருபக்கம் தாழ்ந்து விடக்கூடாது எனும் நினைப்பில்தான் அப்படிப் பாடினாரா என்பதைச் சிந்திக்க வேண்டும். தமிழகத்தின் தலைசிறந்த இலக்கியவாதிகளுள் முன்நிற்கும் கலைஞர் அண்மையில் 'தமிழன்' இதழில் 'வள்ளுவர் வாக்கு' எனும் தலைப்பில் குறளுக்கு எழுதிவரும் உரைகளில் 'பெண்வழிச் சேறல்' எனும் அதிகாரம் முழுமைக்கும் கூறிய கருத்துகள் ஒரு மறு சிந்தனைக்கு வழி வகுத்தன. எனவே, அவரது உரையைப் பரிமேலழகர், பாவாணர், மு. வ., புலவர் குழந்தை ஆகியோரது உரைக் கருத்துகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பொருட்பாலில் நட்பியலில் பகைத்திறந்தெரிதலுக் குப்பின் கூட இருந்தே குழிபறிக்கும் உட்பகையை அடையாளம் காட்டு கிறார். வேந்தர் மற்றும் முனிவர்களாகிய பெரியோரைப் பிழை யாமை தேவை என வற்புறுத்திக் காமத்தால் வரும் ஒரு மறை முகப் பகையைப் 'பெண்வழிச் சேறலி'ல் சுட்டுகிறார். ஆக்கம் சிதைத்தல், அழிவுதலைத் தருதல் என்பவை பெண்வழிச் சேறலால் வரும் பகைகள். 'தன்வழி ஒழுகற்பாலளாய இல்லாள் வழியே தான் ஒழுகுதல்' என்கிறார் பரிமேலழகர். அதாவது இல்லாள் கணவன்வழி ஒழுகுவதுதான் ஒப்புக் கொள்ளப்பட்ட மரபு. மாறி ஒழுகினால் குற்றம் என்பது பரிமேலழகர் கருத்து. இதுவே மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார் கருத்து மாகும். மனைவிக்கு அடங்கினால் தன்னுரிமையிழப்பு வரும் என்கிறார் குழந்தை. பெண்டிருள் நல்லமைச்சர் போல்வார் பலரும் உண்டு; தீயமைச்சர் போல்வாரும் உண்டு என்று கூறி, 'ஏற்பழிக்கோடல்' எனும் உத்தியால் பெண்டிரின் தீயமைச்சர் இயல்பு கூறுவதாகப் பாவாணர் உரைப்பார்.

இந்நிலையில் மனைவியின் ஏவல் கேட்பதால் ஏற்படும் இழிவு வள்ளுவரால் எப்படிப் புலப்படுத்தப்படுகிறது என்பதை அவர் பாடல் மற்றும் உரைகள் வாயிலாகப் பார்த்தால் வள்ளுவர் உள்ளம் தெரியும். முதல் இரண்டு பாடல்கள் மனை விழைதற் குற்றம் — அடுத்த நான்கு பாடல்கள் அவளை அஞ்சுதற் குற்றம் — அடுத்த மூன்றும் அவள் ஏவல் செய்தற் குற்றம் என்று பாகுபடுத்துகிறார் பரிமேலழகர்.

மனைவி, இல்லாள் என நேரடியாக ஐந்து பாடல்களிலும், பெண் என்று பொதுவாக ஐந்து பாடல்களிலும் கூறுகிறார். ஆனால் எல்லா உரையாசிரியர்களுமே 'பெண்' என்ற பொதுப்

பெயரையும் மனைவியாகவே எடுத்துக் கொண்டு உரை செய்கின்றனர்.

1. 'மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது'

இன்பம் காரணமாகத் தன் மனையாளை விழைந்து அவள் தன்மையராய் ஒழுகுபவர் — மனைவியை விரும்பி அவள் சொன்னபடி நடப்பவர் — அவள் ஏவல் கேட்டு நடப்பவர் — மனைவிக்கு அடிமையாகும் பெண்ணின்பப் பித்தர்கள் என்றெல்லாம் உரைகள் விரிகின்றன.

'கடமையுடன் கூடிய செயல் புரியக் கிளம்பியவர்கள் இல்லற சுகத்தைப் பெரிதெனக் கருதினால் சிறப்பான புகழைப் பெறமாட்டார்கள்' என்கிறார் கலைஞர். அடிமையாயிருத்தல், அடங்கி நடத்தல் ஆணுக்குக் கெட்ட பெயர் — அடிமைப்படுத்தலோ பெண்ணுக்குப் பெருமை தாராது. எனினும் தான் சொன்னபடி ஆடவைக்கும் வாய்ப்பு பெண்ணுக்குக் கிடைத்து விடுகிறது. காரணம் ஆடவரின் பெண்ணின்பப் பித்தமா? அவள் தன்மையராய் ஒழுகும் அடிமைத் தனமா? அவள் ஏவல் கேட்டு நடக்கும் இயல்பா? இவ்வாறு ஆணை ஒரேயடியாக ஆக்கி விடாமல் 'இல்லற சுகத்தின் மிகையான ஈடுபாடு' என்று சுட்டி இது ஆணின் குற்றமோ, ஆணுக்கு இழுக்கோ அல்ல — ஒரு வரையிறந்த ஈடுபாடு மட்டும்தான் என்று மென்மைப்படுத்திக் காட்டுகிறார் கலைஞர். நடுநிலையோடு இருவரையும் சம நிலைப் படுத்தும் கருத்து இது.

2. 'பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்'

தன் ஆண்மையை விட்டு மனையாளது பெண்மையை விழைவான் — ஈதல், துய்த்தல் முதலியன அவள் கட்டுப்பாட்டில் வருவதால் தன் ஆண்மை இன்மை அறிந்து நாணும் — என்று பிற உரையாசிரியர்கள் உரைப்பர். கலைஞரோ, 'ஏற்றுக் கொண்ட கொள்கையைப் பேணிக் காத்திடாமல் பெண்ணை நாடி அவள் பின்னால் திரிபவனுடைய நிலை வெட்கித் தலை குனிய வேண்டியதாகி விடும்' என்கிறார்.

கடமை மறந்து காரிகை பின் செல்லும் ஆடவர் குற்றம்தான் இதில் புலப்படுகின்றதே அன்றி மனைவியின் மமதை தோன்ற

வில்லை. பெண் பின்னால் திரியும் பொது நிலை உள்ளதே அன்றி மனைவிக்கு அடிமையாதல் எனும் சிறப்பு நிலை இல்லை.

மனைவி இழிவாக நடந்தாலும் ஆடவனின் ஏறுபோல் பீடு நடை போய்விடும். அதேபோல் இவன் அவள் பின்னால் திரிந்தாலும் தலைக்குனிவு ஏற்படும் — பீடுநடை போய்விடும் என்பதை உரை உணர்த்துகின்றது.

3. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்'

அவள்தான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளை அஞ்சுதல் இயல்பின்மையாயிற்று என்று பரிமேலழகர் கூறும் கருத்தில் ஆண் ஆதிக்கத்துக்கு ஆதரவு உள்ளது. ஆண்மை தான் இயல்பு; அஃதின்மை இயல்பின்மை என்கிறார் பாவாணர்.

'நற்குணமில்லாத மனைவியைத் திருத்த முனைவதற்கு மாறாகப் பணிந்து போகிற கணவன் நல்லோர் முன்னிலையில் நாணமுற்று நிற்கும் நிலைக்கு ஆளாக நேரிடும்' என்று கலைஞர் கூறும் கருத்தும் ஆண் ஆதிக்கத்தை வற்புறுத்தாவிட்டாலும் பணிந்து போதல் ஆண்மை இயல்பன்று என்று ஒப்புக் கொள்கிறது. ஆனால் ஒருபடி மேலேபோய், கணவனுக்குரிய ஒரு கடமையையும் சுட்டுகிறார். நற்குணமில்லாத மனைவியைத் திருத்த முனைய வேண்டியதும் கணவன் கடமைதானே! அதைச் செய்வதற்கு மாறாக இவன் எதிர் நிலையில் இயங்குகிறானே என்பதுதான் கலைஞரின் புதிய கருத்து.

'திருத்தலாமாகில் ஒன்றால் திருத்தலாம்' என்று விடாப்பிடி மிக்க இராவணனைக் குறித்தே கும்பகர்ணன் கருத முடியும் என்றால் மனைவியைத் திருத்திடக் கணவன் ஏன் முயலக் கூடாது? 'நற்குணமில்லாத மனைவியைத் திருத்த முனையாமல் பணிந்து போகிற கணவன்' எனும் புத்துரை நம்மை மகிழ்விக்கின்றது.

4. 'மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று'

மறுமை — இறந்தபின் எய்தும் புகழ்.

இக்குறளுக்கு எல்லா உரையாசிரியர்களும் ஒரே வகையில் தான் உரை செய்துள்ளனர். 'மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற

மறுமைப் பயன் இல்லாத ஒருவன் செயல் ஆற்றுந்தன்மை பெருமை பெற்று விளங்குவதில்லை' என்பதுதான் அவ்வுரை.

ஆனால் கலைஞரோ 'மணம் புரிந்து புதுவாழ்வின் பயனை அடையாமல் குடும்பம் நடத்த அஞ்சுகின்றவன்' என்று உரை செய்கிறார். மனையாளை அஞ்சும் என்று கொள்ளாமல் மண வாழ்வுக்கே அஞ்சும் ஆடவன் என்று பொருள் கூறுகிறார். மறு என்றால் புது என்ற பொருளும் உண்டல்லவா! பொருள் புதுமையாக உள்ளதே என்று பார்ப்பது ஒருபுறம். உரை ஆடவனையும் காப்பாற்றுகிறது; மனையாளையும் பழியிலிருந்து மீட்கிறது என்று கொள்வதே பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த அளவுக்குக் கலைஞர் உரை வள்ளுவரின் பொது நோக்கைப் புலப்படுத்துவதை உணரலாம்.

5. 'இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்'

மனைவிக்கு அஞ்சினால் விருந்தின் முகம் கொல்ல நேரிடும்; நல்லவர் எவர்க்கும் எந்த உதவியும் செய்ய முடியாது. பிற்கால ஔவையாரின் தனிப்பாட்டும் இதை உணர்த்துகின்றது.

மனைவியிடம் நலமாகப் பேசி, அவளுக்கு வேண்டிய துணையெல்லாம் செய்துவிட்டு 'விருந்து வந்திருக்கிறது' என்று பக்குவமாகச் சொல்லியும் கணவன் எப்படியெல்லாம் விரட்டப் பட்டான் என்பதற்கு அந்தப் பாடல் நல்ல எடுத்துக்காட்டு.

'இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப — வருந்திமிகு
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தாற்
சாடினாள் ஓடோடத் தான்'

இப்படியொரு நிலை எந்த ஆடவனுக்கும் வரக்கூடாது. அவ்வளவு கொடுமை இது !

'மனைவியின் உள்ளத்தைப் புண்படுத்தக் கூடாதென்று அஞ்சி நடப்பவன்' என்று கலைஞர் பொருள் கொள்கிறார். இதில் கலைஞர் கருத்தும் முன்னோர் உரையொட்டியே அமைகிறது எனலாம்.

6. 'இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள்
அமையார்தோ ளஞ்சு பவர்'

பகைத்த வீரர் தோள்களை எல்லாம் வென்றவன் போயும் போயும் மனைவி தோளுக்கு அஞ்சி மடங்கி விட்டானே என்று பரிமேலழகர் பதைக்கிறார். இது ஆண்மையிலார் செயல் என்கிறார். ஒரு பெண்ணின் அதுவும் தம்மால் விரும்பப்பட்ட பெண்ணின் தோளில் சாய்ந்து கிடக்கும் இன்பம் நம்மால் கற்பனை செய்யப்பட்ட சொர்க்கத்தைவிட இனியதுதான். இது தான் வள்ளுவர் கருத்து. மனைவியின் தோளில் சாய்ந்து இன்பம் காண்பது ஏற்புடையது. ஆனால் மனைவியின் தோளுக்கு அஞ்சி நடப்பதை எப்படி ஒப்ப முடியும்?

'அறிவும் பண்பும் இல்லாத மனைவி— அழகாக இருக்கிறாள் என்பதற்காக மட்டும் அவளுக்கு அடங்கி நடப்பவர்கள் தேவரினும் சிறந்தவராகக் கற்பனை செய்து கொண்டாலும் அவர்களுக்கு உண்மையில் எந்தப் பெருமயையும் கிடையாது' என்கிறார் கலைஞர்.

அறிவுக்கோ பண்புக்கோ அடங்கி நடந்தாலும் சிறுமை நேராது. அறிவுள்ள பெண் அதனை மதிக்கும் கணவனைச் சிறுமைப்படுத்தமாட்டாள்; பண்புள்ள பெண் தன் மணாளனை ஒருபோதும் பண்புக் குறைவாக நடத்த மாட்டாள். இவையின்றி வெறும் அழகுமட்டும் இருந்தால் அகம்பாவம் பிறக்கும்; கணவனையே அலட்சியமாய் நோக்குவாள். கலைஞரின் உரை இந்த அற்புதச் சிந்தனைகளைத் தருகிறது.

7. 'பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து'

நாணமின்றித் தன் இல்லாளது ஏவல் தொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண் தன்மையை விட நாணத்தையுடைய அவளது பெண் தன்மையே பெருமையுடையது என்பதுதான் அனைவரும் கூறும் பொதுவான உரை.

கலைஞர் இதனைப் பொதுமைப்படுத்துகிறார். "ஒரு பெண்ணின் காலைச் சுற்றிக்கொண்டு கிடக்கும் ஒருவனுடைய ஆண்மையைக் காட்டிலும் மான உணர்வுள்ள ஒருத்தியின் பெண்மையே பெருமைக்குரியதாகும்" என்கிறார்.

நாணத்தையுடைய பெண் என்றால் அதுவே பெண்ணின் பொதுக் குணம்; அதைவிட மான உணர்வுள்ள பெண்

என்றால் அவள் எவ்வளவு உயர்ந்து நிற்கிறாள்; 'நாணம் சிறந்த பெண் தன் கணவனை ஏவல் கொள்ள விரும்பாள்' என்கிறார் பாவாணர். அப்படியானால் மான உணர்வுள்ள பெண் தன் கணவன் மானம் கெட்டுவிடக்கூடாது என்றுதானே கருதுவாள்! எனவே, கணவனை அடிமைப்படுத்தமாட்டாள். இவ்வளவிருந்தும் பெண்ணின் காலைச் சுற்றிக் கொண்டு திரிபவனை என் செய்வது? இவ்விடத்தில் ஆண் பெருமையை விட பெண் பெருமைதானே சிறந்தது! இப்படி அருமையாகச் சிந்திக்க வைக்கிறார் கலைஞர்.

8. 'நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்'

தன் மனையாள் வேண்டியவாறு ஒழுகுபவர் தம் நண்பர்க்கு உதவவோ, அறம் செய்யவோ மாட்டார் என்பதே பொதுவான பொருள். நன்னுதலாள் — நல்ல நெற்றியுடைய பெண் என்ற அளவோடு நில்லாமல் பாவாணர் நெற்றியழகுக்கு ஒரு விளக்கம் தருகிறார். விருந்தினரை விரும்பிப் பேணினால் நெற்றியும் அழகுபெறும். எரிச்சலுற்றால் நெற்றி சுருங்கும். அவ்வேளை, கணவனை உள் அழைத்து நெற்றியை நெறிப்பதும் (browbeating) உண்டல்லவா? என்கிறார்.

'ஒரு பெண்ணின் அழகுக்காகவே அவளிடம் மயங்கி அறிவிழந்து நடப்பவர்கள் நண்பர்களைப் பற்றியும் கவலைப் படமாட்டார்கள்; நற்பணிகளையும் ஆற்றிடமாட்டார்கள்' என்கிறார் கலைஞர். முன்னரும் கூறியபடி, மனைவியின் ஏவல் கேட்டல் எனும் இருபுற இழுக்கைத் தவிர்த்து, பெண்ணின் அழகில் மயங்கிக் கடமை மறத்தல் என்றமையும்படிப் பொருள் கொள்வது உள்ளபடியே சிறப்பாகவே இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

9. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல்'

அறச்செயல், அதற்குக் காரணமான பொருள் முயற்சி ஆகியவை மனைவியின் ஏவலைச் செய்வோரிடத்தில் இல்லை என்பது பொது உரை.

நடுவணது எய்த இருதலையும் எய்தும் என்பர்.

அறம் பொருள் இன்பம் மூன்றனுள் பொருள் கிட்டினால் இன்பமும் கிடைக்கும்; அறமும் செய்யலாம். பெண் ஏவல்

செய்பவர் தாமே விரும்பி அறமும் செய்யமுடியாது. அவள் விரும்பினாலொழிய இன்பமும் இல்லை.

இதில் மனைவியை வம்புக்கு இழுக்காமல், அவள்மீது பழியைச் சுமத்தாமல் 'ஆணவங் கொண்ட பெண்கள் இடுகின்ற ஆணைகட்கு அடங்கி இயங்குகின்ற பெண் பித்தர்கள்' என்று குறிப்பிடுகிறார் கலைஞர். ஆணவம் எனும் எல்லை மீறிய குணம் கொண்டவர்களிடம் பெண்பித்தம் எனும் தாழ்நிலை எய்தியவர்கள் படும்பாடு இதுதான் என்று குறிப்பிடுவது நயமாக உள்ளது.

10. 'எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.'

கரும சூழ்ச்சிக்கண் சென்ற நெஞ்சத்தினையும் அதனினாய செல்வத்தையும் உடைய வேந்தர்க்கு மனையாளைச் சேர் தலான் விளையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது என்கிறார் பரிமேழகர்.

'நன்றாக எண்ணும் நெஞ்சமும் தக்க நிலையும் உடையார் மனைவியின் ஏவலுக்கு இணங்கார்' என்றனர் பலரும்.

இதையே பொதுமைப்படுத்தி, 'சிந்திக்கும் ஆற்றலும் நெஞ்சுறுதியும் கொண்டவர்கள் காமாந்தகாரர்களாகப் பெண் களையே சுற்றிக் கொண்டு திரியமாட்டார்கள்' என்கிறார் கலைஞர்.

இதில் மனைவியின் ஏவல் கேட்கும் மயக்க நிலை இல்லை. ஆனால் காமாந்தகாரனாக இல்லாத தெளிவுடையாரின் மயக்க மற்ற தெளிநிலை உள்ளது.

பல குடும்பங்களில் மனைவியர் மிகவும் ஆணவம் பிடித்து, கணவன்மாரை ஆட்டிப் படைக்கிறார்கள் என்பது ஒரு புறம். கணவன்மார் பலர் காரணமின்றியே அச்சம் கொண்டு மனைவி காலால் இட்ட வேலைகளையெல்லாம் தலைமேல் ஏற்றுச் செயல்படுகிறார்கள் என்பது மறுபுறம்.

இரண்டுமே இழுக்குத்தான்; எந்தக் குடும்பத்தில் இந்த நிலை இருந்தாலும் சமூக அழுக்குத்தான்; இந்த அழுக்கைப் போக்க வேண்டும். ஆணோ, பெண்ணோ யாரும் இழிவு படுத்தப்படக்கூடாது. ஆனால் எல்லை மீறிய காமாந்த

காரனாக இருக்கும் ஆண் கண்டிக்கப்பட வேண்டும்; அறிவோ பண்போ இன்றி வெறும் அழகால் மட்டுமே ஆடவரை ஆட்டிப் படைக்கும் பெண்களும் திருத்தப்பட வேண்டும்.

இந்த நோக்கோடு செய்யப்பட்டதுதான் கலைஞர் உரை. இது ஏற்கனவே வள்ளுவர் மீதுள்ள பழியைத் துடைக்கிறது. வள்ளுவரின் பரந்த மனம் காண வழியேற்படுத்துகிறது. வள்ளுவர் கோட்டத்தைக் கண்ணுக்கும், குறளோவியத்தை அறிவுக்கும் விருந்தாக்கிய கலைஞர் ஆண் பெண் சமத்துவ வாழ்வு நோக்கி நம்மை அழைத்துச் செல்லும் படிக்கட்டே இந்த உரை.

# பாவேந்தரின் மொழியுணர்ச்சி

ரசுல் சம்சுதாவ் எனும் உருசிய நாட்டுக் கவிஞனின் தாய் மொழி அவார். அம்மொழியின் மீது அளவு கடந்த காதல் கொண்டவன் அவன். அவன்

'என்னுடைய அவார் மொழி நாளைக்கு அழிந்துவிடும் என்ற நிலை ஏற்படுமானால் நான் இன்றைக்கே அழிந்துவிடுவேன்' என்று. குறிப்பிட்டான்:

அயர்லாந்து நாட்டு விடுதலை வீரனான டிவேலராவுக்கும் இக்கட்டானதொரு சூழல் நேர்ந்தது. மொழியைப் பேசினால் சிறையிலடைப்போம் என்று ஆட்சியாளர் மிரட்டினர். அந்த நிலையிலும்

'If I am asked to choose between the language without freedom and freedom without language, I shall certainly choose the former'

என்றான்.

மொழி பேச முடியாத வெட்டி விடுதலையைவிட என் மொழியைப் பேச வாய்ப்பளிக்கும் சிறைவாழ்வே மேல் என்றான்.

மொழியுணர்ச்சியில், இவர்களையெல்லாம் விஞ்சியவர் பாரதிதாசன் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழின் தொன்மை உலகத்தாரால் இன்று ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. அதைப் பாரதிதாசன் குறிப்பிடும்போது

"திங்களொடும் செழும்பரிதி
தன்னோடும், விண்ணோடும், உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம்!"

என்கிறார். இயற்கைப் பொருள்கள் இயங்கத் தொடங்கிய போதே தமிழ் மக்கள் மொழியாகிவிட்டது எனும் பெருமிதம் இங்கே தொனிக்கிறது.

தமிழின் தன்மையை, ஆற்றலைப் பாவேந்தரை விட வேறு யார் அழகாகச் சொல்லிவிடமுடியும்?

தண்ணொளி தரும் நிலவாக, சமூகத்தின் விளைவுக்கு நீராக, கமழும் மணமாக, வாழ்வுக்கு நாம் நிறுவிய ஊராக, மயக்கும் மதுவாக, உரிமைச் செம்பயிருக்கு வேராகத் தமிழ் திகழ்கின்றது.

இளமைக்குப் பாலாக, புகழ்மிக்க புலவர்க்கு வேலாக, நம் உயர்வுக்கு வானாக, நம் அயர்வினைப் போக்கும் புத்துணர்ச்சி தரும் தேனாக, அறிவுக்குத் தோளாக, விளங்குவது தமிழ் என்று பாவேந்தர் எப்படியெல்லாம் தமிழின் ஆற்றலைப் புகழ்கின்றார்?

போனால் வாராதது உயிர். எனினும் உயிரினும் மேலான தொன்றுமில்லை எனும் உலகியல் உண்மையை மனத்திற் கொண்டுதான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றார் வள்ளுவர். பாவேந்தர் இந்தக் கோட்பாட்டில் மிகவும் அழுந்தி நிற்கிறார்.

'நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான்'

என்று மார்தட்டுகிறார்.

'தமிழ் எங்கள் உயிர் என்பதாலே — வெல்லும்
தரமுண்டு தமிழுக்கு இப்புவி மேலே'

என்கிறார்.

கனியின் சுளையும், கழையின் சாறும், பனிமலர்த் தேனும், காய்ச்சுப் பாகின் சுவையும், ஆவின் பாலும், தெங்கின் இளநீரும் இனியன என்பேன். எனினும் தமிழே என்னுயிர் என்பேன் என்றார்.

சோறு, கறி, மிளகின் சாறு, கிழங்கு வகை, திண்பண்டங்கள் எல்லாம் தமிழா! உன்னை வளர்ப்பன எனினும்

உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே என்கின்றார்.

தமிழை உயிராகப் போற்றும் பாவேந்தரின் மொழியுணர்ச்சியை யார் குறைத்து மதிப்பிட முடியும்?

தமிழை உயிராகக் கருதியதால்தான் தமிழுக்காக உயிரையும் தரக்கூடிய உணர்ச்சியைப் புலப்படுத்துகிறார்.

'செந்தமிழே உயிரே நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித் தேனே'

என்று கூறிவிட்டு,

'செந்தமிழ்க்கே தீமை வந்த பின்னும் — இந்தத்
தேசம் இருந்தொரு லாப முண்டோ!'

என்று கொதிக்கும் போது தமிழின் வாழ்வுக்காக எதையும் இழக்க முன்வரும் அவரது மொழிப்பற்றை, மொழியுணர்ச்சி யைத்தான் காண முடிகிறது.

'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்'

என்று கூறுகிறார். தமிழுக்குப் பகையாவாரை வீழ்த்துவதில் எதிர்த்துப் போரிடுவதில் பாவேந்தர் காட்டும் வேகம் எல்லை யற்றது;

தமிழின் இனிமையைப் பாவேந்தர் அருமையாகப் புலப் படுத்துகிறார். தென்றல் புற இன்பம் அளித்தால், தமிழ் அக இன்பம் அளிப்பது என்கிறார்.

'இனிமைத் தமிழ் மொழி எமது — எமக்
கின்பம் தரும்படி வாய்த்தநல் லமுது'

என்று கூறி மகிழ்கிறார்.

சாதி மதங்கடந்து கலப்புமணம், காதல்மணம், விதவை மறுமணம் எல்லாம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினாலும் மனைவி தமிழ் அறிந்தவளாக இருக்கவேண்டுமாம்;

'அழகும் இன்பமும் தழையக் கிடப்பினும்
பழகு தமிழறியாப் பாவை தமிழருக்கு
உயிரில்லா உடலன்றோ?'

எத்தனையோபேர் தமிழ் தரும் இன்பத்தைக் கூட வெகு வாகப் பாராட்டித்தான் உள்ளனர்.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன் — இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'

என்பாரும் உண்டு.

ஆனால் உலகோர் அனைவரும் ஒப்புக்கொள்ளும் பெண் ணின்பத்தைக் கூடப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் தமிழின்பத் துக்காகத் தவிப்பார் பாவேந்தர்.

'மங்கை ஒருத்திதரும் சுகமும் — எம்
மாந்தமிழ்க் கீடில்லை கண்டீர்'

எனும் வரிகளின் அழுத்தத்தை எந்தக் கவிஞனும் விஞ்ச முடியாது.

அத்தகைய தமிழுக்குத் தொண்டு செய்வதுதான் முழு வாழ்வு எனக் கருதுபவர் பாவேந்தர்.

'தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே!
'தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு — இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம் நல்ல தொண்டு'

என்று கூறுவதோடு

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை'

என்றும் அடித்துக் கூறுகிறார். சாகாத பாரதியை மேற்கோள் காட்டுகிறார்.

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'

என்பதில் அசைக்க முடியாத அழுத்தம் படைத்தவர் பாவேந்தர்.

கோயிலில் தமிழில் வழிபாடு, நீதிமன்றத்தில் தமிழில் முறையீடு, உயர்கல்வியில் தமிழில் உரைப்பாடு, அலுவலகத்தில் ஆட்சிமொழியாகத் தமிழில் உரைப்பாடு, அலுவலகத்தில் ஆட்சிமொழியாகத் தமிழின் செயற்பாடு ஆகியவற்றை வற்புறுத்தும் வகையில் தான் அவரது 'தமிழியக்கம்' தோன்றுகின்றது.

தமிழுணர்ச்சியென்பது தனிமனித உணர்வாக, முக்கல் முனகலாக அவருக்குள்ளேயே எழுந்து அழிந்து விடாமல் இவ்வுணர்ச்சி இயக்கமாக உருப்பெறவேண்டும் என்று கருதியவர் பாவேந்தர்.

பலரும் இந்த உணர்ச்சியின்றிச் செயலாற்றுகின்றனரே என்று அவர் அடைகின்ற வருத்தம் பெரியது.

'கரும்புதந்த தீஞ்சாறே,
கனிதந்த நறுஞ்சுளையே
கவின்செய் முல்லை
அரும்புதந்த வெண்ணகையே
அணிதந்த செந்தமிழே
அன்பே, கட்டி
இரும்புதந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலை
ஈடழித்து
வரும்புதுமை நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்சொல்ல
வாய்ப தைக்கும்.'

தமிழ் வாழ்வுதான் தன் வாழ்வு; தமிழுக்கு ஏதாவது நேர்ந்தால் தனக்கும் வாழ்வில்லை என்று தெளிவு படுத்துகிறார்.

"நைந்தா யெனில் நைந்து போகும் என்வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!"

என்று நெஞ்சுருகக் கூறுகிறார்.

எழுத்தில், பேச்சில் அலுவலக மடல் பரிமாற்றத்தில், பெயரில், விளம்பரத்தில் தமிழ் கோலோச்ச வேண்டும் எனும் தணியாத வேட்கை அவர்க்குண்டு.

"வாணிகர், தம் முகவரியை
வரைகின்ற பலகையில், ஆங்
கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த 'செந்தமிழால்
வரைக' என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்!"

என்று சொல்லிவிட்டு அதற்கான எடுத்துக்காட்டுகள் சில வற்றையும் தருகிறார்.

"அறிவிப்புப் பலகையெல்லாம்
அருந்தமிழ் ஆக்குவதே
அன்றி, அச்சொல்
குறைவற்ற தொடராகக்
குற்றமற்ற சொல்லாக
அமையு மாயின்
மறுவற்றுத் திகழாளோ
செந்தமிழ்த்தாய்? தமிழ்மக்கள்
மகிழ்ந்தி டாரோ?
குறியுற்ற மறவர்களே?
இப்பணியை முடிப்பதற்கோர்
கூட்டம் வேண்டும்."

என்று அழைக்கின்றார்.

நல்லதமிழில் எழுத முன் வாராத சுவடிக்குக் கடும் எச்சரிக்கை விடுகின்றார்.

'தமிழ் தழுவாச் சுவடியினைத்
தணல்தழுவா திராதினிமேல்
தமிழ்நா டெங்கும்'

என்று கொஞ்சம் கடுமையாகவே கூறுகிறார்.

"தமிழ்க்கல்வி தமிழ்நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம்!

செய்ய வேண்டும் என்கிறார்.

"அரசினரின் மொழியாக,
அரசியலார் மொழியாக,
அரசியல் சார்
வரிசையுறு சட்டமன்றின்
மொழியாக, வையம்அறி
மொழிய தாகத்,
திருமலிந்ததமிழ் மொழிதான்
ஆகும்வகை நம்புலவர்
சேர்ந்து தொண்டு
புரிக என வேண்டுகின்றோம்
பொழிக என வேண்டுகின்றோம்
பொன்ம ழைதான்!"

"காற்செருப்பைப் பிறனொருவன்
கழிவிடத்தில் தள்ளிடினும்
பொறாத உள்ளம்
மேற்படுத்தும் எவற்றினுக்கும்
மேற்பட்ட தன்மொழியைத்
தமிழைத் தீயோர்
போற்றுவதற் குரியதொரு
பொதுவினின்று நீக்கிவைத்தால்
பொறுப்ப துண்டோ?"

என்று வேகம் காட்டித் தமிழுக்கு உரிய இடத்தைக் கொடுத்தே ஆகவேண்டும் என்று வாதிடுகின்றார்.

எழுத்தாளர்கள் செய்யும் தவறை இவரைப் போல் யாரும் படம் பிடித்ததில்லை.

"ஆங்கிலத்தில் புலவரெனில்
அரசினரின் அலுவலிலே
அமர்ந்தி ருப்பார்!
பாங்குறு செந் தமிழ்ப்புலமை
படைத்தாரேல் பள்ளியிலே
அமர்ந்தி ருப்பார்!
தீங்குற்ற இசைப்புலமை
சிறிதிருந்தால் படத்தொழிலில்
சேர்ந்தி ருப்பார்!
ஈங்கிவற்றில் ஏதுமிலார்
தமிழினிலே ஏடெழுதிப்
பிழைக்க வந்தார்."

இவ்வளவு சொல்லியும் தமிழுக்கு ஆக்கம் விளையவில்லையெனில் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்பதுதான் பாவேந்தரின் அணுகுமுறை. அதனால்தான் அவர் புரட்சிக் கவிஞரானார்.

''கடல்போலும் எழுக! கடல்
முழக்கம்போல் கழறிடுக!
தமிழ் வாழ் கென்று!
கெடல்எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!
விழிப்போரே நிலைகாண்பார்!
விதைப்போரே அறுத்திடுவார்
களை காண்டோறும்
அழிப்போரே அறஞ்செய்வார்
அறிந்தோரே உயர்ந்திடுவார்!
ஆதல் ஆர்வம்
செழிப்போரே இளைஞர்களே,
தென்னாட்டுச் சிங்கங்காள்!
எழுகநம் தாய்!
மொழிப்போரே வேண்டுவது
தொடக்கஞ்செய் வீர்வெல்வீர்!
மொழிப்போர் வெல்க!''

தமிழின் இனிமையை உணர்ந்து, அதன் வாழ்வோடு தன் வாழ்வையும் இணைத்துக்கொண்டு, தமிழுக்குத் தொண்டு செய்து, தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் தமிழ் மேலோங்கி நிற்கவேண்டும் என்ற செயற்திட்டம் வகுத்து அதைச் செயற்படுத்தக் கிளர்ச்சி செய்யவும் தயங்காத பாவேந்தர்,

அதனால் சிறைபுக நேர்ந்தாலும்

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'

என்று நெஞ்சு நிமிர்த்தி நடைபோடுகின்றார் பாவேந்தர்.

இந்தப் பாவேந்தர்க்கு நூற்றாண்டுவிழா. இவரது சமூக சீர்திருத்தப் படைப்புகள், காதல் பாடல்கள், வருணனைக் கவிதைகள் அனைத்துக்கும் ஊடகமாக, உள்ளொளியாக நிற்பது பாவேந்தரின் மொழியுணர்ச்சிதான். அந்த உணர்ச்சியை நாம் அனைவரும் பெற்றுத் தமிழுக்கு ஏற்றம் விளைவிப்போமாக.

# தமிழ்க்குடிமகனின் ஆதங்கம் !

அமரர் கல்கி அவர்களால் நிறுவப்பட்டு இன்று பொள்ளாச்சி நா. மகாலிங்கம் தலைமையில் கம்பீர நடை போடும் பாரதியார் சங்கம் வழக்கம் போலவே இந்த ஆண்டும் செப்டம்பர் 11, 12 தேதிகளில் பாரதி விழா கொண்டாடியது. விழாவில் பங்கேற்ற அனைவருமே, 'எல்லாத் துறைகளிலும் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும்' என்ற ஆசையைத் தங்கள் சொற்பொழிவினிடையே வெளிப்படுத்தினர். விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்த தமிழ்க்குடிமகன், 'பாரதியார் சங்கம், ஒரு தூதுக்குழு அமைத்து இந்த விஷயத்தை முதல்வரிடம் வந்து சொல்லலாம்; அவர் கவனித்து ஆவன செய்வார்' என்ற யோசனையைத் தெரிவித்தார். கூடவே ஓர் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்; "எத்தனையோ மொழிகள் எவ்வளவோ முன்னேறியிருக்க, மிகத் தொன்மையான தமிழ் மொழி போதிய வளர்ச்சி அடையவில்லையே?"

தமிழ்க்குடிமகன் எழுப்பியது அர்த்தமுள்ள கேள்விதான். அதற்கு விடை என்ன என்பதையும் பார்க்க வேண்டும். 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்று நாளைக்கே தமக்குள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு முதல்வர் சட்டம் இயற்றி விட முடியும். ஆனால் அதை அமுல்படுத்துவது எப்படி? போதிய அளவு தமிழ் வளர்ச்சி அடைந்தால்தானே அது சாத்தியமாகும்?

இதுமட்டுமா? நவீன விஞ்ஞான யுகத்துக்கு ஏற்பத் தமிழ் வளம்பெற வேண்டும். இருபத்தோராம் நூற்றாண்டை, அதன் பிரமிக்கத்தக்க விஞ்ஞான அற்புதங்களை எதிர்கொண்டு வர வேற்கத் தமிழ் தயார் நிலையில் இருக்க வேண்டும்; ராக்கெட் வேக வளர்ச்சி தேவை. இதை எப்படிச் சாதிப்பது?

ராஜாஜி இந்தப் பிரச்சனை குறித்து நிறையவே யோசித் திருக்கிறார். ஆரம்ப காலத்தில் கலைச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதில் அவரே ஆர்வம் காட்டியிருக்கிறார். பின்னர் டி. கே. சி. யின் கருத்தை ஏற்றுத் தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டார். வளர்ச்சியற்ற மொழிக்குத்தான் அக ராதிகளே தவிர, கலைச் சொல் ஆக்கம் என்ற பெயரில் கோடிக் கணக்கில் செலவிட்டு, அகராதி தயாரிப்பதால் மொழி வளராது என உணர்ந்தார்; 'கலைச் சொற்களையெல்லாம் தமிழில் மொழி பெயர்த்துக் கொண்டிருப்பது வீண் வேலை; இலேசான ஒலி மாற்றம் செய்து தமிழில் எழுதிவிட்டால் போதும்; அவை

'கல்கி' எழுதிய ஆசிரியவுரை

தமிழாகி விடும் என்பது டி.கே.சி. யின் கருத்து. 'டெலிபோன், ரயில், கார், சைக்கிள் போன்ற சொற்களைத் தமிழ் என்றே சமுதாயம்ஏற்றுக் கொண்டு விட்டது. அது போல தித்தானியம், கிரோமியம், யூரேனியம் போன்ற எண்ணற்ற விஞ்ஞானக் கலைச் சொற்களையும் தமிழ் என்றே ஏற்றுக் கொண்டு விடலாம்' என்பது டி. கே. சி. யின் முடிவு. ஆங்கில அக ராதியைப் பாருங்கள்; அநேகமாக ஒவ்வோர் ஆங்கில வார்த்தை யும் கிரேக்க அல்லது லத்தீன் மொழியிலிருந்து லேசான ஒலி மாற்றத்துடன் பெறப்பட்ட சொல்லாகவே இருக்கும். இது போலவே தமிழும் ஆங்கிலச் சொற்களை ஏற்று ஜெட் வேகத் தில் வளரலாம்;

இந்த விஷயத்தை டி.கே.சி. ராஜாஜி மட்டுமல்ல; அவர் களுக்கு முன்பாகவே மகாகவி பாரதியாரும் கூறி வழிகாட்டி யிருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது. (பாரதி நூல்கள் — கட்டுரைகள் பக்கம் 516–518) 'ஆங்கிலப் பாடநூல்களை வைத்துக் கொண்டு, ஆங்கிலக் கலைச் சொற்களையே பயன் படுத்தி, தமிழில் ஆசிரியர்கள் விஷயத்தை மாணவர்களுக்கு விளக்கிக் கூறி வந்தால், தமிழ், அந்தக் கலைச் சொற்களை அப்படி அப்படியே நாளடைவில் ஏற்றுக் கொண்டுவிடும்' என்ற ராஜாஜியின் கருத்தும் ஏற்கனவே பாரதி எழுதி வைத் துள்ள யோசனைதான்;

பாரத நாட்டில் உள்ள எல்லா மொழியினருமே இந்த யோசனையைக் கையாண்டால், எல்லா இந்திய மொழிகளும் வேகமாக வளம் பெறுவதுடன் அறிஞர்களிடையே விஞ்ஞானக் கருத்துப் பரிமாற்றம் எளிதாகிப் போகும். அவ்வாறே உலக அரங்கிலும், தேச ஒருமைப்பாடு, உலக ஒருமைப்பாடு ஆகியன அர்த்தமுள்ளவையாகும். தமிழில் படித்த மாணவன், பிற நாட்டுப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து மேற்படிப்புப் படிக்கும் போதும் சிரமமிராது. தமிழில் விஞ்ஞான நூல்கள், பாடப் புத்தகங்கள் எழுதுவது எளிதாகும். அவற்றைப் படித்துப் புரிந்து கொள்ளவும் முடியும்; அந்நிலையில்தான் தமிழை எண்ணி நாம் பெருமைப்படுவதில் அர்த்தமிருக்கும்'

ஆனால் நாமோ, இருமொழித் திட்டம் என்ற அடிப்படை யில் ஹிந்தியை ஒதுக்கி, சமஸ்கிருதத்தையும் கைவிட்டு, ஆங்கிலத்தின் தரத்தையும் குறைத்து, தமிழையும் தூய்மை காக்கிறோம் என்று கூறி, வளர விடாமல் அமுக்குகிறோம்;

**— நன்றி கல்கி**


***1989 செப்டம்பர் 24***

# பிழைத்திருத்தம்

| பக்கம் | பத்தி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 3 | என்றும் | எனினும் |
| 2 | 1 | கூற்றுச் சிரை | கூற்றுக் கிரை |
| 4 | 6 | 71% | 91% |
| 4 | 6 | 53% | 63% |
| 6 | 1 | தண்டணை | தண்டனை |
| 7 | 3 | உயர்ந்த | உயர்த்த |
| 8 | 1 | சென்ற | சென்று |
| 9 | 4 | மனதில் | மனத்தில் |
| 10 | 2 | கிறங்கி கலந்து | கிறங்கிக் கலந்து |
| 10 | 5 | எதிர் நீச்சம் | எதிர் நீச்சல் |
| 10 | 5 | தெஞ்சுரத்தோடு | நெஞ்சுரத்தோடு |
| 10 | 6 | நல்லுழைப்புத் | நல்லுழைப்பும் |
| 10 | 6 | கல்வியோடு | கல்வியொடு |
| 11 | 1 | அப்னுபுகிறோம் | அனுப்புகிறோம் |
| 11 | 2 | மூண்டெறியட்டும் | மூண்டெரியட்டும் |
| 11 | 3 | அடிக்கடிக் கேட்டு | அடிக்கடி கேட்டு |
| 11 | 5 | எல்லியல்தால் | எல்லையில்தான் |
| 11 | 5 | ஆனாலுப் | ஆனாலும் |
| 14 | 2 | என்றால் | என்றார் |
| 14 | 2 | வவுலியா | வவுனியா |
| 16 | 1 | அக்கரை | அக்கறை |
| 16 | 2 | எடுந்து | எடுத்து |
| 17 | 2 | அடிக்கடிச் | அடிக்கடி |
| 18 | 1 | வாலாபாத் | வாலாபாக் |
| 26 | 1 | whom | whome |
| 27 | 1 | திமிலங்கங்கள் | திமிங்கிலங்கள் |
| 31 | 4 | கொள்கையாக | கொள்கையுடன் |
| 32 | 2 | கோட்பாடாக் | கோட்பாடாகக் |
| 32 | 2 | விரித்தாடுகின்றது | விரித்தாடுகின்றன |
| 32 | 2 | தேசத்தில் | இத்தேசத்தில் |
| 33 | 6 | இலக்க | இலக்கு |
| 33 | 7 | சுறண்டல் | சுரண்டல் |
| 34 | 3 | எங்குச் | எங்குக் |
| 34 | 3 | துணையாக் | துணையாய்க் |
| 34 | 3 | ஏமாந்துப்போகும் | ஏமாந்துபோகும் |
| 34 | 6 | புலியை | புவியை |

| | | | |
|---|---|---|---|
| 34 | 6 | இன்கொன்றுமாக | இங்கொன்றுமாக |
| 35 | 6 | விரும்பிய | அரும்பிய |
| 36 | 1 | ஆக்கி | ஆட்சி |
| 36 | 1 | வெவியீடுகளும் | வெளியீடுகளும் |
| 36 | 5 | செல்வதானாலும் | செல்வதனாலும் |
| 37 | 2 | கருத்துக்களும் | கருத்துகளும் |
| 38 | 3 | பெருகி பிறகு | பெருகிய பிறகு |
| 39 | 7 | நீத்திறத்தார் | தீத்திறத்தார் |
| 41 | 5 | கடலுக்கு | கூடலுக்கு |
| 42 | 3 | கீரந்தனார் | கீரத்தனார் |
| 44 | 2 | கண்டதினால் | கண்டதனால் |
| 48 | 2 | தமிரும் | தமிழும் |
| 48 | 6 | சாடுகிறர் | சாடுகிறார் |
| 49 | 2 | கனித்தமிழ் | தனித்தமிழ் |
| 51 | 1 | ஆனல் | ஆனால் |
| 51 | 1 | மனமுருகுகிறர்கள் | மனமுருகுகிறார்கள் |
| 53 | 7 | பாரதிதாசன் | பாரதிதான் |
| 54 | 7 | 93 | 90 |
| 54 | 7 | 93 | 90 |
| 54 | 2 | மக்களாட்சி பண்।ும் | மக்களாட்சிப் பண்பும் |
| 56 | 4 | ரானடே | இரானடே |
| 57 | 1 | என்றதன் | என்றபின் |
| 57 | 3 | **erusade** | **crusade** |
| 57 | 5 | **drive** | **driven** |
| 58 | 2 | அத்தச் | எந்தச் |
| 58 | 3 | **man is to man** | **Man to man is** |
| 59 | 8 | உடமை | உடைமை |
| 60 | 2 | எங்கெலீசு | எங்கெல்சு |
| 60 | 2 | விளக்கிறார் | விளக்குகிறார் |
| 62 | 4 | **widdow** | **widow** |
| 65 | 3 | மோதி | மோதித் |
| 66 | 1 | என்பதனை | என்பதனையும் |
| 68 | 2 | காரணியம் | கரணியம் |
| 68 | 5 | அறிவிக்கு | அறிவுக்கு |
| 69 | 4 | ப்ரங்களே | வரங்களே |
| 70 | 4 | மணமளிக்கு | மணமளிக்கும் |
| 75 | 3 | மனம் | மணம் |
| 78 | 3 | பார்த்தால் | பார்த்தல் |
| 82 | 4 | மறவா | மறவர் |

| | | | |
|---|---|---|---|
| 83 | 4 | அந்நிலைச் | அந்நிலை |
| 88 | 3 | காரணியமாக | கரணியமாக |
| 95 | 4 | செயற்படுத்த | செயற்படுத்தப் |
| 96 | 1 | செயற்படுத்த | செயற்படுத்தப்பட |
| 96 | 3 | முன்றாம் | மூன்றாம் |
| 98 | 3 | தமிழிலேய் | தமிழிலேயே |
| 98 | 4 | அடிக்கடிக் | அடிக்கடி |
| 99 | 4 | நினைவூட்டுக்கள் | நினைவூட்டுகள் |
| 99 | 5 | கணக்கு | கணக்குத் |
| 100 | 4 | தெடர்புடைய | தொடர்புடைய |
| 100 | 7 | சட்டமே | கட்டமே |
| 102 | 1 | பிறப்பிக்கப்பட்டது | பிறப்பிக்கப்பட்டன |
| 102 | 1 | சொல்லாம் | சொல்லலாம் |
| 103 | 5 | நம் | தம் |
| 106 | 7 | உள்ளவர்கட்டு | உள்ளவர்கட்கு |
| 106 | 5 | உணர்த்து | உணர்ந்து |
| 106 | 6 | உணர்ந்து | உணர்ந்து செயற்பட்டால் |
| 108 | 2 | ஏற்பழிக்கோடல் | ஏற்புழிக்கோடல் |
| 113 | 1 | பெருமையைவிட | பெருமையைவிடப் |
| 114 | 4 | பரிமேழகர் | பரிமேலழகர் |
| 116 | 1 | ரகுல்சம்சுதாவ் | ரசூல்கம்சுதாவ் |
| 116 | 7 | மங்கு | மங்குல் |
| 118 | 1 | தேசம் | தேகம் |
| 118 | 7 | மாந்தமிழ் | மாத்தமிழ் |
| 120 | 3 | அருந்தமிழ் | அருந்தமிழில் |
| 121 | 3 | தீங்குற்ற | தீங்கற்ற |
| 122 | 2 | பொழிப்போரே | மொழிப்போரே |



முனைவர் மு. தமிழ்க்குடிமகன்,
எம்.ஏ., பிஎச்.டி.,

15—9—1938 இல் பசும் பொன் மாவட்டத்தில் பிறந்த இவர், திருச்சித் தூய வளனார் கல்லூரி, சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஆகியவற்றில் உயர்கல்வி பயின்றவர். மதுரை யாதவர் கல்லூரியில் பேராசிரியராகவும் கல்லூரி முதல்வராகவும் 20 ஆண்டுக் காலம் பணியாற்றியவர். தனித்தமிழ் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அது தொடர்பான பல்வேறு பணிகளைச் செய்தவர். பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகளை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். 12க்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். மனமாற்றம், கண்ணீர், அந்தமானைப் பாருங்கள் ஆகியவை பல்கலைக் கழகங்களில் பாடமாகஇடம் பெற்றவை.

தந்தை பெரியாரின் மீது ஈடுபாடு கொண்ட பகுத்தறிவுக் கொள்கையாளர்.

நாடறிந்த நல்ல பேச்சாளர். மலேசியாவில் உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கத் தலைமை பெர்லினில் உலகத் தமிழர் மாநாட்டுத் தலைமை என்ற பொறுப்புகளோடு பல வெளி நாடுகளுக்குச் சென்று வந்தவர்.

அறிவு, கைகாட்டி எனும் தனித்தமிழ் இதழ்களை நடத்தியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பான அரவணைப்பால் தமிழகச் சட்டப்பேரவையின் தலைவர் (Speaker) பொறுப்பேற்று இரண்டாண்டுகள் பாராட்டுக்குரிய முறையில் பணியாற்றியவர்.

— போரொலிப் பதிப்பகம்